கருணை இல்லம் கோகுலம்

ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம். பிள்ளைச் செல்வங்களின் பிறந்த நினம், தங்கள் நிருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு நினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இசசிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.

நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:

Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakrishna Temple.
A/C Name :ISKCON,Shitf Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mabola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk

Follow us:

வாரவெளியீடு

தமிழன்

THAMILAN

தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 144 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
(26.03.2023) ஹிஜ்ரி-1444, ரமழான் - 03, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8

விலை ரூ.130

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்

ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்

Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு -13, தொலைபேசி.-011-2433325
Fax:2471088, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk

'வெடி'மணியம்



"வீழ்ந்த நாட்டை மீட்க வந்த ஜனாதிபதியே வாழ்க" என்று கூவி "போல்ரர்" அடிச்சு ஒட்டி தன்னுடைய அரச விசுவாசத்தை காட்டியுள்ளார் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்.

யார் அந்த பாராளுமன்ற உறுப்பினர் என்று யோசிப்பியள்!

ரணிலின்ர கட்சி உறுப்பினரா?
இல்லை.

மஹிந்தவின்ர ஆளா?
இல்லை.

05 ஆம் பக்கம்

எரிபொருள் சேவைக்காக புதிய 3 கம்பனிகள்!

அமெரிக்க, அவுஸ்திரேலிய, சீன நிறுவனங்களுக்கு அரசு பச்சைக்கொடி

நாட்டின் எரிபொருள் துறையில் சேவைகளை வழங்க மூன்று புதிய நிறுவனங்களுக்கு அனுமதியளிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி அமெரிக்க, அவுஸ்திரேலிய, சீன நாடுகளின் நிறுவனங்களுக்கு அதற்கான அனுமதி கிடைக்கவுள்ளது. இது தொடர்பிலான விசேட அமைச்சரவைப்பத்திரமொன்று 27ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே லங்கா ஐ.ஓ.சி, சிபெட்கோ ஆகியன எரிபொருள் துறையில் சேவைகளை வழங்கி வருகின்றன.

புதிய வெளிநாட்டுக் கம்பனிகளை எரிபொருள் துறை சேவைகளில் அனுமதிக்கும்போது எரிபொருள் விலை கணிசமான அளவு குறையக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

எரிபொருள் விவகாரத்தால் சீன நிறுவனத்துடன் சிக்கல்

நா.தினுஷா

இறக்குமதி செய்யப்படும் எரிபொருளை களஞ்சியப்படுத்தி விநியோகிப்பதற்காக ஹம்பாந்தோட்டை மாக்புர துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆறு எரிபொருள் தாங்கிகளை சீனாவின் சினோபெக் நிறுவனத்துக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கம்

தேர்தலுக்கு பணம் வழங்குவீரா இல்லையா?

சஜித் சபையில் கிடுக்குப்பிடி

02 பக்கம்

எம்.பி. பதவியில் இருந்து ராகுல் காந்தி தகுதி நீக்கம்

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எம்.பியை மக்களவை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கம் செய்து மக்களவை செயலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

02 ஆம் பக்கம்

நீதிமன்ற சுயாதீனத்தன்மை மீறான இடையூறுகள் மற்றும் அழுத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வெள்ளிக்கிழமை (24) புதுக்கடை நீதிமன்ற வளாகம் முன்பாக சட்டத்தரணிகள் மகா சபையினால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

FRANCE இல் பொறியியல் கல்வி

ESIGELEC

AIC CAMPUS

O/L மற்றும் A/L மாணவர்களுக்கு (வயது எல்லை 16-22)

France இல் புகழ் பெற்ற பல்கலைக்கழக பட்டப்படிப்பு திட்டத்தில் இணையுங்கள்

- IELTS தேவையில்லை
- செப்டெம்பர் 2023 அனுமதி
- பிரான்சில் தொழில் வாய்ப்பு

ஏப்ரல் 8ம் திகதி காலை 11 மணி முதல் மதியம் 12.30 மணி வரை

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்

076 923 3411 | 077 133 5511

மாகாண சபை, உள்ளூராட்சித் தேர்தல்கள் அவசியம்; பெருந்தோட்டப் பிரிவினருக்கு நிவாரணம் தேவை!

சர்வதேச சமூகத்துக்கு மனோ தெரிவிப்பு

உள்ளூராட்சி, மாகாண சபைத் தேர்தல்கள் இரண்டும் எமக்கு சமமாக அவசியம். சர்வதேச நிதி உதவிகள் மூலமான "வறுமை நிவாரணங்கள்" பெருந்தோட்டப் பிரிவினருக்கு வழங்கப்படுவது அவசியம். இலங்கை அரசுக்கும்...

02 ஆம் பக்கம்

போலியான கருத்துகளை பரப்பி மக்களை தவறாக வழிநடத்தாதீர்!

அமைச்சர் ஜீவன் கோரிக்கை

பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு...

02 ஆம் பக்கம்

அழகு கெட்டுவிடுமென்பதால் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்ட மறுத்த தாயார்

யாழில் நடந்த சம்பவம்

தனது அழகு கெட்டுவிடும் என தெரிவித்து பிள்ளைக்கு தாய்ப்பாலூட்டாமல் விட்ட இளம் தாயொருவர் பற்றிய தகவல் வெளியாகியுள்ளது. வடமராட்சி பகுதியிலுள்ள வைத்தியசாலையொன்றில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

02 ஆம் பக்கம்

SLTMOBITEL mAgent
வீட்டுக்கே இணைப்பு

நீங்கள் நாட்டில் எங்கிருந்தாலும் உங்கள் அனைத்து SLT-MOBITEL FIXED மற்றும் MOBILE தேவைகளுக்கு துரிதமாக உதவிடுவோம்.

உங்கள் பிரதேச mAgentஐ 1717 ஊடாக தொடர்புகொள்ளுங்கள்.

SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

www.sltmobitel.lk

நீண்ட காலமாக புத்தளம் மாவட்ட கல்விக் காரியாலயத்தில் கடமையாற்றிய பின்னர், சிலாபம் கல்விக் காரியாலயத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற டபிள்யூ.பி.எஸ்.கே.விஜேசிங்கவுக்கு சேவை நலன் பாராட்டுவிழா நிகழ்வொன்று ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் வியாழக்கிழமை (23) இடம்பெற்றது. (உடப்பு செய்தியாளர்)

கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியின் அதிபராக கடமையாற்றி ஓய்வுபெறும் ஏ.கே.ரி.அதஹான் மற்றும் பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு செரன்டிப் கிரான்ட் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (அஷ்ரப் ஏ சமத்)

வவுனியாவில் காசநோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு பேரணி, வவுனியா மாவட்ட வைத்தியசாலை காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை(24) இடம்பெற்றிருந்தது. (வவுனியா நிருபர்)

முஹம்மதிய்யா ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு

(மத்திய முகாம் செய்தியாளர்)

கல்முனை, மத்தியமுகாம் முஹம்மதிய்யா ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இப்தார் நிகழ்வும் விசேட துஆப் பிரார்த்தனையும் வெள்ளிக்கிழமை(24) இடம்பெற்றது. இது ரமழான் மாதத்தின் முதலாவது இப்தார் நிகழ்வாகும். இதன்போது விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மத்திய முகாமைச் சேர்ந்த வெளிநாடுகளில் வசிக்கும் சகோதரர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ் இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் பிரதேசத்தில் மரணித்த உறவுகளின் மறுமை வாழ்வுக்காகவும், பிரதேசத்தின் நல ஒற்றுமைக்காகவும், வெளிநாட்டில் தொழில் நிமித்தமாக சென்ற சகோதரர்களின் ஆரோக்கியத்திற்காகவும் வேண்டி விசேட துஆப் பிரார்த்தனை இடம்பெற்றது.

அஷ்-ஷெய்க் அல்-ஹாபீல் மௌலவி எம்.எச்.நஜ்முதீன் ஹாமி இவ் துஆப் பிரார்த்தனையை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பெரிய பள்ளிவாசல் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மாகாண சபை,...

சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் உடன்படிக்கை ஏற்பட்டமை தொடர்பில் நான் மகிழ்கிறேன். அதற்கு மிகுந்த ஒத்துழைப்புகளை வழங்கிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள், என எதிரணி எம்.பிக்கள், பன்னாட்டு தூதுவர்களுடன் நடத்திய சந்திப்பின்போது தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஏற்பாட்டில் எதிரணி எம்.பிக்கள், இலங்கையிலிருந்து செயற்படும் அமெரிக்க, இந்திய, பிரிட்டன், ஜப்பான், கனடா, பிரான்ஸ், நியூசிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், இத்தாலி நாட்டு தூதரக பிரதிநிதிகளை சந்தித்து உரையாடியபோது மனோ எம்.பி. இந்த கருத்துகளை வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் மனோ எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கை அரசுக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் உடன்படிக்கை ஏற்பட்டமை தொடர்பில் நான் மகிழ்கிறேன். அதற்கு மிகுந்த ஒத்துழைப்புகளை வழங்கிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பிற்போடப்பட்டமை தொடர்பில் இங்கே உரையாடப்பட்டபோது, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் பற்றி கேள்வி எழுப்பியமையை நான் வரவேற்கிறேன். அதேபோல் இந்திய பிரதி தூதுவரும் தமது நாட்டின் நிரந்தர நிலைப்பாடாக மாகாண சபை தேர்தல் இருக்கின்றது எனக்கூறினார். அதையிட்டும் மகிழ்கிறேன். உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் இரண்டும் நடத்தப்பட இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். உள்ளூராட்சித் தேர்தல் எவ்வளவு முக்கியமோ, அதேயளவு ஒன்பது மாகாண சபைகளுக்குமான தேர்தலும் முக்கியம், என்பது எங்கள் கட்சியின் உறுதியான நிலைப்பாடு.

அதேபோல் இலங்கை அரசுக்கு வழங்கப்படும் சர்வதேச நிதி உதவிகள் மூலமான "வறுமை நிவாரணங்கள்" பெருந்தோட்டப் பிரிவினருக்கு கட்டாயமாக வழங்கப்படுவதை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும். ஏனென்றால், இப்போது நலிவடைந்த பிரிவினரை அடையாளம் காணும் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுகின்றது. அதில் நிறைய அரசியல் கலந்துள்ளது. ஆகவே, அதன் மீது எமக்கு நம்பிக்கை இல்லை. இந்நாட்டில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக, பெருந்தோட்ட உழைக்கும் மக்கள் உள்ளனர் என்பதை இன்று பல கணிப்பீடுகள் கூறுகின்றன. ஆகவே உங்களது உதவிகளினால் வழங்கப்படும் வறுமை நிவாரணக் கொடுப்பனவுகள், பெருந்தோட்டத்துறைக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.

அழகு கெட்டுவிடுமென்பதால்...

ஒரு வயதான பிள்ளையை வைத்தியசாலை விடுதியில் சிகிச்சைக்காக அனுமதித்த இளம் தாயொருவர், பிள்ளையுடன் தங்கியிருந்துள்ளார்.

அந்த சமயத்தில் பிள்ளை அழும் சமயங்களில், தனது விரலை குழந்தையின் வாயில் வைத்தபடியிருந்தார். இதை அவதானித்த தாதியொருவர், தாய்ப்பாலூட்டாமல், ஏன் விரலை வைத்திருக்கிறீர்கள் என வினவியுள்ளார்.

குழந்தைக்கு சில மாதங்கள் மட்டுமே தாய்ப்பாலூட்டியதாகவும், பின்னர் புட்டிப்பால் பருக்கி வருவதாகவும் தெரிவித்த இளம் தாயார், தனது அழகு கெட்டு விடும் என்பதால் அவ்வாறு செயற்படுவதாக தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு பணம்...

தேர்தலுக்கு பணம் வழங்குகிறீர்களா, இல்லையா? என ஒரு வார்த்தையில் பதிலளிக்குமாறு, பிரதமர் தினேஷ் குணவர்தனவை கிடுக்குப்பிடி பிடித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

வெள்ளிக்கிழமை(24)இடம்பெற்ற பாராளுமன்ற விவாதத்தின் போது இந்த சம்பவம் நடந்தது. 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த 10 பில்லியனை தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கி தேர்தலை நடத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, இதுபற்றி உயர் நீதிமன்றத்தில் பல வழக்குகள் நடந்து வருகின்றன. திறைசேரி செயலர் உயர் நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்துள்ளார். அந்த முடிவுகளின் நடவடிக்கைகளுக்கு ஏற்ப நாங்கள் செயல்படுகிறோம். நீதிமன்றத்தில் உள்ள விஷயங்களைப் பேசுவதில்லை. நீதிமன்றம் சென்றது நாங்கள் அல்ல என்றார்.

எரிபொருள்...

இந்நிலையில், இதற்கு முன்னரே அந்த எரிபொருள் தாங்கிகளில் எரிபொருள் கூட்டுத்தாபனத்தினால் 20 ஆயிரம் மெற்றிக்தொன்னுக்கும் அதிகமான டீசல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த எரிபொருள் தாங்கிகள் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அதன் களஞ்சிய தரத்தை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காகவும், தாங்கும் திறனை அவதானிப்பதற்காகவும் ஏற்கனவே இந்த டீசல் தொகை நிரப்பப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அங்கு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த டீசல் தொகையை மீள பெற்றுக்கொள்வதற்காக எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் துறைமுகத்துக்குச் சென்றபோது, அந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது.

இதனால் இந்த எரிபொருள் தாங்கிகளில் இருக்கும் டீசல் தொகையுடன், மேற்குறிப்பிட்டது போன்று சினோபெக் நிறுவனத்துக்கு வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாங்கிகளில் 200 இலட்சம் லீற்றருக்கும் அதிக தொகை டீசல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த டீசல் தொகையின் சந்தை பெறுமதி 960 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமென எரிபொருள் கூட்டுத்தாபன தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இந்த டீசல் தொகை நாட்டின் நாளாந்த டீசல் தேவைக்கு ஏற்ப, எட்டு நாட்களுக்கு போதுமான டீசல் தொகை அந்த களஞ்சியத்தில் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Steuart
அத் குணய
அம்மாவின் சமையல் கைமணத்தை இன்னும் தேடுகிறீர்களா?
EST 1835 GS &Co BELIEVE

காரமும் சுவையும் கூடிய உங்கள் உணவு வேளைக்கு அசல் கைப்பக்குவத்தைச் சேர்க்கும் இலங்கையின் மசாலா சேர்மானங்கள்
அறிமுகமாகும் அத்குணய மசாலா

எம்.பி. பதவியில்...

மோடி பெயர் குறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியது. இது தொடர்பாக குஜராத் மாநிலம் சூரத் நீதிமன்றில் ராகுலுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. சூரத் நீதிமன்று விசாரணை நடத்தி வெள்ளிக்கிழமை(24) இந்த வழக்கின் தீர்ப்பை வெளியிட்டது. ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி அறிவித்தார்.

இதையடுத்து, ராகுல் எம்.பி. பதவி தொடர்பாக மத்திய அரசின் மூத்த அதிகாரிகள் சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசித்தனர். எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் குற்ற வழக்குகளில் 2 அல்லது 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றால் அவர்களது பதவியை பறிக்க மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் இடம் உள்ளது. மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951இல் பிரிவு 8 (3)இன்படி 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெறும் மக்கள் பிரதிநிதிகள் உடனடியாக பதவி இழப்பார்கள் என்று வகுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எம்.பி. பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்து மக்களவை செயலகம் உத்தரவிட்டுள்ளது. மக்களவை உறுப்பினர் பதவியை பறித்து மக்களவை செயலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

போலியான கருத்துகளை...

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றம் வெள்ளிக்கிழமை (24) முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

பிரதான சபை நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், சர்வதேச நாணய நிதியம் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான 2ஆம் நாள் விவாதம் ஆரம்பமானது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் கிடைக்காது, எரிபொருள் பிரச்சினை தீராது, மின்சாரப் பிரச்சினை தீராது என்றெல்லாம் எதிரணிகள் விமர்சனங்களை முன்வைத்து வந்த நிலையில், இவற்றுக்கு ஜனாதிபதி தீர்வை பெற்றுக்கொடுத்துள்ளார். அன்று நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலைமையை சீர்படுத்தியுள்ளார். எனவே, மக்கள் மத்தியில் போலியான கருத்துகளை பரப்பி, மக்களை தவறாக வழிநடத்துவதற்கு முற்படக்கூடாது.

மக்கள் மத்தியில் பொய்யுரைக்கப்பட்டு, அரசியல் ரீதியில் கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட சில முடிவுகளும் பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு காரணம். கடந்த காலங்களில் நடந்த தவறை ஜனாதிபதி தற்போது சீர்செய்துள்ளார். உண்மை நிலை என்னவென்பது குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தப்படுகின்றது.

சமுர்த்தி மற்றும் நலன்புரி கொடுப்பனவின்போது மலையக மக்களுக்கு பாகுபாடு காட்டப்பட்டது. எதற்கு சமுர்த்தி என சில அதிகாரிகள்கூட கேட்கும் நிலை இருந்தது. ஆனால், புதிய முறைமையின் கீழ் அத்திட்டம் உரிய முறைமையில் முன்னெடுக்கப்படும் என நம்புகின்றோம். சிறந்த பொருளாதாரம் நிலவ வேண்டுமெனில் மத்திய வங்கி சுயாதீனமாக இயங்க வேண்டும்.

பொருளாதார மறுசீரமைப்போடு சமூக மறுசீரமைப்பும் இடம்பெறுதல் அவசியம். ஏனெனில், சமூக மறுசீரமைப்பின்றி, பொருளாதார மறுசீரமைப்பை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது. இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடாகும். அனைத்து இன மக்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உலகம் முன்னோக்கி செல்லும்போது நாம் ஏன் பின்னிலையில் இருக்கின்றோம் என சிந்திக்க வேண்டும்.

பாலின சமத்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் 50 வீத பெண் எம்.பிக்கள் இருக்கின்றனர். எமது நாட்டில் 52 வீதமானோர் பெண்கள். ஆனால் 5 வீதமே பெண் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இருக்கின்றது. எனவே, பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணைக்கு எமது கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் " - என்றார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2023.03.23
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத	சீட்டிழுப்பு இலக்கம்	அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
	5068	ரூ. 22,341,944.00
ஆங்கில எழுத்து: C	வெற்றி இலக்கங்கள்:	8 6 9 2 5 4

கொவிசெத	சீட்டிழுப்பு இலக்கம்	அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
	3310	ரூ. 89,537,294.80
ஆங்கில எழுத்து: I	வெற்றி இலக்கங்கள்:	02 17 49 69

ஜாதிக சம்பத	சீட்டிழுப்பு இலக்கம்	அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
	1523	ரூ. 11,137,385.20
வெற்றி இலக்கினம்: சிம்மம்	வெற்றி இலக்கங்கள்:	4 6 0 1 4 5

தன நிதானய	சீட்டிழுப்பு இலக்கம்	அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
	1098	ரூ. 82,714,269.60
ஆங்கில எழுத்து: K	வெற்றி இலக்கங்கள்:	04 45 54 65

ராசிசப பலன் Handahana	சீட்டிழுப்பு இலக்கம்	அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
	377	ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம்: கும்பம்	வெற்றி இலக்கங்கள்: 11 15 16 17	விசேட இலக்கினம்: கும்பம்

மெகா பவர்	சீட்டிழுப்பு இலக்கம்	அடுத்த மெகா சுப்பர் பரிசு
	1416	ரூ. 309,802,138.00
ஆங்கில எழுத்து: U; சுப்பர் இலக்கம்: 20	வெற்றி இலக்கங்கள்: 04 29 40 72	அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

17 மாணவர்களின் தலைமுடியை வெட்டி பரீட்சைக்கு தோற்ற முடியாது வெளியேற்றம்

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணை

கம்பளை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 17 மாணவர்களின் தலைமுடியை வெட்டி, பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்காமல் அவர்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவ்வருடம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் குழுவொன்றே இச்சம்பவத்துக்கு முகம் கொடுத்துள்ளது.

22ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியளவில் பருவத்தேர்வு தொழில்நுட்ப பாடத்தாளுக்கான விடைகளை எழுதும் முன்னர் பாடசாலை அதிபர், பிரதி அதிபர் ஆகியோர் மாணவர்களின் தலைமுடி நீளமாக வளர்ந்துள்ளதால் தலைமுடியை வெட்ட நடவடிக்கை எடுத்தனர்.

தலைமுடியை வெட்டிய பின்னர் அந்த மாணவர்கள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படாமல் பாடசாலையிலிருந்து வெளியேற்றப் பட்டனர்.

நலிவுற்ற பெண்களுக்காக ஜப்பான் அரசு இலங்கைக்கு ரூ.1.6 மில். அமெ.டொலர்

ஐ.நா. பெண்கள் அமைப்பினூடாக வழங்கிவைப்பு

இலங்கையில் சமூக பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மனிதாபிமான உதவிக்காக ஜப்பான் அரசாங்கம் 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐ.நா. பெண்கள் அமைப்பின் ஊடாக இலங்கைக்கு வழங்கியது.

இந்த நிதியானது, "நெருக்கடியில் உள்ள பெண்களை வலுவூட்டல்" என்ற புதிய செயற்றிட்டத்தின் ஒரு பகுதியெனபதுடன், இது பெப்ரவரி 2023 முதல் டிசம்பர் 2023 வரை செயற்படுவதுடன், இது பாலின மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை எதிர்கொண்ட குறைந்தது 1,200 பெண்கள் உட்பட அவர்களின் குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும். இது வீழ்ச்சியடையும் அபாயத்தில் உள்ள 500 பெண்கள் தலைமையிலான நுண் நிறுவனங்களுக்கும், வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டின் அபாயத்தில் உள்ள 2ஆயிரம் நபர்களுக்கும் மேலும் ஆதரவளிக்கும்.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவரான எச்.ஈ. மிசுகோசி ஹிடேகி (H.E. MIZUKOSHI Hideaki) வலியுறுத்துகையில், "தற்போழுள்ள நெருக்கடிக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் பதிலளிப்பு மற்றும் மீட்பு முயற்சிகளில் பின்தள்ளிவிடப்படாமல் இருப்பதை உறுதி செய்வதுடன் இந்த நேரத்தில் அவர்களின் பாதுகாப்பு மற்றும் பற்றோடுதிறிற்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்வதே எங்கள் இலக்காகும்" என்றார்.

பாலின மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை சம்பவங்களின் தொடர்ச்சியான அதிகரிப்பை களமட்டத்திலுள்ள அறிக்கைகள் பிரதிபலிக்கின்ற நிலையில், தற்போதைய நெருக்கடி மற்றும் பொருளாதார வீழ்ச்சிமிக்க சூழ்நிலை பாதுகாப்பான வீடுகள் மற்றும் தங்குமிடங்கள் போன்ற அரச சேவைகளை அணுகுவதைத் தடுப்பதுடன், இதன் விளைவாக பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு பேரழிவுகரமான தாக்கங்கள் ஏற்படுகின்றன.

இந்த செயற்றிட்டத்தின் மூலம், உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை தொடர்ந்து அணுகக்கூடிய பாதுகாப்பான வீடுகளை ஐ.நா. பெண்கள் அமைப்பினர் வழங்குவார்கள். மேலதிகமாக, இது வகுகின் மேம்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்ட தங்குமிடங்கள் மற்றும் பாதுகாப்பான வீடுகள் போதிய நிதி மற்றும் ஆதரவின்மை காரணமாக மூடப்படுவதைக் காட்டிலும் தொடர்ந்து செயற்படுவதை உறுதிசெய்யும். இது துஷ்பிரயோக சூழ்நிலையில் இருந்து தப்பிச் செல்லும் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு அதிக பாதுகாப்பான தங்குமிடங்கள் கிடைப்பதை உறுதி செய்யும்.

மேலும், சாத்தியமான வேலை வாய்ப்புகளுக்கான அணுகலின் பற்றாக்குறையாலும் உணவுப் பணவீக்கம் அதிகரித்து வருவதாலும், குடும்பங்கள், குறிப்பாக ஏற்கனவே பாதிக்கப்பட்டகூடிய மற்றும் நலிவுற்ற குடும்பங்கள் அவர்களின் உயிர்வாழ்வதற்கான அடிப்படை உணவு மற்றும் தேவைகளை அணுகுவதை உறுதிசெய்ய வேண்டிய அவசரத் தேவை உள்ளது.

"பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் அவசரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு ஜப்பான் அரசாங்கம் வழங்கிய பங்களிப்பிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்" என்று ஐ.நா. பெண்கள் அமைப்பின் அலுவலகத் தலைவரான பிரஷாளி டயல் தெரிவித்தார். "இது பாதிக்கப்படக்கூடிய பெண்களுக்கு வருமானம் ஈட்டும் வளங்களையும் உயிர்களுக்கும் ஆதரவையும் வழங்குவதுடன், நாட்டில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் நிலை மேலும் பின்தள்ளப்படாமல் இருப்பதை உறுதி செய்யும்" என்றார்.

தேசிய ஆசிரிய இடமாற்ற சபைக் கலைப்பு ஜனநாயகத்துக்கு விரோதமானது

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

தேசிய ஆசிரிய இடமாற்ற சபையைக் கலைத்தமை ஜனநாயகத்திற்கு விரோதமானது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது,

தேசிய ரீதியில் நடைபெறுகின்ற ஆசிரிய இடமாற்றங்களில் பல்வேறு குறைபாடுகள், மோசடிகள் நடைபெறுவது தொடர்பில் கடந்த காலங்களில் நாம் கல்வி அமைச்சிடம் முறைப்பாடுகளை முன்வைத்திருந்தோம். அவை எவற்றிற்குமே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கைக்கு மாறாக ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறுவதும், அதைக் கருப்பொருளாக வைத்து பலர் இலஞ்சம் பெறுவதும் அதிகரித்துள்ளது.

சிலர் இதன்மூலம் இலட்சக்கணக்கான பணத்தை ஆசிரியர்களிடம் பெற்றுள்ளமையை எம்மால் நிரூபிக்க முடியும். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் எந்தவொரு சபை உறுப்பினரும் இலஞ்சம் பெற்றதற்கான ஆதாரம் இருக்குமானால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கையை முதலில் நாம் எடுப்போம்.

ஆனால், எமது சங்கத்தில் அதுபோன்ற இலஞ்சம் பெறும் உறுப்பினர்கள் எவரும் இல்லை என்பதனை உறுதியாக உரைக்க முடியும். இதுபோன்ற இலஞ்சம் பெறும் குற்றவாளிகளைக் கட்டுப்படுத்துவதை விட்டுவிட்டு இடமாற்ற சபையைக் கலைப்பது ஜனநாயகத்திற்கு விரோதமானது.

இதனால் பாதிக்கப்படுவது ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவர்களுமே. தயவு செய்து தாங்கள் எடுத்துள்ள முடிவை மாற்றி ஆசிரிய இடமாற்ற சபையானது சுயாதீனமாகவும் தூய்மையாகவும் நடைபெற ஆவன செய்யுங்கள். கல்வியில் இடையூறுகள் ஏற்படுவது மாணவர்களை மட்டுமல்லாது ஆசிரியர்களின் மனங்களையும் புண்படுத்தும் - என தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒரு கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகளுடன் ஐவர் கைது

சிலாபம் இரணைவில பிரதேசத்தில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது ஒரு கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

பயணிக்க தயாராகி நின்ற லொறியொன்றினை சோதனைக்குட்படுத்தியபோது சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த 633 கிலோ 650 கிராம் பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதன்போது பீடி இலைகளை கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு டிங்கி படகுகள், இரண்டு லொறிகள், ஒரு கார், ஒரு மோட்டார் சைக்கிள் ஆகியவை கைப்பற்றப்பட்டதோடு ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பீடி இலைகள் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகோதரியின் 5 பவுண் நகையை திருடி மோட்டார்சைக்கிள் வாங்கிய சகோதரன்

பொலிஸ் விசாரணையில் சிக்கினார்

சகோதரியின் 05 பவுண் நகையை திருடி, அதனை அடகு வைத்து மோட்டார் சைக்கிள், கைதொலைபேசி வாங்கிய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

பெண்ணொருவர் வீட்டில் இருந்த தனது 05 பவுண் நகை களவு போயுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் முறைப்பாட்டாளரான பெண்ணின் சகோதரனை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த நபர் போதைப்பொருளுக்கு அடிமையாகி சிறைத்தண்டனை அனுபவித்து, தற்போது விடுதலையாகியுள்ளவர் எனவும், அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நகையை திருடி அடகு வைத்து, அந்தப் பணத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் வைபர் தொலைபேசி என்பவற்றை வாங்கியதாகவும் வாக்குமூலம் அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பங்குனி உத்தர தேர்த்திருவிழா

(கலஹா செய்தியாளர்)

கம்பளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தர மஹோற்சவ தேர்த்திருவிழா நிகழ்வுகள் இன்று 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கணபதி ஹோமம் வாஸ்து சாந்தி நடைபெற்று, மகாவலி கங்கையில் கரகம் பாலித்தலுடன் ஆரம்பமாகி எதிர்வரும் ஏப்ரல் 07ஆம் திகதியுடன் நிறைவுபெறும்.

நிகழ்வில் 04ஆம் திகதி (04.04.2023) செவ்வாய்க்கிழமை விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அம்பாள் வெளி வீதி உலாவந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். 05ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் 06ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர் பூஜைகளுடன் திருவிழா நிறைவுபெறும்.

திருவிழா நடைபெறும் நாட்களில் தினமும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளதுடன், முளைப்பாலிகை ஊர்வலத்தில் கலந்து கொள்ளவிரும்பும் பிள்ளைகளின் பெயர்களை பெற்றோர் பதிவுசெய்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

ஊவா பரணகமவில் கட்டில் தடுப்பில் சிக்கி ஏழு மாத கைக்குழந்தை உயிரிழப்பு

ஊவா பரணகம, மஸ்பன்ன பகுதியில் கட்டிலை சுற்றி பொருத்தப்பட்டிருந்த தடுப்பில் சிக்கி ஏழு மாத பெண் குழந்தை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஸ்பன்ன வெலேக்கடே பகுதியில் வசித்து வந்த ஹர்ஷனி மதுஷிகா என்ற ஏழு மாத பெண் குழந்தையே படுக்கையிலிருந்து தவறி வீழ்ந்து தடுப்பில் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த குழந்தையின் தாய் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தவேளை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. வேலைகளை முடித்துவிட்டு உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை வந்து பார்த்தபோது, கட்டிலைச் சுற்றியிருந்த தடுப்பில் மாட்டிக்கொண்டிருப்பதைக் கண்டுள்ளார்.

உடனடியாக குழந்தையை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும், குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊவா பரணகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பிரிட்டிஷ் கவுன்சிலின்
IELTS உடன் உங்கள்
பயணங்களை
மேற்கொள்ளுங்கள்

- வெளிநாட்டில் பயிலவும், வேலை செய்யவும் மற்றும் வாழவும் IELTS துணை புரிகிறது.
- 140 நாடுகளில் 11,000 க்கும் மேற்பட்ட அரசாங்கங்கள், கல்வி நிறுவனங்கள் உள்ளடங்கலாக அமெரிக்காவில் 3,000 தொழில் வழங்குநர்களால் IELTS ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
- கணினி அல்லது தாளில் என நீங்கள் விரும்பும் பரீட்சை வடிவமைப்பைத் தேர்வுசெய்யும் வசதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

கொழும்பு
யாழ்ப்பாணம்
மட்டக்களப்பு
கண்டி
நீர்கொழும்பு
மாலபே
மாத்தறை
கம்பஹா
குருநாகல்

தொடர்பு கொள்ளுங்கள்:
+94 (0) 117 521 521
info.lk@britishcouncil.org

BRITISH COUNCIL IELTS

விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க இதுவரை 27 மெற்றிக்தொன் TSP உரம் பகிர்ந்தளிப்பு

ஏப்ரல் 10க்குள் விநியோகித்து முடிக்கவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவிப்பு

விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் உள்ள விவசாய சேவை மத்திய நிலையங்களுக்கு 27 ஆயிரம் மெற்றிக்தொன் TSP உரம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவியுடன் இலங்கைக்கு கிடைத்த 36 ஆயிரம் மெற்றிக்தொன் உரத்தையே விவசாய அமைச்சு பகிர்ந்தளித்துள்ளது.

இதேவேளை, கொமர்ஷல் உரக் கம்பனி மற்றும் சிலோன் உரக் கம்பனி இணைந்து TSP உர விநியோகம் தொடர்பான அறிக்கையை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் வழங்கியதாக வர்த்தக உர நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஜகத் பெரேரா தெரிவித்தார்.

இந்நிலையில், கொமர்ஷல் உரக் கம்பனியால் வழங்கப்பட தீர்மானித்த 15 ஆயிரம் மெற்றிக்தொன் TSP உரத்தில் 14 மெற்றிக்தொன் உரம் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் ஜகத் பெரேரா தெரிவித்தார்.

இலங்கை உரக் கம்பனியால் விநியோகிக்கப்படவுள்ள 21,000 மெற்றிக்தொன் TSP உர விநியோகத்தை எதிர்வரும் புதன்கிழமைக்குள் நிறைவுசெய்ய இலங்கை உர நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

கூறல அபிவிருத்தி திணைக்களம் எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதிக்குள் நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இந்த முழு TSP உரத்தையும் இலவசமாக விநியோகித்து முடிக்கத் திட்டமிட்டுள்ளது.

கூந்த வெள்ளிக்கிழமை வரை 25 மாவட்டங்களிலும் மொத்தம் 82ஆயிரத்து 519 விவசாயிகள் 2ஆயிரத்து 419 மெற்றிக்தொன் TSP உரத்தை விவசாய சேவை நிலையங்களில் இருந்து பெற்றுக்கொண்டுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் மார்ச் 20 முதல் 11ஆயிரத்து 537 மெற்றிக்தொன் TSP உரம் விநியோகிக்கப்பட்டது.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்திற்கு ஆயிரத்து 244 மெற்றிக் தொன், வவுனியா மாவட்டத்திற்கு 821 மெற்றிக்தொன், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 820 மெற்றிக்தொன், முல்லைத்தீவுக்கு 694 மெற்றிக் தொன், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 297 மெற்றிக்தொன், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஆயிரத்து 824 மெற்றிக் தொன், அம்பாறை மாவட்டத்திற்கு 4ஆயிரத்து 66 மெற்றிக்தொன், திருகோணமலை மாவட்டத்திற்கு ஆயிரத்து 746 மெற்றிக்தொன் உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 26, 2023

தமிழரின் எண்ணக்கிடக்கை!

தமிழ் தேசமான ஈழத்தை சுய ஆட்சி இன்னமும் கிடைக்கப்பெறாத பகுதியாக அங்கீகரிக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள் விடுத்துள்ளமை எமது கவனத்தை ஈர்த்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஆற்றிய உரையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்

தமிழ் தேசமான ஈழத்தை சுய ஆட்சி இன்னமும் கிடைக்கப்பெறாத பகுதியாக அங்கீகரிக்குமாறும் இந்த அவையின் அங்கத்துவ நாடுகளிடம் கோருகிறோம்.

இலங்கையில் ஆயுத மோதல் முடிவிற்கு வந்து 13 ஆண்டுகள் ஆகியிருக்கும் இந்நிலையில், இலங்கையின் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் சிங்கள பௌத்தமயமாக்கல் பெரும் வேகமெடுத்துள்ளது.

இலங்கையின் நீதிமன்றக் கட்டளையை மீறி தமிழரின் தொன்மையான வழிபாட்டிடமான குருந்தூர் மலையானது அழிக்கப்பட்டு அங்கு ஒரு பௌத்த விகாரை கட்டப்பட்டிருக்கிறது.

இப்படியாக தமிழர் தாயகமெங்கிலும் குறிப்பாக, சிங்களவர்கள் பௌத்தர்கள் இயல்பாக குடியிருக்காத பகுதிகளில் கூட பௌத்த மத ஆலயங்கள் இலங்கை அரச இயந்திரத்தின் துணையுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

நாயாறு, தையிட்டி, நாவற்குழி, மாங்குளம் சந்தி, கச்சல், சமளங்குளம், கன்னியா வெந்நீரூற்று என்பன இவ்வாறு தமிழர் தாயக நிலத்தில் பௌத்த ஆலயங்கள் அமைக்கப்பட்டுவரும் சில இடங்களாகும்.

இவற்றுள் பெரும்பாலானவை இலங்கை அரச ஆதரவோடு தமது அரசின் நீதிமன்றக் கட்டளைகளை தாமே மதிக்காது உதாசீனப்படுத்தி கட்டமைக்கப்பட்டுவரும் ஆலயங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு சில இடங்களில் இந்த சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த ஆலயங்களைச் சூழ இருக்கும் பகுதிகளில் தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை திட்டமிட்டு மாற்றியமைக்கும் முனைப்போடு அரச ஆதரவுடன் சிங்களக் குடியேற்றத் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு மற்றும் மாதவனை மேய்ச்சல் நிலங்களில் தமிழர்கள் காலங்காலமாக 3,00,000இற்கும் மேற்பட்ட கால்நடைகளுடன் மேய்ச்சலுக்குப் பயன்படுத்திவரும் நிலையில், நீதிமன்ற உத்தரவை மீறி அங்கு சட்டவிரோதமான முறையில் ஸ்ரீலங்கா அரச ஆதரவோடு சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவரும் சிங்களவர்களால் தமிழர்கள் மேய்ச்சல் நிலங்களிலிருந்து துரத்தப்படுகின்றனர்.

உண்மையில் இந்தத் தமிழர்களின் பாரம்பரிய - புராதன அடையாள நிலமானது சிங்கள பௌத்தமயமாக்கலுக்கான பகுதியாக ஸ்ரீலங்கா அரசினால் குறிவைக்கப்பட்டு அங்கு இனப்பரம்பல் மாற்றப்பட்டு வருகிறது.

மாதுரு ஓயா வலதுகரை அபிவிருத்தித் திட்டம் எனும் பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டமானது, அந்தப் பகுதியில் இருக்கும் தமிழர்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டு சிங்களவர்களைக் குடியேற்றி இனப்பரம்பலை மாற்றவே அரசினால் பயன்படுத்தப்படுகிறது.

புராதன தமிழ் சைவ வழிப்பாட்டிடமான வெடுக்குநாறி மலையினை பௌத்த புராதன பிரதேசமாக மாற்றியமைத்து பிரகடனப்படுத்தும் நோக்குடன், அப்பகுதியை அரசின் தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தியிருக்கிறது.

ஆயுத மோதல் முடிவிற்று 13 ஆண்டுகள் கடந்த நிலையிலும் நடைமுறையில் தமிழர்கள் மீது இலங்கை அரசால் திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட கலாசார இனவழிப்பும் முனைப்புடன் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஆகவே, இலங்கைக்கு ஐ.நாவின் சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமிக்குமாறும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு பரிந்துரைக்குமாறும் தமிழர் தேசமான ஈழத்தினை சுய ஆட்சி இன்னமும் கிடைக்கப்பெறாத பகுதியாக அங்கீகரிக்குமாறும் இந்த அவையின் அங்கத்துவ நாடுகளிடம் கோருகிறோம் என்று கூறியுள்ளார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இலங்கையில் தமிழர் வாழ்விடங்களில், அவர்களின் வாழ்வியலை ஆக்கிரமித்துள்ள பிரச்சினைகளை அப்படியே எடுத்துக் கூறியிருக்கிறார் கஜேந்திரகுமார். இலங்கையின் இன்றைய நிலை இதுதான். நாட்டின் புராதனத்தை பாதுகாக்கவேண்டிய தொல்பொருள் திணைக்களத்தின் இணையதளத்தில், அதன் சமூக ஊடகத் தளங்களில் கூட தமிழர் வரலாறு திரிபுபடுத்தப்படும் நிலைமை இருக்கிறது.

1948இல் இலங்கை பிரித்தானிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதைத் தொடர்ந்து, ஆட்சியதிகாரத்தை தன்னகப்படுத்திய தென்னிலங்கை அரசுகள், இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பகுதியை தனது வரையறுக்கப்பட்ட வரலாற்று மற்றும் பாரம்பரிய தாயகமாகக்கொண்டு வாழும் இன்னொரு தேசிய இனமான ஈழத் தமிழர்கள் மீதான இன அழிப்பைக் கட்டவிழ்த்துவிட்டது. தமிழர்களின் தேசக் கட்டமைப்பினை இல்லாதொழிக்கும் திட்டத்தின் அடிப்படையில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், ஈழத் தமிழர்களின் மரபுவழித் தாயகம், பொருளாதாரம், தனித்துவமான பண்பாடு, வரலாறு, பாரம்பரியம், மொழி ஆகியவற்றைக் குறிவைத்து அழித்துவந்துள்ளன.

அதுமட்டுமன்றி, ஈழத் தமிழர்கள் மீதான இன அழிப்புக்குத் தேவையான நிதியை தொடர்ந்து ஆட்சியைக் கைப்பற்றிய அனைத்து அரசுகளும் தமது வரவு-செலவுத் திட்டங்களினூடாக ஒதுக்கியதுடன், நாட்டின் அனைத்து வளங்களையும் இதற்காகச் செலவிட்டு வந்துள்ளன. இன்றும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் கொள்கைகளாக, தமிழர் பகுதிகள் மீதான ஆக்கிரமிப்பு, தமிழர் பகுதிகளை இராணுவமயமாக்கல், நில அபகரிப்புகள், தமிழர்களின் தேசக் கட்டமைப்பினையும் அதன் எல்லைகளையும் சிதைத்துப் பலவீனமாக்குதல், தமிழர்களின் மரபுவழியான, வரலாற்று ரீதியிலான தாயக உரிமைகோரலை முடக்குதல் போன்றவையே இருந்துவருகின்றன.

தமிழர்களை அழிப்பதற்கும், அவர்களது தேசிய கட்டமைப்பை சிதைப்பதற்கும் கடைப்பிடித்து வந்த கொள்கையே இன்று நாட்டின் இந்நிலைமைக்கு மூலகாரணமாக அமைந்துள்ளது.

இலங்கை என்றுமில்லாத பொருளாதார நெருக்கடியில் இருந்தாலும், தமிழருக்கு எதிரான பெரும்பான்மை இன சமூகத்தின் ஆதிக்கமும் அடக்குமுறையும் எந்த மாறுதலுமின்றி செவ்வனே நடந்துகொண்டிருக்கிறது. எக்காரணம் கொண்டும் இனவாதத்தில் சமரசம் செய்துகொள்ள மறுக்கிறது தென்னிலங்கை. சர்வதேச சமூகம் இதனை கவனத்திற்கொள்ளவேண்டும். கஜேந்திரகுமார் எம்.பி. கூறுவதுபோல் தமிழர் விடயத்தில் ஒரு தீர்வானத்தினை அறிவிக்க வேண்டும் சர்வதேச சமூகம். தமிழர்களின் எண்ணக்கிடக்கையும் அதுவே.

தமிழகத்தில் மோதும் எடப்பாடி டில்லியில் பணிகிறார்

வைத்தது. கமலாலயத்தில் நடந்த பாரதீய ஜனதாக் கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பொங்கி எழுந்த அண்ணாமலை, எடப்பாடியை கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைக்கக் கூடாது என்பதில் அண்ணாமலை உறுதியாக இருக்கிறார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி சேர்ந்தால் தலைவர் பதவியை சக்கரவர்த்தி, நாராயணன் திருப்பதி, வி.பி.துரைசாமி, கே.பி.ராமலிங்கம் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் அதிர்ச்சியடைந்தனர். ஒருசிலர் அண்ணாமலைக்கு ஆதரவாகப் பேசினார்கள். கூட்டணி குறித்து முடிவு எடுக்க வேண்டியது டில்லித் தலைமை. இராஜினாமாச் செய்வது பற்றி இங்கு பேசக்கூடாது என வானதி சீனிவாசன் கோபமாகப் பேசினார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் எடப்பாடிதான் எனபது உறுதியாகி விட்டது. எடப்பாடியின் வளர்ச்சி தன்னைப் பாதிக்கும் என்பதை அண்ணாமலை

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் பாரதீய ஜனதாக் கட்சிக்கும் இருந்த நெருக்கம் அண்ணாமலையால் விரிசலடைந்துள்ளது. இந்தியாவில் பலமான கட்சியாக இருக்கும் பாரதீய ஜனதாக் கட்சி, தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதுகில் சவாரி செய்கிறது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவு இல்லையென்றால் தமிழகத்தில் வெற்றிபெற முடியாது என்பதை டில்லித் தலைமையும் உணர்ந்துள்ளது. தமிழக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணக்கமாக உள்ளனர். தமிழக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவராக அண்ணாமலை பொறுப்பேற்ற பின்னர் முரண்பாடு தோன்றத் தொடங்கியது. இதுவரை அமைதியாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் அண்ணாமலைக்கு எதிராகக் களமிறங்கியுள்ளனர். டில்லித் தலைமை இதனை ரசிக்கவில்லை.

கூட்டணி பற்றிய முடிவை மாநிலத் தலைவர் எடுக்க முடியாது. கூட்டணி முடிவை மாநிலத் தலைவர் உறுதிசெய்ய வேண்டும் என அண்ணாமலை சொல்கிறார். இந்திய மாநிலத் தலைவர்கள் முடிவு எடுப்பதை டில்லித் தலைவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். தமிழகத்தில் பாரதீய ஜனதாதான் எதிர்க்கட்சி எனச் சொன்னதால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கடுப்பாகியது. தமிழக அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒதுக்கிவைத்தார்.

அண்ணாமலையை பழிவாங்க காத்திருந்த எடப்பாடி பாரதீய ஜனதாக் கட்சி நிர்வாகிகளையும், உறுப்பினர்களையும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்தார். பாரதீய ஜனதாவிலிருந்து சென்ற அனைவரும் அண்ணாமலை மீது குற்றஞ்சுமத்தினர். இந்தச் சம்பவம் அண்ணாமலையை கொதிப்படைய

இராஜினாமாச் செய்யப்போவதாக அறிவித்தார். அண்ணாமலை அப்படி ஏகவார் என எதிர்பார்க்காதவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

அஞ்சு, பத்து தொகுதி வாங்குவதற்காக நான் தலைவராகவில்லை. எடப்பாடிக்கு முன்னால் குனிந்து நிற்க முடியாது. தனித்துப் போட்டியிட வேண்டும். கட்சியை வளர்ப்பதற்காகவே வந்தேன். தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி இல்லாமல் தனியாகப் போட்டி போட வேண்டும் என அண்ணாமலை பொரிந்துதள்ளினார்.

கூட்டத்தில் அண்ணாமலை அப்படி வெடிப்பாரென யாரும் எதிர்பார்க்கவில்லை. 'ஐந்து சீட், பத்து சீட் வாங்குறதுக்காக நான் மாநிலத் தலைவராக வரலை. என்னால இடுப்புல துண்டைக் கட்டிக்கிட்டு, எடப்பாடி முன்னாடி சீட்டுக்காகக் குனிஞ்சு சலாம் போட முடியாது. கட்சியை வளர்க்குறதுக்காகத்தான் வந்தேன். அதைச் செய்தே தீருவேன். நம்மோட பலத்தை நாம தனியாகப் போட்டியிட்டு நிரூபிக்கணும். சில பேருக்கு இதில் உடன்பாடு இருக்காது. அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

கேசவ விநாயகம், வானதி சீனிவாசன், உணர்ந்ததால் இந்த நாடகம் அரங்கேறியது.

பாரதீய ஜனதாவுடன் கூட்டணி சேர்ந்தால் சிறுபான்மையினரின் வாக்கு கிடைக்காது. இதனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் பாரதீய ஜனதாவுடன் கூட்டணி சேர விரும்பவில்லை. இன்றைய அரசியல் சூழ்நிலையில் பாரதீய ஜனதாவின் கருணை எடப்பாடிக்குத் தேவையாக உள்ளது. பாரதீய ஜனதாவின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில், பெரிய மாநிலக் கட்சியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான் இருக்கிறது. அதற்கு அடுத்ததாக உடைந்த சிவசேனாவின் ஒரு பகுதியோடு ஒட்டிக்கொண்டிருக்கிறார். 66 எம்.எல்.ஏக்கள், நான்கு எம்.பிக்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இருக்கிறார்கள். தேசிய அளவில், மொத்த வாக்காளர்களில் ஒரு சதவிகிதத்துக்கு மேல் வாக்குவங்கி வைத்திருக்கும் கட்சிகளில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்று. ஆகையால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கைவிட பாரதிய ஜனதா தயாராக இல்லை. இந்த அரசியலை அண்ணாமலை எதிர்பார்க்கவில்லை.

(ரமணி)

பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையின் அதிபராக திருமதி எஸ்.மனோகரன் பசறை வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஸரீனா பேகம் முன்னிலையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். இதன்போது கோட்டக்கல்விப் பணிப்பாளர், பாடசாலை அபிவிருத்தி நிர்வாகக் குழுவினர், முன்னாள் அதிபர் எஸ். ரமேஷ் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர். (நடராஜா மலர்வேந்தன்)

'வெடி' மணியம் தொடர்ச்சி...

முஸ்லிம் கட்சி உறுப்பினரா?

இல்லை.

அப்ப ஆரப்பா என்று கேப்பியள்.

காலாகாலமாக எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்த அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் அரச சார்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்தான் அதைச் செய்திருக்கிறார்.

இதுக்கும் மிஞ்சி ஆரெண்டு கேட்டியள் என்டால் எங்களுக்கு கடும் கோவம் வரும்.

இன்னும் "ஈசியா" சொல்லோணும் என்டால்;

பாராளுமன்றத்தில் கதைக்க 1000 பிரச்சினைகள் இருந்தும் ரணிலின்ர செருப்பை நக்குறதா அல்லது மஹிந்தவின் செருப்பை நக்குறதா என்டு அண்மையில் அடிபட்ட ஆக்களில் ஒருத்தர்.

IMF இடம் இலங்கை கடன் வாங்கியது இதுதான் முதல் தடவை அல்ல.

சந்திரிகா காலத்தில் இருந்து பல தரம் வாங்கியாச்சு. ரணிலே மூண்டு நாலு தரம் வாங்கினவராம் என்டுறாங்கள்.

நாட்டை நாசமாக்கி

குட்டிச்சுவராக்கியது மஹிந்த, கோட்டா மட்டுமல்ல. கடந்த ரண்டு மூண்டு தசாப்தகாலமாக ஆரெல்லாம் சிறிலங்காவை ஆட்சி செய்தார்களோ அவர்களும் இந்த பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்கள்தான்.

ஆக;

நாடு பொருளாதார வீழ்ச்சி கண்டு கடன்சுமைகளால் சீரழிஞ்சு போய் கிடப்பதற்கு ரணிலும் ஒரு காரணம்தான்.

இது "அரிவரி" படிக்கும் சின்னப்பொடியனுக்கும் தெரியும்.

ஆனால், கத்துக்குட்டி தமிழ் அரசியல்வாதிகளுக்கு இது கூட தெரியாமல் இருப்பது மிக மிகக் கேவலம்.

இப்படியானவர்களை பாராளுமன்றம் போகச்செய்த நாங்கள்தான் வெட்கித் தலைகுனிய வேணும். அவர்களல்ல!

நாட்டில 1008 பிரச்சினை கிடக்கும்போது IMF இடம் கடன் வாங்கிய ரணிலுக்கு "பாராட்டி வாழ்த்துகிறோம்" என்டு விளம்பரம் கொடுக்கும் இப்படியானவர்களைதான் மீண்டும் மீண்டும் பாராளுமன்றம் அனுப்புறம் என்டு நினைக்கும்போது;

எங்கட சனத்துக்கு மேல கோவம் கோவமா வருகிறது.

IMF கும்மா கடன் குடுக்கயில்லை. பல நிபந்தனைகளுடன்தான் கொடுத்திருக்கும். வெளியில எல்லா நிபந்தனைகளையும் ரணில் - ராஜபக்ஷ அரசு சொல்லப்போவதில்லை.

ஆக;

எப்படி சீனாவிடம் கடன் வாங்கி சீரழிஞ்சமோ...

அதேபோல ஒரு நிலை வராது என்டு ஆராலும் உறுதியா சொல்ல முடியாது.

இலங்கை மீண்டெழவேண்டும் என்டால்;

இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்தால் நிச்சயம் அது பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

அதைவிட உள்நாட்டு உற்பத்திகளை அதிகப்படுத்தினால் நிச்சயம் ஓரளவுக்கு நின்டு பிடிக்கலாம்.

உது எல்லாத்துக்கும் மேலால "உள்நாட்டு பிரச்சினையை" தீர்த்தால் நாடு நல்லா முன்னேறும்.

2009 முள்ளிவாய்க்காலில் போர் முடிஞ்ச கையோட "உள்நாட்டுப் பிரச்சினை" முடிந்துவிட்டதாக சிறிலங்கா அறிவித்தது.

போர் தான் நின்டதே ஒழிய இன்டுவரை "உள்நாட்டு இனப்பிரச்சினை" இன்னும் தீர்க்கப்படவில்லை.

உள்நாட்டு இனப்பிரச்சினை நாளுக்கு நாள் மிக மோசமாகத்தான் போய்க்கொண்டு இருக்கு.

இந்த லச்சணத்தில் சிறிலங்காவின் தொல்லியல்துறை செய்யும் "அடாவடித்தனங்களை" போன பத்தியில் பாத்தனாங்கள்.

யாழ்ப்பாணத்தின் அருகில் உள்ள "சப்த தீவுகளில்" ஒன்டுதான் நெடுந்தீவு.

அங்கையும் சிறிலங்காவின் தொல்பொருள் திணைக்களம் தன "விளையாட்டுகளை" காட்டத் தொடங்கிவிட்டது.

நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டை என்பதை எப்படியாவது பௌத்த சின்னமாக அறிவித்துவிடவேண்டும் என்ற காரியங்களில் இறங்கியுள்ளார்கள்.

சிறிலங்காவின் தொல்பொருள் திணைக்களத்தின் சின்னத்தில் முழுக்க முழுக்க தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது. அதைவிட சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்த எந்த அடையாளமும் இல்லை.

சிறிலங்கா ஒரு "பௌத்தநாடு" என்று நிறுவி அதை எங்களிடம் "தினித்துவிடலாம்" என்று வரலாற்றை மாற்ற நினைக்கிறார்கள் புத்தனின் வாரிசுகள்.

ஆனால்;

வரலாற்றை மாற்ற "எந்த கொம்பனாலும்" முடியாது என்பது அவர்களுக்குத் தெரியாதபோல கிடக்கு.

இதுக்கிடையில் வடக்கு, கிழக்கில் இன்னொரு "குறுப்" திடீர் சிவலிங்கம் வைச்சுத் திரியினம்.

தமிழர்களின் பாரம்பரிய பூமியில் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே சிவாலயங்கள் கட்டப்பட்டன.

திருக்கோணேச்சரம், திருக்கேதீஸ்வரம் போன்ற சிவாலயங்களின் வரலாறு மிக ஆழமானது.

ஆக;

"சிவலிங்கம்" வைக்கிறதில தப்பில்லை.

ஆனால் அவற்றை "கண்ட கண்ட" இடங்களில் வைப்பதுதான் தவறு.

அதைவிடத் தவறு ஏதோ "கள்ளவேலை" செய்யுறது மாதிரி இரவோடு இரவாக ஆருக்கும் தெரியாமல் வைப்பது மிக மிகத் தவறு.

இது "சிவபூமி"!

ஆகவே " சிவலிங்கங்களை" இருட்டில களவா கொண்டுவந்து கண்ட கண்ட இடங்களில் "போட்டுவிட்டு" போவது பிழை.

முறையாக துணிவாக அதைச்செய்யுறது என்டால் செய்யுங்கள் அல்லது பொத்திக்கொண்டு இருங்கள்.

திடீர் புத்த சிலைகள் வைப்பவர்கள் தங்களை நியாயப்படுத்த திடீர் சிவலிங்கங்களை காரணம் காட்டுகிறார்கள்.

ஆகவே, சிவலிங்கம் வைக்கிற ஆக்கள் செய்யுறதை முறையாக வெளிப்படையாக துணிவோடு செய்யுங்கள்.

அது அப்பிடி என்டு இஞ்சால தொல்பொருள் திணைக்களத்தின் முகப்புத்தகத்தில் ஒரு "பஞ்சாயத்து" ஓடிக்கொண்டிருக்கிறது.

என்னண்டு எட்டிப்பாத்தால்;

தொல்பொருள் திணைக்களத்தின் இலச்சனையில் தமிழும் இல்லை. அதைவிட சிறுபான்மை மக்களை அடையாளப்படுத்தும் எந்தவிதமான குறியீடுகளும் இல்லை.

அதை ஏன் என்டு நியாயமாக கேள்வி எழுப்பினால்;

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த படித்த மோட்டுக்கூட்டம் ஒண்டு "இனவாதத்தை" கக்குகிறார்கள்.

இற்றைக்கூட்டம்தான் கொஞ்சக் காலத்துக்கு முன்னம் "கோல்பேசில்" நின்டு "எல்லாரும் ஒற்றுமையாக நாட்டைக் கட்டி எழுப்புவம். வாங்கோ கோட்டாவை கலைப்பம்" என்டு கோஷம் போட்ட கூட்டம்.

ஆனால் இண்டைக்கு அதை எல்லாத்தையும் "மறந்து" மீண்டும் இனவாதத்தை கக்குகிறார்கள். கோல்பேசில் நின்டு எங்களுக்கு "நல்லெண்ண வகுப்பு" எடுத்த ஆக்கள் இதுகளையும் ஒருக்காப் பாருங்கோ.

ஏனெண்டால்;

நாளைக்கு மீண்டும் கோல்பேசில் நின்டு "கோ ஹோம் ரணில்" என்டு கூவும் போது.... மீண்டும் எங்களுக்கு "நல்லெண்ண வகுப்பு" எடுக்க வரப்பபாது.

அந்தளாந்தான் சொல்லலாம்.

SLIot Challenge 2022 மற்றும் IESL ROBOGAMES 2022 உடன்
தொழில்நுட்ப புத்தாக்கத்திற்காக இளைஞர்களை ஊக்குவிக்கும் SLT-MOBITEL

இலங்கையின் எதிர்காலத்திற்கான தொழில்நுட்ப துறையின் புத்தாக்கத்தை துரிதப்படுத்தும் நோக்கிலும் புத்தாக்க சிந்தனையாளர்களை சரியான பாதையில் கொண்டு நடத்தும் நோக்கிலும் நடத்தப்படும் வருடத்தின் மிகப் பெரிய SLIoT சவால் 2022 மற்றும் IESL ரோபோ கேம்ஸ் 2022 போட்டிகள் "தொழில்நுட்ப எதிர்கால கண்டுபிடிப்புகளை நோக்கி இளைஞர்களை மேம்படுத்துதல்" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்றது.

நாட்டின் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு உதவி அதனை மேம்படுத்தும் வகையில் இளம் கண்டுபிடிப்பாளர்களை உருவாக்குவதில் SLT-MOBITEL பெருமிதமடைகிறது. தொலைத்தொடர்புத் துறை மற்றும் டிஜிட்டல் மாற்றங்களில் நாட்டின் முன்னோடியாக SLT-MOBITEL திகழ்கிறது. கடந்த காலங்களிலும் இத்தகைய முயற்சிகள் ஊடாக அநேகரை ஊக்குவித்து வருகின்றதுடன் எதிர்காலத்திலும் தமது பணியை அது முன்னெடுக்கும்.

SLIoT Challenge 2022

OPEN CATEGORY

வெற்றியாளர் - Team 'Achievers'

இரண்டாம் இடம் - Team 'UpThrust'

மூன்றாம் இடம் - Team 'Indika'

UNIVERSITY CATEGORY

வெற்றியாளர் - Team 'Metatron'
Faculty of Technology, University of Ruhuna

இரண்டாம் இடம் - Team 'JuRu'
General Sir John Kotelawala Defence University.

மூன்றாம் இடம் - Team 'Strydo Labs'
Faculty of Technology Rajarata University of Sri Lanka

IESL ROBOGAMES 2022

SCHOOL CATEGORY

வெற்றியாளர் - Team 'RalphyBoy'
Maliyadeva College, Kurunegala

இரண்டாம் இடம் - Team 'Kada Ozaki'
Elizabeth Moir School, Colombo

மூன்றாம் இடம் - Team 'Maverick'
Taxila Central College, Horana

UNIVERSITY CATEGORY

வெற்றியாளர் - Team 'Trix'
University of Moratuwa

இரண்டாம் இடம் - Team 'Botivity'
University of Peradeniya

மூன்றாம் இடம் - Team 'Terminator'
Uva Wellassa University

மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்துடன் இணைந்து SLT-MOBITEL ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் தொழில் வல்லுனர்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோர் இளங்கலை, பாடசாலை மற்றும் நிறந்த பிரிவுகளில் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை ஆய்வு செய்தனர். அத்துடன் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் SLT-MOBITEL தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகம் மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். இலங்கையின் திறமையான சிந்தனையாளர்களுக்கு மற்றும் எதிர்கால பொறியியலாளர்களுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தனர். இதில், IESL பிரதம நிறைவேற்று அதிகாரி பொறியியலாளர் நீல் அபேசேகர, IESL தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி பிரிவு கழக தலைவர் பொறியியலாளர் வஹீட் முஸ்தாலி, IESL தெரிவு செய்யப்பட்ட தலைவர் பேராசிரியர். ரஞ்சித் திசாநாயக்க, மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான பேராசிரியர். சந்தன கமகே, கலாநிதி. குட்டல குணசேகர, கலாநிதி. சுலோச்சன குரியாரச்சி மற்றும் கலாநிதி. உதய சங்கர் தயாசிவம் ஆகியோருடன் SLT-MOBITEL குழும பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பொறியியலாளர் பிரபாத் தஹநாயக்க மற்றும் SLT-MOBITEL இன் சிரேஷ்ட நிர்வாகத்தைச் சேர்ந்த பல அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

சிறுவர்களுக்கான தபால் மூல இலவச வேதபாடம்

மேலதிக விபரங்களுக்கு இன்றே SMS செய்யுங்கள்
072-2456621
Lanka Hope Media
P.O.Box 2258, Colombo
Tel: 011-3678090
Email: srilankalhm@sltnet.lk

ஐ.எம்.எவ். கடன் உதவி ரணிலின் வெற்றியல்ல!

பெசிலின் மூலோபாயமே காரணமென்கிறார் விமலவீர எம்.பி

உரையாடல் - நா.தினுஷா

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்வதற்கான ஆரம்பகட்ட செயற்பாடுகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெருமுனவின் அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷவே முன்னெடுத்தார். இந்தத் திட்டம் பெசில் ராஜபக்ஷவினுடையதாகும். அந்தத் திட்டத்தின் தொடர்ச்சியையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் சென்றார். அதுவே தற்போது எமக்கு வெற்றியை பெற்றுக்கொடுத்துள்ளது என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸநாயக்க தெரிவித்தார்.

'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய பிரத்தியேக உரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவருடனான உரையாடலின் முழு விபரம் வருமாறு,

நாட்டில் தற்போதிருக்கும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட கடன்களை மீள செலுத்துவது தொடர்பில் இருந்த சிக்கல் நிலைமைகளில் சில மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், தொழிலாற்றும் சம்பிரதாயம் எமது நாட்டில் இல்லை. கடமையை தவிர்க்கும் முறையையே கையாள்கிறார்கள். தேவையில்லாத தொழிற்சங்க நடவடிக்கைகள், பணிப்புறக்கணிப்பு போன்ற செயற்பாடுகளையே பின்பற்றுகிறார்கள். இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரமே சீர்குலைக்கப்படுகின்றது.

1977, 1988, 1989ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வன்முறைகள், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் சூழ்நிலை போன்ற சந்தர்ப்பங்களில் நாட்டின் பாரிய சொத்துக்கள் அழிவடைந்தன. அரச நிறுவனங்கள், தினைக்களங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், புகையிரத வீதிகள் என பல பொதுசொத்துக்கள் தேதமடைந்தன. அவற்றை மறுசீரமைக்க பெருந்தொகை நிதி செலவிடப்பட்டது. அதன்பின்னர் எமது நாட்டின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியை சந்தித்தது.

யுத்தத்தின் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதற்காக நாட்டில் இலஞ்ச, ஊழல் இடம்பெறவில்லை என்று கூறவில்லை. ஒவ்வொரு அரசாங்கங்களின் காலப்பகுதியிலும் இலஞ்ச ஊழல்கள் இடம்பெற்றன. மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்களும் திருடர்களே. எமது கடன்கள் அதிகரித்தமையின் காரணமாகவே பொருளாதாரம் வீழ்ச்சியை சந்தித்தது. இதனுடன் எமது நாட்டில் கொரோனா நிலைமை ஏற்பட்டமையால் நாட்டின் பொருளாதார நெருக்கடியும் மேலும் தீவிரமடைந்தது.

பொருளாதார முகாமைத்துவம், எங்களின் கொள்கைகளிலும் குறைபாடுகள் இருந்தன. இவ்வாறான காரணங்களின் அடிப்படையிலேயே நாட்டில் நெருக்கடி நிலை உருவானது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் என்ற அடிப்படையில் உங்களுக்கும் பொறுப்புள்ள இருக்கின்றன அல்லவா?

எங்களுக்குப் பொறுப்பு இருக்கிறதா, இல்லையா என்பதை விட, ஆட்சி முறைமையை எடுத்துக்கொண்டால் ஒரு குறிப்பிட்ட சிலரே இறுதித் தீர்மானங்களை எடுக்கிறார்கள். அவ்வாறானதொரு நிலைமையும் இருக்கிறது. ஆனால், பொறுப்பு இல்லை என்று கூறமுடியாது. ஒவ்வொருவரும் பொறுப்புக் கூற கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தொழிற்சங்க நடவடிக்கைகளால் பெரும் அதிதிகள் இழைக்கப்படுகின்றன.

எங்களுக்குப் பொறுப்பு இருக்கிறதா, இல்லையா என்பதை விட, அதிகாரத்திலிருக்கும் சிலரே இறுதித் தீர்மானங்களை எடுக்கிறார்கள்.

மதிப்பீட்டு நடவடிக்கைகள் காலதாமதமாகியுள்ளன. பரீட்சை நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ளன.

வரிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு முழு நாட்டு மக்களையும் நிர்க்கதியாக்க முயற்சிக்கிறார்கள். பணிப்புறக்கணிப்பின் காரணமாக 100 கோடி ரூபா வரையில் நட்டத்தை சந்தித்திருக்கிறோம். இது எமது எதிர்காலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். அதிகாரிகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். அவர்களும் பொறுப்புக் கூற கடமைப்பட்டிருக்கிறார்கள். இறுதியில் அரச நிறுவனங்களின் மீது அரசியல் தலையீடு இடம்பெறுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கிறார்கள். ஆனால், அதிகாரிகள் அவர்களின் கடமைகளை முறையாக நிறைவேற்றாத சந்தர்ப்பங்களிலேயே அந்தப் பிரச்சினைகளை எங்களுக்குக் கூறுகிறார்கள். இறுதியில், அரசியல்வாதிகள் தலையிடுவதாகக் கூறுவது தவறாகும். அதிகாரிகள் பிரச்சினைகளை உருவாக்குவதாலேயே அரசியல்வாதிகள் தலையிடவேண்டி ஏற்படுகின்றது.

மக்களுக்காக வகுதிலான தீர் விநியோகம், வீதிபுனர மைப்பு ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் இருந்தும் அவற்றை பெற்றுக்கொடுக்கவிட்டால் அதன்போதும் அரசியல்வாதிகள் தலையிடவேண்டிய நிலை உருவாகின்றது.

இவ்வாறிருக்கையில், அரச நிறுவனங்கள் அரசியல் மயமாக்கப்படுகின்றன என்று குற்றச்சாட்டு முன்வைப்பது தவறாகும்.

ஒருசில விடயங்களில் எங்களால் இணங்கிப்போக முடியாது. எனது சில எதிர்பார்ப்புகளும் நிறைவேறவில்லை. நான் உள்ளிட்ட ஆளுந்தரப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் அதிருப்தியிலேயே இருக்கிறோம்.

தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்பை முன்னெடுப்பதற்கு முன்னர் அவர்களுடன் கலந்துரையாடி ஒரு பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பு அரசாங்கத்துக்கு இருந்ததல்லவா?

தொழிலாளர்களுக்குப் பிரச்சினை இருக்கிறது. இல்லை என்று கூறவில்லை. அவர்கள் பொதுமக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுகிறார்கள். குறைந்த வருமானம் பெறுபவர்களைப் பாதுகாக்கவேண்டியது அரசாங்கத்தின் பிரதான கடமையாகும். அவர்களுக்கான நிவாரணங்களை இருப்பவர்களிடமிருந்தே பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அவர்களுடன் கலந்துரையாடாமல் இல்லை. நான் அறிந்தவகையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் இடம்பெறது. தற்போதும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றே வருகின்றன. விரிவுரையாளர்கள் 5 இலட்சம் ரூபா வரை வருமானம் ஈழைக்கிறார்கள். அதிலிருந்து ஏழை மக்களுக்கு ஒரு தொகையைக் கொடுப்பது தவறாகாது. அதற்காக மாணவர்களின் வாழ்க்கையுடன் விளையாடுவதும் தவறாகும்.

தூரப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு எதிர்க்கட்சியினர் கடந்த காலங்களில் கூச்சலிட்டார்கள். நாணய நிதியம் தொடர்பில் கலைமும் பேசுகிறார்கள். அரசாங்கத் தரப்பில் இருந்தவர்களும் இன்றும் எதிர்தரப்பை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.

உண்மையாக குறிப்பிடுவதானால், நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான ஆரம்பகட்ட செயற்பாடுகளை பெசில் ராஜபக்ஷவே முன்னெடுத்தார். இந்தத் திட்டம் பெசில் ராஜபக்ஷவினுடையதாகும். அந்தத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் சென்றார். அதுவே இடம்பெற்றுள்ளது.

நாணய நிதியத்தின் உதவி கிடைத்தது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இருந்தபோதும் 3 பில்லியன் ரூபாவால் எமது கடன்களை மீள் செலுத்த முடியாது. அதைதிட அதிக தொகையை வெளிநாடுகளிடமிருந்து கடனாகப் பெற்றுக்கொண்டுள்ளோம். சர்வதேச அழுத்தத்திலிருந்து மீளவும், கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளவும், கடன் மீள் செலுத்துகையை கட்டுப்படுத்தவும் நாணய நிதியத்தின் உதவி அவசியமாக இருக்கிறது.

இதற்கு முன்னர் நாணய நிதியத்தை சந்தித்துக் கலந்துரையாடாமல் பொய் கூறுவதாகக் குற்றஞ்சாட்டினார்கள். மக்களை ஏமாற்றுவதாக குற்றஞ்சாட்டினார்கள். ஆனால், அவர்களே இன்று பட்டாசு கொளுத்திக் கொண்டாடுகிறார்கள்.

பொதுஜன பெரமுனவிலிருக்கும் உறுப்பினர்கள் கடந்த காலங்களில் முக்கிய அமைச்சுப் பொறுப்புகளில் இருந்தார்கள். ஆனால், தற்போது பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு இருந்த முக்கியத்துவம் குறைந்துவிட்டதாக நீங்களும் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். இந்நிலையில், ரணிலுக்கு ஆதரவளிக்கமால் மத்தியஸ்தமாக செயற்பட வேண்டும் என்று நீங்கள் வலியுறுத்தியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றதே?

அமைச்சுப் பதவி முக்கியமல்ல. முதலில் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும். அரசாங்கத்தின் பிரதான பங்காளர்கள் என்ற அடிப்படையில் ஸ்ரீ லங்கா அடிப்படையில் பொதுஜன பெரமுனவுக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்க வேண்டும். இருந்தபோதும், அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்காக எதிர்காலத்தில் அதனை ஏற்படுத்திக்கொள்வோம்.

இணங்க முடியாத ஒருசில விடயங்களும் இருக்கின்றன. உதாரணமாக, குறிப்பிடுவதானால், அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட சட்டக்கலுரி மொழி பிரச்சினை தொடர்பான யோசனையின்போது நாங்கள் அதற்கு எதிராகவே வாக்களித்தோம். ஆகவே, இணங்க முடியாத விடயங்களுக்கு நாங்கள் ஆதரவளிக்க மாட்டோம்.

காலிமுகத்திடல் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் யார்? அதற்குக் காரணம் என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

கடந்த வருடம் இடம்பெற்ற போராட்டம் மக்களின் குரல் அல்ல. அந்தப் போராட்டத்தின் பின்னணியில் அரசியல்வாதிகளே இருந்தார்கள். அது அரசியல் போராட்டமாகும். அந்தப் போராட்டம் ஒரு சூழ்ச்சியாகும். போதைப்பொருள் வியாபாரிகளை தொடர்ச்சியாக கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவும், இறுதியில் கோட்டாய ராஜபக்ஷவுக்கு எதிராக செயற்படவும் ஆரம்பித்தார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியும் அந்தப் போராட்டத்தின் பின்னணியில் இருந்தது. ஆளுந்தரப்பிலும் சிலர் இருந்தார்கள். இன்னும் சிலர் எங்கு இருக்கிறார்கள் என்பது தெரியாது. இந்தப் போராட்டத்திலிருந்த சிலர் தேர்தலிலும் போட்டியிடுகிறார்கள். கோட்டாய ராஜபக்ஷ இவர்களின் கூச்சலின் காரணமாக அவரின் பதவ்தைக் காட்டாமல் அமைதியாக வெளியேறிவிட்டார்.

ஆளுந்தரப்பிலுள்ளவர்கள் என்று யாரை சாடுகிறீர்கள்?

ஆளுந்தரப்பிலிருந்து அமைச்சர்கள் சிலர் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்திருந்தார்கள்.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பெசில் ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த வாரம் கட்சி மட்டத்தினான விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றிருந்தது. அந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுனீர்களா? அங்கு என்ன கலந்துரையாடப்பட்டது?

நான் அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருக்கவில்லை. இருந்தபோதும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல், இரு தின நிகழ்வு ஆகிய விடயங்கள் குறித்தே கலந்துரையாடப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் குறித்து பொதுஜன பெரமுனவிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியிலா இருக்கிறார்கள்?

ஆளுந்தரப்பிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அதேகமான சந்தர்ப்பங்களில் அதிருப்தியிலேயே இருப்பார்கள். அது புதிய விடயமல்ல. மக்களைப்போன்றே ஆளுந்தரப்பிலுள்ள உறுப்பினர்களும் பல்வேறு எதிர்பார்ப்புகளுடனேயே இருப்பார்கள். அந்த எதிர்பார்ப்புகள் அவ்வாறே நிறைவேறுவதில்லை. எல்லா அரசாங்கங்களிலும் இது இயல்பான விடயமாகும். எதிர்பார்ப்பு நிறைவேறாத சந்தர்ப்பத்தில் அதிருப்தி நிலையே உருவாகும்.

நானும் அதிருப்தியிலேயே இருக்கிறேன். நான் எண்ணிய விடயங்களை முறையாக செய்ய முடியாத சந்தர்ப்பங்களும் இருக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் நாட்டில் ஓரளவு மாற்றம் ஏற்படத்தப்பட்டிருந்தது. தற்போது நாணய நிதியத்தின் உதவியும் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. ஆகவே, எதிர்காலத்திலும் எமது நாட்டுக்கு தேவையானவற்றை ஏற்படுத்திக் கொடுப்பார் என்று கருதுகிறீர்களா?

தற்போதுள்ளதை விட சிறந்த மாற்றம் ஏற்படுமென்று கருதுகிறேன். அதுவே எங்களின் எதிர்பார்ப்புமாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்ச்சியாக காலந்தாழ்த்தப்பட்டு வருகின்றது. உங்களுக்கு மக்கள் பலம் இல்லாமையின் காரணமாகவா தேர்தல் தொடர்ச்சியாக காலந்தாழ்த்தப்பட்டு வருகின்றது?

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவே தீர்மானம் எடுக்க வேண்டும். தேர்தலை நடத்தும் திகதியை ஆணைக்குழுவே உறுதியாக அறிவிக்க வேண்டும். தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் எங்களின் இணக்கத்தை தெரிவித்தே இருக்கிறோம். எங்களுக்கு பலம் இருக்கிறது என்பதாலேயே தேர்தலை நடத்துமாறு நாங்களும் கோருகிறோம்.

நாணய நிதியத்தின் உதவி கிடைத்தது மகிழ்ச்சி என்றாலும், அதனைவிட அதிகமாக கடன் பெற்றுக் கொண்டுள்ளோம் என்பது கவலையளிக்கிறது.

அவ்வாறெனில் ஏன் தேர்தலை நடத்துவதற்காக அழுத்தம் பிரயோகிக்க பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வராமல் இருக்கிறீர்கள்?

நாங்கள் அரசாங்கத்துக்குள்ளேயே இருந்து அழுத்தம் பிரயோகித்து வருகிறோம். ஆளுந்தரப்பை பிரதிநிதித்துவப்படுத்துவதால் வீதிக்கு இறங்கிப் போராட முடியாது. அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டே எங்களின் நிலைப்பாடுகளை உறுதியாக வலியுறுத்திக்கொண்டே இருக்கிறோம்.

இதுதொடர்பில் ஜனாதிபதியுடன் தனியாக கலந்துரையாடலில்லை. கட்சி செயலாளர் குறிப்பிடுவதுபோன்று நாங்கள் தேர்தலுக்கு தயாராக இருக்கிறோம். தேர்தலை நடத்த வேண்டும் என்பதே கட்சியின் பொதுவான நிலைப்பாடு.

ஜனாதிபதியும் தேர்தலை நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கிறார். நிதிப் பிரச்சினையின் காரணமாக, தற்போது நாட்டிலுள்ள அத்தியாவசிய தேவைகளுக்கு முதலிடம் வழங்கவேண்டும் என்பது ஜனாதிபதியின் கருத்தாக இருக்கிறது. அதேபோன்று, இந்தத் தேர்தலை நடத்துவதால் தற்போதுள்ள நிலைமையில் மாற்றம் ஏற்படப்போவதில்லை என்பதே அவரின் கருத்தாகவும் இருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான அச்சுறுத்தல் இருந்த காலப்பகுதியில் இந்தியாவிடம் பாதுகாப்பு உதவி கோரியிருந்தீர்கள். அந்த நிலைமை இன்னும் நாட்டில் இருக்கிறதா?

அரசாங்கத் தரப்பினருக்கு உள்நாட்டில் பாதுகாப்பு இல்லை என்றால் சர்வதேசத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே அந்த உதவியை கோரியிருந்தேன்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதன் பின்னர் அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு சிங்கப்பூர் கம்பனியின் சேவைகள் மீண்டும் கிடைக்குமா?

இந்த இலக்கை அடைய முடியுமா என்பது பாரிய பிரச்சினையாக உள்ளது" என்று பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் மேலும் தெரிவித்தார். அத்துடன் எதிர்பார்க்கப்படும் வரி வருமானம் கிடைக்காவிட்டால் தொகை அதிகரித்து நாடு என்ற ரீதியில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைய முடியாது போய்விடும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

"RAMIS என்ற இறைவரி நிர்வாக கட்டமைப்பை உருவாக்குவதற்கு 10 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் அது சரியான மட்டத்தில் இயங்கவில்லை" என்று கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி. விக்ரமரத்ன சுட்டிக்காட்டினார். மேலும் இது இதற்கு முன்னர் பல தடவைகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் சுட்டிக்காட்டப்பட்டபோதிலும், இது தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.







உள்நாட்டு இறைவரித் திணைக்கள இறைவரி நிர்வாகம் மற்றும் தகவல் முகாமைத்துவ முறைமையை (RAMIS) முகாமைத்துவம் செய்கின்ற சிங்கப்பூர் கம்பனிக்கு வழங்க வேண்டிய கட்டணங்களை சரியான நேரத்திற்கு வழங்க அரசாங்கம் பல்வேறு தருணங்களில் தவறியதால் சுமார் 773 பில்லியன் வரியினை வசூலிக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தவறியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தை பலமுறை எச்சரித்த குறித்த சிங்கப்பூர் கம்பனிக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மூலம் திகதிகள் மற்றும் கட்டண விபரங்களை குறிப்பிட்டு குறித்த கட்டணங்களை சொன்ன திகதிகளுக்குள் வழங்க முடியும் என கடிதம் மூலம் வாக்குறுதம் வழங்கியது என்ற போதிலும், சொன்ன திகதிகளில் சிங்கப்பூர் கம்பனிக்கு கட்டணத்தினை வழங்க அரசாங்கம் தவறிவிட்டது. இதனால் RAMIS முறைமையுடனான தமது தொடர்புகளை இடைநிறுத்திக் கொண்டது.

RAMIS என்ற கட்டமைப்பை உருவாக்குவது இலங்கை மற்றும் சிங்கப்பூர் அரசாங்கத்திற்கு இடையிலான ஒப்பந்தம் ஆகும். RAMIS நிறுவனத்திற்கான மென்பொருள் கட்டமைப்பை மேம்படுத்தி முகாமைத்துவம் செய்தல் மற்றும் தொழில்நுட்ப சேவைகள் என்பவற்றை வழங்குதல் என்பவற்றையே சிங்கப்பூர் கம்பனி மேற்கொண்டு வந்தது. சிங்கப்பூர் கம்பனியின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டதால் மென்பொருள் பொறியியலாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் RAMIS முறைமையில் பாரியளவில் தாமதங்கள் ஏற்பட்டதன் விளைவாகவே வரிகள் வசூலிக்கப்படுவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பெறுபேற்று அறிக்கைகளின்படி, RAMIS ஊடாக சிறந்த முறையில் வரிகளை வசூலிக்க முடிந்துள்ளது என்றபோதிலும் அண்மைக்காலமாக வரிகளை வசூலிப்பதில் பாரிய குறைபாடுகளை அரசாங்க பொது கணக்குகள் பற்றிய குழு (COPA) அடையாளம் கண்டுள்ளது. இந்த நிலையினை வசூலிக்கும் பொறுப்பை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS மற்றும் LEGACY ஆகிய கட்டமைப்புகள் கொண்டுள்ளன.

RAMIS என்பது வரிகளை வெளுத்துவின்றவர்கள் மற்றும் வரிகளை முகாமைத்துவம் செய்பவர்கள் இலகுவாக குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கொண்டுவரப்பட்ட பொறிமுறை ஆகும். முழுமையாக கணினிமயமாக்கப்பட்ட RAMIS என்ற இந்த முறைமை 2016ஆம் ஆண்டில் இருந்து இயங்குகின்றது.

2013ஆம் நிதித் திட்டமிடல் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் RAMIS திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2014ஆம் ஆண்டில் நோக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டதுடன் 2015இல் மூன்று மொழிகளிலும் சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டதுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறைவடைந்தன. அதன் பிறகு 2016ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் வரிசெலுத்துனர்களை RAMISஇன் கீழ் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. அதனை தொடர்ந்து இலத்திரனியல் பதிவு மற்றும் இலத்திரனியல் சேவைகள் என்பன அமுல்படுத்தப்பட்டன.

LEGACY என்பது உள்நாட்டு இறைவித் திணைக்களத்தினால் வரிகளை வசூலிப்பதற்கு பயன்படுத்தப்படும் மற்றுமொரு முறைமை ஆகும்.

2016ஆம் ஆண்டில் RAMIS அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் RAMIS ஊடாகவே வரிகள் வசூலிக்கப்பட்டு வந்தன. தற்போது 2016ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவு செய்த வரி செலுத்துனர்களுக்கு LEGACY முறைமை ஊடாகவே சேவைகளை வழங்க முடியும் என உள்நாட்டு இறைவித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்க பொதுக்கணக்குகள் பற்றிய குழு சுட்டிக்காட்டியுள்ள 773 பில்லியன் ரூபா பணத்தில் 201 பில்லியன் சட்ட ரீதியான சிக்கல்கள் இன்றி வசூலிக்கப்படக் கூடிய வருமானங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. 572 பில்லியன் ரூபா ஒரு சில காரணங்களால் வெற்றி வசூலிப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள தொகையாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரசாங்க கணக்குகள் பற்றிய குழு தெரிவித்துள்ளது.

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் கீழ் உள்ள விதிகளின் அடிப்படையில் வருமான வரி விதிக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் 2018ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் தொடங்கியதன் பின்னர் RAMIS கட்டமைப்பில் பின்னடைவுகள் ஏற்பட்டதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் உள்ள தனது பெயரை வெளியிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்திற்கும் தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டத்திற்கும் இருக்கின்ற பாரிய முரண்பாடுகளால் RAMIS முறைமை தள்ளாடுவதாக அவர் தெரிவித்தார்.

கனினிமயமாக்கப்பட்ட RAMIS முறைமைக்கு பரீட்சயமடைந்து வரும் நிலையில், RAMIS முறைமையில் பணிசெய்யும் அதிகாரிகளுக்கு 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டம் பாரியதொரு சவாலாக இருந்துவருவதாக RAMIS முறைமையில் பணிசெய்யும் ஊழியர் ஒருவர் தெரிவித்தார். RAMIS முறைமையானது உள்நாட்டு இறைவரி சட்டத்தினை நெருக்கமாக பேண வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் காலதாமதத்திற்கு புதியசட்டங்களே காரணம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்ட கொவிட்-19 அச்சுறுத்தல் மற்றும் அதனைத் தொடர்ந்து இலங்கையை ஆக்கிரமித்துவரும் டொலர் நெருக்கடி மற்றும் பொருளாதார சிக்கல்களினால்தான் குறித்த சிங்கப்பூர் கம்பனிக்கு உரிய நேரத்தில் கட்டணம் செலுத்த முடியாமல் போனதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கொவிட்-19 அச்சுறுத்தலுக்கு மத்தியில் அலுவலகங்களுக்கு வந்து வேலை செய்ய முடியாமல் போனதும் முக்கிய காரணம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க சட்டத்திற்கு ஏற்றவாறு RAMIS முறைமையை புதிப்பித்து RAMIS 2.0 என்றொரு புதிய முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக குறித்த அதிகாரி தெரிவித்தார். எவ்வாறாக இருந்தபோதிலும் ஆரம்பத்தில்போல வினைத்திறனுடன் RAMIS 2.0 செயற்படுமா என்பது சந்தேகத்திற்குரிய விடயம் என அவர் மேலும் தெரிவித்தார்.

RAMIS 2.0 என்ற புதிப்பிக்கப்பட்ட வரி செலுத்தும் முறைமையை உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஒப்பந்தம் மற்றும் அது தொடர்பான கொடுப்பனவுகள் குறித்த தகவல்கள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாக இருந்தாலும் உள்ள்பபுக்கையின் பிரகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஒப்பந்தம் மற்றும் அது தொடர்பான கொடுப்பனவுகள் குறித்த தகவல்களை வழங்குவது அரசியலமைப்புக்கு முரணானது என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கூறுவதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன தெரிவித்திருந்தார்.

இவ்வாறு RAMIS கட்டமைப்பில் கொள்முதல் உட்பட பல அம்சங்களில் சிக்கல்கள் இருப்பதால் நாட்டிற்கேற்ற வகையில் இதனை செயற்படுத்துவது குறித்து திகதிகளுடன் அறிக்கை அளிக்க வேண்டும் என்று அரசாங்க கணக்குகள் பற்றிய குழு தற்போது பரிந்துரைத்துள்ளது. அறிக்கையில் குறைபாடுகள் காணப்பட்டால் கொடுக்கல் வாங்கல் குறித்து கணக்காய்வு நடத்தப்படும் என்று குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

இது பற்றி உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிடும்போது 2014ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மென்பொருள் கட்டமைப்பு 2017இல் கொண்டு வரப்பட்ட புதிய சட்டத்துக்கமைய இற்றைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளதாக குறிப்பிட்டனர். குறித்த மென்பொருள் கட்டமைப்பை தயாரித்த சிங்கப்பூர் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் தகவல்களை வெளியாருக்கு வழங்குவதில் சிக்கல் காணப்படுவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். மேலும், இந்த உடன்படிக்கை இரு அரசுகளுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை என்பதால் அதன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் அரசின் தலையீடு பொருத்தமானது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்கமைய RAMIS கட்டமைப்பு தொடர்பான கொள்முதல் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பில் சிக்கல் நிலைமை காணப்படுவதால் இந்தக் கட்டமைப்பை நாட்டுக்குப் பொருத்தமான வகையில் செயற்படும் நிலைமைக்கு கொண்டுவர முடியுமா என்பது தொடர்பில் விசாரணை செய்து முடிவை வழங்குவதற்காக அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் இரண்டு உப குழுக்களை நியமிப்பதற்கு முன்மொழியப்பட்டது.

அத்துடன் மொரட்டுவ பல்கலைக்கழகம், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA), உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சு ஆகியன இணைந்து நியமிக்கப்படும் குழுவினால் RAMIS மென்பொருள் கட்டமைப்பை இற்றைப்படுத்த முடியுமா என்பது தொடர்பில் கண்டறியப்படவுள்ளது.

அஹ்ஸன் அப்தர்

அட்டவணை 18 :- உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2012 - 2016- வரி அடிப்படை பகுப்பாய்வு										
வரி வகை	2012		2013		2014		2015		2016	
	சேகரிப்பு (ரூபாவில்)	%	சேகரிப்பு (ரூபாவில்)	%	சேகரிப்பு (ரூபாவில்)	%	சேகரிப்பு (ரூபாவில்)	%	சேகரிப்பு (ரூபாவில்)	%
வருமான வரி	157,729	35.57	199,070	40.42	191,960	37.33	256,435	47.56	238,399	37.16
பொருளாதார சேவைக் கட்டணம்	14,864	3.35	6,596	1.34	6,155	1.2	6,148	1.1	20,458	3.19
பெறுமதிசேர் வரி	204,656	46.15	217,687	44.2	237,915	46.27	214,237	38.23	283,451	44.18
பத்திரம் மற்றும் சூளாட்ட அறவிடு	289	0.07	592	0.12	815	0.16	832	0.15	1,884	0.29
பங்கு கொடுக்கல் வாங்கல் அறவிடு	1,285	0.29	1,197	0.24	2,048	0.4	1,395	0.25	738	0.12
புரள்வு வரி	138	0.03	218	0.04	472	0.09	16	-	17	-
முத்திரைத் தீர்வை	6,535	1.47	6,884	1.4	7,918	1.54	11,596	2.07	10,651	1.67
பொருட்கள் சேவைகள் வரி	12	-	16	-	3	-	0.88	-	1.59	-
தேசிய பாதுகாப்பு அறவிடு	4	-	2	-	14	-	12	-	8	-
நிர்மாணக் வைத்தொழில் உத்தரவாத அறவிடு	710	0.16	751	0.15	842	0.16	753	0.13	259	0.04
தேசவ	57,106	12.88	59,397	12.06	65,354	12.71	67,911	12.12	84,066	13.1
காணி வரி	-	-	97	0.02	579	0.11	1,066	0.19	23	-
வாகன உரித்துடமை விதிப்பனவு	-	-	-	-	-	-	-	-	1,579	0.25
சூதாடல்வரி வரி	-	-	-	-	-	-	-	-	11	-
சமூகப் பொறுப்பு வரி	127	0.03	32	0.01	85	0.02	20	-	1	-
மொத்த சேகரிப்பு	443,455	100	492,539	100	514,160	100	560,422	100	641,546	100





2.12 பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணத்தொகையாக ரூபா 20,458 மில்லியன் சேகரிக்கப்பட்டதுடன், மொத்த வருமான சேகரிப்புகளில் பங்களிப்பு 3.19% ஆக இருந்துள்ளது. இது குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டின் 97% ஆகும்.

அட்டவணை 16 – பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு			
ஆண்டு	வருமான மதிப்பீடு (ரூபா)	வருமான சேகரிப்பு (ரூபா)	%
2016	21,000,000,000	20,458,175,363	97%
2015	6,500,000,000	6,148,447,689	95%

அட்டவணை 12 –மொ.உ.உற்பத்திக்கான பெ.சே.வரியின் பங்களிப்பு தொடர்பான துறை ரீதியான பகுப்பாய்வு						
துறை	2015		2016		மொ.உ.உற்பத்தியில் பெசேவ சேகரிப்பின் சதவீதம்	
	தேறிய சேகரிப்பு (ரூபா)	%	தேறிய சேகரிப்பு (ரூபா)	%	2014	2015
உற்பத்தித் துறை	28,894,521,159	13.49%	35,412,908,090	12.49%	0.26%	0.29%
உற்பத்தியல்லா துறை	101,616,031,540	47.43%	132,702,369,902	46.82%	0.91%	1.12%
இறக்குமதிகள் மீதான	83,726,432,785	39.08%	115,336,235,788	40.69%	0.75%	0.97%
மொத்தம்	214,236,985,484	100.00%	283,451,513,780	100.00%	1.92%	2.39%

சண்டே சாம்பார்

★நீண்ட காலத்திற்கு ஒத்திவைக்கப்படுமா தேர்தல்?

★மொரட்டுவ முன்னாள் மேயரை திட்டித்தீர்த்த பெசில்

★ மரிக்கார் எம்.பியிடம் 'பார்ட்டி' கேட்ட ரணில்

உள்ளூராட்சித் தேர்தலை திட்டமிட்ட திகதியில் நடத்தலாமா அல்லது ஒத்திவைப்பதா அல்லது மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதா என்பதை தேர்தல் ஆணைக்குழு விரைவில் அறிவிக்கவுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவில் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடனான கலந்துரையாடல் கடந்த வியாழனன்று நடந்தது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட அனைத்து அரசியல் கட்சிகளும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தின. பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசமும் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. பொதுஜன பெரமுனவினால் கொண்டு வரப்பட்ட ஜனாதிபதி, பொதுஜன பெரமுனவின் அரசாங்கம், பொதுஜன பெரமுன பெரும்பான்மையாக உள்ள அமைச்சரவை ஒரு தீர்மானத்தையும், கட்சி பிறிதொரு தீர்மானத்தையும் எடுக்கின்றனவா என ஏனைய கட்சிகள் கேள்வியெழுப்பின.

பெரமுனவின் அமைச்சர்கள் உறுதியான முடிவெடுத்தாலே தேர்தலை நடத்தலாம் என சுட்டிக்காட்டினர். எம்.ஏ.சுமந்திரனும் இதனை சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த சாகர காரியவசம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை போலவே பொதுஜன பெரமுனவில் பல கட்சிகள் உள்ளதாகவும், பெரமுன தனியாக தீர்மானமெடுப்பதில்லையென்றும் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தலை நடத்தக் கோரும்போது, ரணில் விக்கிரமசிங்க என்ற ஒருவர்தான் தேர்தலுக்கு எதிராக உள்ளார். எனவே சட்ட நடவடிக்கைக்கு செல்ல வேண்டும் என கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த சட்டத்தரணிகள் சிலர், தேர்தல் ஆணைக்குழுவை நீதிமன்றத்திற்கு செல்லுமாறும், எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் இலவசமாக நீதிமன்றத்தில் முன்னிலையாக தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர். அங்கு கருத்து கூறிய எம்.ஏ.சுமந்திரன், தேர்தல் ஆணைக்குழு நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டுமென கேட்டுக்கொண்டார். நிறைவேற்றதிகாரமிக்க ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடர முடியாதே தவிர, நிதியமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக வழக்கு தொடரலாமென சுட்டிக்காட்டினார்.

உடனடியாக உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துமாறு அனைத்து அரசியல் கட்சிகளும் கையொப்பமிட்டு கடிதம் தருவதாகவும், தேர்தல் ஆணைக்குழுவை சட்ட நடவடிக்கைக்கு செல்லுமாறும் கட்சிகள் வலியுறுத்தின.

தேர்தலை தடுக்க அரச தரப்பால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து தேர்தல் ஆணையாளர் விளக்கமளித்தார். ரணில் ஆதரவு ஊடகங்கள் மூலம் போலிப்பிரசாரம் செய்யப்படுவதை சுட்டிக்காட்டிய அவர், அந்த ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டதை போல தேர்தல் ஆணைக்குழுவுக்குள் பிளவு இல்லையென்றார். பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தவிர்த்த மிகுதியாக தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் இந்த கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

சார்ள்ஸ் பதவிவிலகுவதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அவரோ, ஜனாதிபதியோ அறிவிக்கவில்லை, தற்போதுவரை அவர் பதவியில் தொடர்வதாகவே கருதப்படுகிறது என்றார்.

கடந்த தேர்தல் கொடுப்பனவு பொலிஸ் திணைக்களத்திற்கு இன்னும் வழங்கப்படவில்லையென்பது போலிச்செய்தியென தெரிவித்தார். வழக்கமாக தேர்தல்களின் பின்னரே அரச அச்சகத்திற்கு பணம் வழங்கப்படுவதை சுட்டிக்காட்டிய அவர், இம்முறை வாக்குச்சீட்டு அச்சிடப்படுவதற்கு முன்னரே பணம் கோருவது தேர்தலை தடுக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் ஓர் அங்கமென்பதை சுட்டிக்காட்டினார்.

அத்துடன், விசேட ஆணையாளர் ஒருவரை நியமித்து உள்ளூராட்சி சபைகளை பராமரிக்க முயற்சிக்கப்படுவதாக வெளியான தகவல்களை சுட்டிக்காட்டிய தேர்தல் ஆணையாளர், அது சட்டமீறல் என்பதுடன், பெரும் குழப்பங்களை ஏற்படுத்தும் என்றார்.

அனைத்து தரப்பினரது கருத்துகளையும் கேட்டறிந்த தேர்தல் ஆணைக்குழு, தேர்தல் தொடர்பான உறுதியான முடிவை விரைவில் அறிவிப்பதாக தெரிவித்தது.

அமைப்பாளர் மீது பாய்ந்த பெசில்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்ட அமைப்பாளர்களுக்கிடையிலான கூட்டமொன்று நெலும் மாவத்தையில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் கடந்த வியாழன் நடைபெற்றது. இதன்போது அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்‌ஷவிற்கும் மொரட்டுவை நகர சபையின் முன்னாள் மேயர் சமன் லால் பெர்னாண்டோவிற்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தல் மற்றும் மே தினம் குறித்து இங்கு விரிவாக பேசப்பட்டுள்ளன. இதன்போதே பெசில் ராஜபக்‌ஷ மற்றும் சமன் லால் பெர்னாண்டோ ஆகியோருக்கு இடையில் இந்த வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

மொரட்டுவை மேயர் சமன்லால் பெர்னாண்டோ தலைமையிலான குழு கோல்பேஸ் 'கோட்டா கோ கம' போராட்டத்தை தாக்கியதாக பெசில் இங்கு பகிரங்கமாக குற்றம் சாட்டினார். சமன்லால் கட்சியிலிலிருந்து இராஜினாமா செய்திருந்தால் தாமரை மொட்டு வெற்றி பெற்றிருக்கும் எனவும் பெசில் தெரிவித்தார். உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என சமன்லால் கூறியதையடுத்தே பெசில் ஆத்திரமுற்றதாக தெரிகிறது.

சமன்லால் தலைமையிலான குழு கோட்டா கோ கம போராட்டத்தை தாக்கியதற்காக அதற்கு பழித்தீர்க்கும் வகையிலேயே ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு தீ வைத்ததாக பெசில் சமன்லாலிடம் தெரிவித்தார். சமன்லாலின் வீட்டிற்கு தீ வைக்கப்பட்டது கூட அவரின் சொந்த தவறு காரணமாகவே என்றும் பெசில் இங்கு தெரிவித்துள்ளார். அப்போதைய ஜனாதிபதி கோட்டபாயவும் தானும் போராட்டக்காரர்களை தாக்க வேண்டாம் என்று கூறியபோதும் மக்களை அலரி மாளிகைக்கு சமன்லால் குழுவினர் அழைத்ததாக பெசில் குற்றம் சாட்டினார். 2022 மே 9ஆம் திகதி கோல்பேஸ் போராட்டம் மீதான தாக்குதலுக்கு மொரட்டுவ முன்னாள் மேயர் சமன்லால் நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும் என பெசில் தெரிவித்துள்ளதன்மூலம் அந்த தாக்குதலுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நேரடி சம்பந்தம் இருப்பது பகிரங்கமாக தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், பெசில் - சமன்லால் இருவரின் சண்டையானது மக்களை திசைதிருப்பும் வகையில் திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு நாடகமென சமூக ஊடகங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. போராட்டக்காரர்களின் தாக்குதல்களுக்கு கீழ்மட்ட உறுப்பினர்களே காரணம் என்ற ஒரு தோற்றப்பாட்டை மக்கள் மத்தியில் ஏற்படுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மேல்மட்ட உறுப்பினர்கள் சதி வேலைகளில் ஈடுபடுவதாக விமர்சனங்கள் வெளிவந்துள்ளன.

எதிர்க்கட்சிக்கு சென்ற ரணில்

சர்வதேச நாணய நிதிய அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய ரணில், அந்த உரைக்குப் பின்னர் சபையின் வெளியே வந்து பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி பக்க வாயிலுக்குச் சென்றார். ஜனாதிபதி எதிர்க்கட்சி எம்.பிக்கள் இருக்கும் பக்கம் சென்றதை ஆளுங்கட்சி எம்.பிக்கள் வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலரை அங்கு கண்ட ரணில் அவர்களுடன் பலதும் பத்தும் பேச ஆரம்பித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் நிறைவேற எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஒத்துழைப்பினை வழங்கவேண்டுமெனவும் ரணில் இங்கு கேட்டுக்கொண்டார்.

அப்போது சுவாரஷ்யமான விடயமொன்றும் நடந்தது. அந்த இடத்தில் நின்ற மரிக்கார் எம்.பியை நோக்கி எப்போது பார்ட்டி தரப்போகிறீர்கள்? என்று கேட்டார் ரணில். எதற்கு பார்ட்டி? என்று அதற்கு மறுகேள்வியுடன் வினவினார் மரிக்கார் எம்.பி. இல்லை, நீங்கள் திட்டமிட்டு முஜிபுர் ரஹ்மான் எம்.பியை வெளியே அனுப்பி உங்கள் திட்டத்தில் வெற்றியடைந்துவிட்டீர்களே. அதற்குத்தான் பார்ட்டி என்று ரணில் கூற அங்கு நின்ற எம்.பிக்கள் அனைவரும் சத்தமாக சிரித்து விட்டனர்.

சஜித் பிரேமதாச பக்கம் திரும்பிய ரணில், அரசின் எல்லா முயற்சிகளையும் கண்டபடி விமர்சிக்காமல் ஒத்துழைப்புகளையும் தருமாறு வினயமாக கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில், ஆளுங்கட்சியின் பாராளுமன்ற குழுக்கூட்டம் கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது.

புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிக்குமாறுகோரி ஆளுங்கட்சியின் எம்.பிக்கள் பலர் ஜனாதிபதி ரணிலிடம் கோரிக்கை விடுத்தனராம்.

பிரசன்ன ரணதுங்க, ரமேஷ் பத்திரன, மஹிந்தானந்த அளுத்கமகே, சிந்தக்க மாயாதுன்ன, சனத் நிஷாந்த, சஹன் பிரதீப், சஞ்சீவ எதிரிமான்ன, மதுர விதானகே ஆகியோரே இவ்வாறு கோரிக்கை விடுத்தனராம்.

எம்.பிக்களின் வீடெரிப்பு நடந்தபோது இப்போதுள்ள பொலிஸ் மா அதிபர் எதுவும் செய்யவில்லையென்றும் எதிர்காலத்தில் பலமான ஆட்சியை முன்னெடுக்க திறமையான ஐ.ஜீ.பி. ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென்றும் எம்.பிக்கள் இங்கு வலியுறுத்திக் கூறியுள்ளனர். ஆனாலும் பொலிஸ் மா அதிபர் விடயத்தில் தேவையில்லாத நகர்வுகளை மேற்கொண்டு எதிர்க்கட்சிகளுக்கு பேசுபொருளை வழங்கிவிடக் கூடாதென்று ஜனாதிபதி ரணில் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இப்போது பணியாற்றும் சந்தன விக்கிரமரத்னவுக்கு சேவை நீடிப்பை வழங்குவதற்கு ஜனாதிபதி ஆலோசிப்பதாக தெரிகிறது.

ஊடகப் பிரதானிகள் சந்திப்பில் ஜனாதிபதி

தெற்காசியாவிலேயே சிறந்த ஊழலுக்கு எதிரான சட்டத்தை இலங்கை பாராளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குறித்த சட்டமூலத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் எதிர்க்கட்சி பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் வியாழக்கிழமை (23) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

ஒரு வருடத்திற்கு முன்பு நாம் வங்குரோத்து நாடாக மாறினோம். IMF மற்றும் எங்கள் கடன் வழங்குநர்களின் ஆதரவுடன் நாங்கள் எங்கள் கடனை மறுசீரமைக்க வேண்டியேற்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இது வெறும் ஆரம்பம் தான். IMF ஆதரவு தொடர்பில் நிதி உத்தரவாதத்தைப் பெற்ற பிறகு, நம் நாடு வங்குரோத்து நாடாக கருதப்படமாட்டாது. இப்போது நாம் அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டும். எனவே இது முடிவல்ல. ஒருபுறம், இது ஆரம்பம் மட்டுமே. அடுத்ததாக கடன் தருபவர்களுடனும் கலந்துரையாட வேண்டும். கடன் வழங்குபவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அதேநேரம், எமக்கு நான்கு வருட வேலைத்திட்டமும் உள்ளது. அதனால்தான் இந்த ஒப்பந்தத்துக்கு பாராளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

நான் அதை சட்டப்படி செய்ய விரும்பவில்லை. ஆனால் பாராளுமன்றத்தில் இந்த உடன்படிக்கைக்கு வாக்களிப்பது எங்களை மேலும் பலப்படுத்துகிறது. இதற்கு மக்கள் ஏற்கனவே வாக்களித்துள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கொள்கையை நாடு ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை கடன் வழங்குநர்களுக்கு காட்ட வேண்டும். எனவே முதலில், இது ஒரு கடன் மறுசீரமைப்பு, ஆனால் கடன் மறுசீரமைப்பு மட்டும் அல்ல, நாம் அதை நமது பொருளாதார மறுசீரமைப்பாக மாற்ற வேண்டும்.

நாம் அரசாங்க வரவு - செலவுத் திட்டத்தை சிறப்பாகக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். ஆனால் இது எங்களுக்கு முதன்மை வரவு - செலவுத் திட்ட மேலதிகம் மற்றும் வருமான அதிகரிப்பை உறுதி செய்கிறது.

நாம் மேற்கொள்ளும் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள், பொருளாதார வளர்ச்சியை அடைய உதவும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நாம் மேலும் தாராளமயவாதத்தை (லிபரல்) தொடருவோம். தாராளமயம் என்பது நல்ல வார்த்தையல்ல என்றும், வெளிநாட்டு முதலீட்டுக்காக அதைத் திறந்து விடுகிறோம் என்றும் நினைப்பவர்கள் இருக்கிறார்கள்.

நாம் பல்வேறு முதலீட்டுத் துறைகள் மற்றும் உற்பத்தித் துறையில் கூடுதல் அந்நிய முதலீட்டையும் எதிர்பார்த்து வருகிறோம். அதன் மூலம் நாம் தொடர்ந்து செல்ல வேண்டும் என்பதே அர்த்தமாகும்.

10 வருடங்களில் நடுத்தர வருமானம் பெறும் ஒரு நாடாக மாறும் திட்டத்திற்கு இந்தக் கடனை அடைப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, முதல் பணியாக இந்த உடன்படிக்கையை அங்கீகரித்து அதன் பின்னர் கடனை மறுசீரமைக்க வேண்டும் என்றும் கடனை திருப்பிச் செலுத்தும் முறையை அதன்போதே அறிந்துகொள்ளலாம் என்றும் தெரிவித்தார். இரண்டாவதாக, விவசாயம் மற்றும் மீன்பிடி கைத்தொழில் நவீனமயமாக்கப்பட வேண்டும். மூன்றாவதாக, இலங்கையை பிராந்திய விநியோக மையமாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சுற்றுலாத் துறை, டிஜிட்டல் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரம் ஆகியவை நிச்சயமாக மேம்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட வேண்டும். அதன் மூலம் புதிய இலங்கையை கட்டியெழுப்ப முடியும்.

இன்னும் 25 வருடங்களில் அதாவது 2048ஆம் ஆண்டளவில் இலங்கையை உயர் நடுத்தர வருமான நாடாக மாற்றுவதே எனது நோக்கம் ஆகும். ஒரே இடத்தில் தேக்க நிலையில் உள்ள பொருளாதாரத்துடன் எம்மால் முன்னேற முடியாது. நம் நாட்டில் நடந்த அனைத்து பிரச்சினைகளும் இந்த பிரச்சினையுடன் தொடர்புடையவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

1971இல் ஏற்பட்ட வேலையில்லாப் பிரச்சினையைப் போன்று, 1983இல் மொழி மட்டுமன்றி, தமிழ் இளைஞர்களுக்கு, வேலைவாய்ப்பின்மையால் பிரச்சினைகள் ஏற்பட்டன. அதுதான் 1989இலும் நடந்தது. எங்களுக்கு நிறைய பிரச்சினைகள் இருந்தன.

பொருளாதார வளர்ச்சி இன்மை மற்றும் உறுதியற்ற தன்மை இரத்தம் சிந்துவதற்கு வழிவகுத்தது. இப்போது புதிதாக தொடங்க ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இது ஒரு வரலாற்று செயல்முறை. அதற்கு உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறேன். இந்த சர்வதேச நாணய நிதியத்தின் செயல்முறை பற்றி அறிந்து கொள்ள எந்த நேரத்திலும் அதிகாரிகளுடன் பேசுவதற்கு பத்திரிகையாளர்களுக்கு வாய்ப்புள்ளது.

ஆனால், இந்த உடன்படிக்கையை நாம் முன்னெடுப்பதா இல்லையா என்பதிலேயே இலங்கையின் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இல்லை என்றால் வருங்கால சந்ததி நம்மை சபிக்கும்.

எனவே, அனைவரின் வாழ்க்கையையும் எளிதாக்கும் வகையில் நமது பொருளாதாரத்தில் இந்த நீண்ட கால மாற்றங்களை ஏற்படுத்த உங்கள் ஆதரவை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஒப்பந்தத்தை நாங்கள் முதல் பணியாக அங்கீகரித்து, கடனை மறுசீரமைக்கச் செல்கிறோம். அதன் பிறகே கடனை எப்படி செலுத்துவது என்பதை தீர்மானிக்க வேண்டும். எங்கள் நிகழ்ச்சிகள் முடிவடையவில்லை. ஏன் முடிக்கவில்லை? அது அரசியலாக மாறியது. இல்லையெனில், அது பொதுமக்களின் கருத்துக்கு உட்பட்டது. மக்கள் கருத்தை உருவாக்கியது ஊடகங்கள்தான். இம்முறை இத்திட்டம் வெற்றியடைய ஊடகங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கோருகிறேன்.

மேலும், எம்.சி.சி. மானியத்தை இலங்கை பெறப்போகும் போது, சில தரப்பினர் நாட்டை பிளவுபடுத்துவதாக குற்றம்சாட்டினர். IMF வந்ததும் மேற்குலகிடம் சரணடைவோம் என்று சொன்னார்கள். அதனால் இப்படியே தொடர்வது கடினம். எனவேதான் சர்வதேச நாணய நிதியத்தின் 17ஆவது வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்ய இணையுமாறு ஊடகங்களைக் கோருகின்றோம்.

இந்த செயல்முறை மிகவும் கடினம். நாம் அனைவரும் அதை உணர்கிறோம். இது நான்கு வருட செயல்முறை. இது 2026இல் முடிவடையும். என்னுடன் வெகு தூரம் பயணித்தவர்கள், எனது கொள்கைகள் சரி என்று சொன்னவர்கள் இப்போது எனக்கு எதிராக பேசுகிறார்கள்.

அதனால் எதிர்த்தவர்கள் ஒன்று சேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாங்கள் இப்போது கடினமான இடத்தில் இருக்கிறோம். பழைய விளையாட்டுகளை மீண்டும் விளையாட முடியாது. பழைய விளையாட்டுகளைத் தொடர்ந்தால் மீண்டும் விழ நேரிடும். எனவே, கடந்த காலத்தை மறந்து முன்நோக்கிச் செல்ல வேண்டும்.

நாங்கள் அனைவரும் தவறு செய்தோம். இதை இப்போது ஏற்றுக்கொண்டு எங்களை ஆதரிக்கவும். இந்தப் பணத்தில் சம்பளம் வழங்குகிறோம். இது திருட்டல்ல. திருட்டு என்ற கதைகளினால், இவைகளை இழந்தோம். இதுபோன்ற கதைகளைப் பரப்ப வேண்டாம். இப்படி கூறுபவர்கள் இதைவிட திருடுகின்றனர். இங்கிருப்பவர்களைவிட எனது சம்பளம் குறைவாகவே இருக்கிறது. எமது மனப்பான்மையை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும். நான் திருடர்களைப் பாதுகாக்க வந்ததாகக் குற்றம் சாட்டினார்கள். ஆனால், IMF உடன் ஆலோசித்து தெற்காசியாவிலேயே சிறந்த ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தைக் கொண்டு வருகிறோம். எதிர்க்கட்சிகள் கூச்சலிட்ட போதும் இப்படி எதனையும் செய்யவில்லை. நீதியமைச்சர் இதுகுறித்து எதிர்க்கட்சிகளுடனும் ஆலோசனை நடத்துவார்.

அனைத்துக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காகவே இதனை பாராளுமன்றத்தில் முன்வைத்தோம். இதை யாரும் எதிர்க்க முடியாது. சில புதிய சட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நாங்கள் புதிய சட்டங்கள் சிலவற்றையும் கொண்டுவரவுள்ளோம். பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

ஊடகங்களை ஒடுக்கும் தேவை எங்களுக்கு இல்லை. ஊடகங்கள் என்னையே அதிகமாக விமர்சிக்கின்றன. எனக்கென்று ஊடகங்கள் இல்லாமல் போயின. ஊடகங்கள் மீதிருந்த குற்றவியல் சட்டத்தை நான் தான் நீக்கினேன். தகவல் அறியும் உரிமையையும் நான்தான் வழங்கினேன். சுயாதீன ஆணைக்குழுக்களை மூன்று தடவைகள் பாராளுமன்றத்திற்கு கொண்டுவந்தேன். இப்படி இருக்கும்போது ஊடகங்களை ஒடுக்கியதாக எப்படி கூற முடியும்?

தேசியப் பிரச்சினையைத் தீர்க்கச் சொல்கிறார்கள். ஆனால் நான் அந்த விடயங்களை செய்து கொண்டிருக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் இணைந்து ஏனைய பிரச்சினைகளை களைய முயற்சிப்பதாக குற்றம் சுமத்தப்படுகிறது. இதுபோன்ற குற்றச்சாட்டுகள் ஏற்புடையதல்ல என்று ஊடகங்களில் யாரும் கூறவில்லை. தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் செயற்படுகின்றோம் என முன்னரே கூறியிருந்தேன். எந்த ஊடகமும் அதை எதிர்க்கவில்லை. அதனை பாராளுமன்றத்தில் அனைவரும் ஒப்புக்கொண்டனர். இந்தப் போர்வையில் இனவாதத்தை உருவாக்காதீர்கள். ஒரு ஊடக நிறுவனம் இனவாத செயற்பாடுகளை முன்னெடுக்கிறது. ஒரே விடயத்தை நான்கு நாட்கள் ஒளிபரப்பினார்கள். இதனைப் பார்த்துவிட்டு தமிழ் ஒருவர் தாக்கப்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை ஒளிபரப்பினால் பரவாயில்லை. அதற்கு இன்னொரு பக்கம் இருப்பதைக் காட்ட வேண்டும். ஆர்ப்பாட்டங்களைக் காட்ட வேண்டாம் என்றும் எனது நலவுகளை மாத்திரம் ஒளிபரப்புமாறும் நான் கேட்கவில்லை.

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் மட்டுமின்றி, இலாபத்தில் இயங்கும் அரச நிறுவனங்களையும் மறுசீரமைக்க அரசு முடிவு செய்துள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது கேள்வி எழுப்பினார். இதற்கு ஜனாதிபதி கீழ்கண்டவாறு பதிலளித்தார்.அரசாங்கம் ஏன் வியாபாரத்தில் ஈடுபட வேண்டும்? அது அரசாங்கத்தின் வேலையல்ல. டி.எஸ்.சேனநாயக்காவின் காலத்தில் அவ்வாறான வேலைகள் இல்லை. ஆனால் நாட்டில் பணம் இருந்தது. அப்போது, இங்கிலாந்துக்கு கடன் கொடுக்கவும், கல்ஓயா திட்டத்தை முன்னெடுக்கவும் பணம் இருந்தது.

இப்போது மொரகஹகந்த வேலைத்திட்டத்திற்கு நாம் சீனாவிடம் பணம் கேட்கிறோம். அரச நிறுவனங்கள் வியாபாரம் செய்ய வேண்டும் என்று எந்த நாட்டில் சட்டம் உள்ளது? ஒரு நாடாக நாம் வேகமாக வளர்ச்சியடைய வேண்டும். அரசு வியாபாரங்களை செய்ய வேண்டும் என்று நாம் மட்டுமே கூறிக்கொண்டிருக்கிறோம்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவுமே அரசாங்கம் இருக்கிறது. இன்று நல்ல கல்வி முறை இருக்கிறதா? கடந்த ஆண்டு கல்வியை விட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அதிக பணம் கொடுத்துள்ளோம். கல்வியை விட மின்சார சபைக்கு அதிக பணம் வழங்கினோம். டி.எஸ்.சேனநாயக்க பிரதமராக இருந்த காலத்தில் இதுவொன்றும் இருக்கவில்லை. தனியார்துறையினர் வியாபாரம் செய்யும் போது அரசுக்கு வரி கிடைக்கும். இங்கிலாந்தில் டெலிகாம் யாருக்கு சொந்தம்? தனியார்த்துறைக்கு பிரான்சிலும் அமெரிக்காவிலும் இதே நிலைதான். நாமும் அவ்வாறே அபிவிருத்தி செய்ய வேண்டும். அல்லது வடகொரியா போல் விழ வேண்டும். நீங்கள் விரும்பும் ஒன்றைச் சொல்லுங்கள் - என்றார் ஜனாதிபதி.

ஆர்.சிவராஜா
mesivaraj@yahoo.com

ஜோசப் ஸ்டாலினுக்கு ஒரு கடிதம் ....

வணக்கம் ஜோசப் ஸ்டாலின் ...

எப்பிடி சுகமா இருக்கிறியளே.. உங்களுக்கு ஒரு கடுதாசி எழுத வேணும் எண்டு கன நாளா நெச்சனான். ஆனால், இண்டைக்குத்தான் நேரம் கிடைச்சுது. ஊர்வலம், ஆர்ப்பாட்டம், கூட்டங்கள் எண்டு திரியற நீங்கள் என்ரை கடுதாசியை வாசிப்பியளோ எண்டு ஒரே சமுசியமா கிடக்கு எண்டாலும் எழுத வேணும் எண்டு தீர்மானிச்ச படியால எழுதிறன். உங்களை எனக்கு நல்லாப் பிடிக்கும். ஏனெண்டால், நானும் உங்களை மாதிரி ஒரு விடாக்கண்டன் கொடாக்கண்டன் கண்டியளோ. லேசிலை ஒண்டுக்கும் ஒத்துப்போக மாட்டன் என்னத்திலையும் ஒரு பிழை பிடிச்சு அதை வைச்சே கொஞ்சக் காலத்தைக் கடத்திப் போடுவன்.

நீங்கள் வாத்திமாரின்ரை பிரச்சினையளுக்காக அவையின்ரை உரிமைகளுக்காக இப்ப கன வரியங்களா போராட்டம் நடத்திறியள். வாத்திமாருக்கு எங்கையும் ஒரு பிரச்சினை எண்டால் உடனை நீங்கள் அங்கை நிப்பியள். இப்ப 2009க்குப் பிறகு நீங்கள் வடக்கு, கிழக்கிலையும் குறிப்பா வடக்கிலையும் வாத்திமாரின்ரை பிரச்சினையளுக்கு குரல் குடுக்கிறியள் நல்ல விஷயம். நீங்கள் ஒரு கொம்மியூனிஸ்ற்றின்ரை மகன் எண்ட படியாலை உங்களிட்டை உந்த போராடுகிற குணம் இயல்பாகவே வந்திட்டுது. அதாலதான் போராட்டம் எண்டு வந்தால் சரியோ பிழையோ முன்னுக்கு நிக்கிறியள். கொப்பர் தீவிர கொம்மியூனிஸ்ற் எண்ட படியாலைதான் உங்களுக்கு ஜோசப் ஸ்டாலின் எண்டு பெயர் வைச்சவராம். உந்தப் பெயரை வைச்சிருக்கிற படியாலையே உங்களுக்கு ஒரு அசாத்தியமான துணிவு வந்திருக்குது. உந்த துணிவு இருக்கிற படியாலதான் வாற அரசாங்கம் எது எண்டாலும் நீங்கள் போராட வெளிக்கிட்டு விடுவியள். இப்பிடி ஒரு போராட்ட குணம் இருந்தபடியால நீங்கள் வாத்திமாரின்ரை கன பிரச்சினையளுக்கு போராடித் தீர்வு எல்லாம் எடுத்துக் குடுத்து இருக்கிறியள். இப்பிடிப் போராடுகிற படியாலைதான் அடிக்கடி உள்ளுக்குப் போறதும் வெளியிலை வாறதுமா இருக்கிறியள். அரசியல்வாதியளுக்கு சிம்ம சொப்பனம் மாதிரி இருக்கிறியள். உண்ணான உங்களை இந்தப் பேரம்பலம் மனம் விட்டுப் பாராட்டுறன்.

ஆனால், யுத்தம் நடந்த காலத்திலை வடக்கு, கிழக்கிலை எத்தினையோ பிள்ளையள் வாத்திமார் அதிபர்மார் குண்டு வீச்சிலை துப்பாக்கிச் சூட்டிலை சாகேக்கை காயப்படேக்கை இல்லாட்டில் பள்ளிக்கூங்கள் அழியேக்கை உவை எல்லாரும் ஊர் ஊரா காடு காடா இடம் பெயரேக்கை அவையிலை எத்தினையோ பேர் காணாமல் போகேக்கை இல்லாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு கீழை கைது செய்யப் படேக்கை இல்லாட்டில் அகதிமுகாம்வழியை மிருகங்களை மாதிரி அடைபட்டு இருக்கேக்கை நீங்கள் அதுகளை எதிர்த்து குரல் குடுத்ததாகவோ இல்லாட்டில் ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம், ஊர்வலம் செய்ததாகவோ இல்லாட்டில் ஒரு அறிக்கை தன்னும் எதிர்த்து வெளியிட்டதாகவோ எனக்கெண்டால் ஞாபகம் இல்லை. அப்ப நீங்களும் நடந்த யுத்தத்துக்கு நேரடியாகவோ இல்லாட்டில் மறைமுகமாகவோ ஆதரவு தெரிவிச்சு இருக்கிறியள்.

எனக்கு நல்ல ஞாபகம் இருக்குது, 2007ஆம் ஆண்டு அப்ப மஹிந்த ஜனாதிபதியாக இருகேக்கை ஒகஸ்ட் 13 அண்டைக்கு நீங்களும் மற்ற ஆசிரியர் சங்கங்களும் சேர்ந்து அவரை சம்பள உயர்வு கேட்டு சந்திச்சனீங்கள். அந்த நேரம் சம்பள அதிகரிப்புக்கு ரூபா 9 பில்லியனுக்கும் அதிகமாகத் தேவைப்படுகிறது உவ்வளவு காசு எங்களிட்டை இல்லை. அப்படித் தாறது எண்டால் வடக்கு, கிழக்கிலை இருந்து ஆமியை எடுக்க வேணும் அப்பிடியோ நீங்கள் கேக்கிறியள். உங்களுக்கு சம்மதமோ எண்டு கேக்க நீங்கள் எல்லாரும் வாயை மூடிக்கொண்டு கப்சிப் எண்டு இருந்தனியளாம். பேந்து, கூட்டம் முடிஞ்சு வெளியிலை வரேக்கை பேப்பர்காரர் சம்பள அதிகரிப்பு என்னவாம் எண்டு கேக்க நீங்கள் அரசாங்கம் கவிழ்ந்துவிட்டால் என்ன செய்யிறது எண்டு சொன்னியளாம் எண்டு பழைய பேப்பர்களிலை கிடக்குது. அதிலையும் ஜே.வி.பி. சார்பான இலங்கை ஆசிரியர் சேவை தொழிற்சங்கம், யுத்தம் எந்தக் காரணத்துக்கும் நிறுத்தப்படாமல் முன்னெடுக்கப்பட வேணும் எண்டு ஒற்றைக்காலிலை நிண்டது எல்லே.

அதுக்குப் பிறகு அதே வருஷம் செப்டெம்பர் 6ஆம் திகதி சுசில் பிரேமஜயந்த, கரு ஜயசூரிய மற்றும் ஜோன் செனவிரட்னவோடை நடந்த சந்திப்பிலும் நாங்கள் சமுர்த்திக்கே கூட ரூபா 5-6 பில்லியன்கள் மட்டுமே ஒதுக்கி இருக்கிறம். உங்களுக்கு எப்பிடி இதுக்கு 9 பில்லியன்களை ஒதுக்கேலும். நாங்கள் இந்தப் பெருந்தொகையை ஒதுக்கினம் எண்டால், அரசாங்கம் கவிண்டு போடும் எண்டவையாம் . அப்ப நீங்கள் பரவாயில்லை நீங்கள் இப்போதைக்கு சம்பளம் கூட்டத் தேவையில்லை. ஒரு சுற்றறிக்கை மட்டும் சம்பளத்தை கூட்டுவம் எண்டு விடுங்கோ எண்டு வலு பவ்வியமாக் கேக்க அவை எங்களுக்கு யுத்தம்தான் முக்கியம், அதாலை உதுகள் ஒண்டும் செய்யேலாது எண்டு சொல்லப் பேசாம வந்திட்டியளாம் எண்ட செய்தியும் பழைய பேப்பர்களிலை கிடக்குது கண்டியளோ. அது மாதிரி வேலை நிறுத்தங்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எண்டு அரசாங்கம் சொன்ன உடனை நீங்கள் எல்லாரும் பின்வாங்கிப்போட்டியள். அப்ப எல்லாம் உங்களுக்கு வாத்திமாரின்ரை பிரச்சினையை விட யுத்தம்தான் முக்கியமா இருந்தது. நான் முந்திச் சொன்ன மாதிரி அப்ப அந்த நேரத்திலை வடக்கு, கிழக்கிலை உள்ள வாத்திமார் பிள்ளையள் சாகிறதைப் பற்றி உங்களுக்கு கவலை இருக்கேல்லை என்ன நான் சொல்லுறது.

நீங்கள் உப்ப கிட்டடியிலை பேட்டி குடுக்கேக்கை இலங்கையில இருக்கிற சனங்கள் எல்லாத்துக்கும் எத்தினையோ பிரச்சினையள் கிடக்குது. ஆனால், அதுக்குரிய எந்தத் தீர்வும் அரசாங்கத்திட்டை இல்லை எண்டு சொன்னியள் உண்மைதான். ஆனால், உந்தப் பிரச்சினையள் உப்பிடி எல்லாம் பூதாகரமா வாறத்துக்கு காரணமா இருந்தது கோட்டவின்ரை முட்டாள்த்தனமான முகாமைத்துவம்தான் எண்டது எல்லாருக்கும் தெரியும். அப்ப இருந்த நல்லாட்சி அரசாங்கத்தை இல்லாமல் செய்து கோட்டாவைக் கொண்டு வந்த அறுபத்து ஒன்பது இலட்சம் வோட்டுகளிலையும் உங்கடை சங்க அங்கத்தவர்களும்தான் இருந்தவை. அவருக்கு அவை வோட் போடுறதுக்கு இருந்த ஒரே ஒரு கராணம் எனக்கு தெரிஞ்ச அளவிலை யுத்த வெற்றி வீரர் எண்ட அபிப்பிராயந்தான். அப்பிடி உங்கடை கோதாரி பிடிச்ச அங்கத்தவர்கள் கொண்டு வந்த ஜனாதிபதியாலைதான் உவ்வளவு பிரச்சினையளும் வந்தபடியால் நீங்களும் உந்தப் பிரச்சினயளுக்குக் காரணம் கண்டியளோ.

சனத்துக்கு பிரச்சினையள் இருக்குது எண்டது உண்மைதான். ஆனால், அதுக்காக நாங்கள் வரிசையிலை காத்து மழையுக்கையும் வெய்யிலுக்கையும் பனியுக்கையும் ராப்பகலா தின்னக் குடிக்க வழி ஒண்டும் இல்லாமல் நிண்டதை மறக்கேலாது. எத்தினையோ பிளைத்தாச்சியள், கிழடுகட்டை, வருத்தக்காரர் எல்லாரும் உந்த வரிசையிலை பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல், எரிவாயு, பால்மா, அரிசி, பருப்பு, சீனி, மருந்து எண்டு வாங்க நிண்டு சீரழிஞ்சதை மறக்கேலுமே. அப்பேக்கை அரசியல் செல்வாக்கு உள்ளவை அதிகார செல்வாக்கு உள்ளவை எல்லாரும் பின்பக்கத்தாலை தங்களுக்கு தேவையான சாமான்களை வாங்கேக்கை ஏழை பாழையள் எல்லே உப்பிடி வரிசையில நிண்டு கஷ்டப்பட்டதுகள். எத்தினை சனம் உந்த வரிசையிலை நிக்கேக்கை விழுந்து செத்ததுகள். இப்பதான் ஒருமாதிரி உந்த வரிசை யுகம் இல்லாமல் போயிருக்குது. சாமான் சக்கட்டு விலை எண்டாலும் அங்கினேக்கை இங்கினேக்கை அலையாமல்வாங்கக் கூடிய மாதிரி இருகெல்லே.

இப்பதான் ஐ.எம்.எவ். காசு வந்திருக்குது இனி அவங்களைப் பாத்து உலகவங்கி மாதிரி மற்ற ஆக்கள் மற்ற நாடுகள் கடன் தர எங்கடை இருக்கிற பிரச்சினையள் கொஞ்சம் கொஞ்சமா குறையும். அதுக்கு அரசாங்கத்துக்கு நேரம் குடுக்க வேணும் எல்லே சுடுகுது மடியைப் பிடி எண்டால் சரிவருமே. அதுசரி நீங்கள் சொல்லுற உந்த வாத்திமாரின்ரை சம்பளப் பிரச்சினை 97 இலை இருந்து இருக்கெல்லே. ஆனால், நீங்கள் சொல்லுறதைப் பாத்தால் அது என்னவோ இப்ப புதுசா வந்த பிரச்சினை மாதிரி எல்லே சனம் நினைக்குது. நீங்கள் உதுகளை முந்தி ஏன் தீர்க்கேலாமல் போனது. சில நேரம் போராடுறதுக்கு ஒரு பிரச்சினை வேணும் எண்டு போட்டு இழுத்து அடிக்கிறியளோ தெரியாது எண்டு சனம் பகிடி விடுகுது. இப்ப உள்ள பொருளாதாரப் பிரச்சினையுக்குள்ளை அரசாங்கம் வாத்திமாருக்கு உள்ள சம்பளத்தை தரவே ஆதளிமாதளிப் படேக்கை சம்பளத்தைக் கூட்டு எண்டு நாண்டு கொண்டு நிக்கிறது எனக்கெண்டால் நல்லாப் படேல்லை.

நீங்கள் ஒருக்கா உந்த வாத்திப் பெண்டுக்ளின்ரை உடுப்பு பிரச்சினை வரேக்கை எந்தவொரு நபருக்கும் தனக்கு ஏற்ற ஆடையை தெரிவு செய்யும் ஜனநாயக ரீதியான சுதந்திரம் இருக்கு எண்டு சொன்னியள் நல்ல விஷயம். ஆனால், உந்த உடுப்பு விஷயத்தை விட முக்கியமான ஒரு உரிமை கல்வி உரிமை. உங்கடை தொடர் வேலை நிறுத்தங்களாலை இந்த நாட்டிலை உள்ள மில்லியன் கணக்கான பிள்ளையளின்ரை அடிப்படை உரிமையான கல்வி உரிமையை நீங்கள் மறுக்கிறியள் எண்டது அம்மாவாண உங்களுக்கு விளங்கேல்லையோ. கோவிட் நேரம் கிடத்தட்ட ரெண்டு வரியம் பள்ளிக்கூங்கள் பூட்டிக் கிடந்ததாலை உந்தப் பெடி பெட்டையளின்ரை படிப்பு எத்தினையோ வருசங்கள் பின்னுக்குப் போட்டுது எண்டு அவங்கள் யூ என் காரங்கள் சொல்லுறது உங்களுக்கு விளங்கேல்லையோ. உந்த கோவிட் நேரம் வாத்திமார் படிப்பிக்காமல் சம்பளம் எடுத்தவை எல்லே. அதுமாதிரி இப்ப இருக்கிற பொருளாதாரப் பிரச்சினையள் தீர அரசாங்கம் உங்கடை சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு தரும் எண்ட நம்பிக்கை வைச்சு அதை கவிழ்க்க வேணும் எண்டு வெளிக்கிடாமை பெடி பெட்டையள் ஒழுங்காப் படிக்கிறதுக்கு ஒரு வழி பண்ணுங்கோ என்ன நான் சொல்லுறது. இதோடை இந்தக் கடுதாசியை முடிக்கிறன் தேவை எண்டால் பேந்து ஒரு கடுதாசி எழுதிறன் கண்டியளோ.

நன்றி

வணக்கம்

இப்படிக்கு பேரம்பலம்

பிற்குறிப்பு : நீங்கள் இப்ப எத்தினையோ வரியமா உங்கடை தொழில் சங்கத்திலை கிட்டடத்தட்ட ஒரு நிரந்தர பொதுச் செயலாளரா நிரந்தர கட்சித்தலைவர் மாதிரி இருக்கிறியள். மற்றவைக்கும் ஒரு சான்ஸ் உந்தப் பதவிக்கு வரக் குடுத்து மற்றவையின்ரை ஜனநாயக உரிமையை நிலைநாட்ட மாட்டியளோ எண்டு சில சனம் பறையுது.

சர்வதேச நாணய நிதியத்தில் ஈடுவைக்கப்பட்ட இலங்கை மக்கள்!

2023ஆம் ஆண்டு இறுதிக்குள் பணவீக்கத்தை 12%-18% ஆகக் குறைக்க இலக்கு

அரச வருவாயை மிக விரைவில் அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்

ஜூன் மாத இறுதிக்குள் தற்போதைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும்

சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பல்தரப்பு அமைப்புகளிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான நிதியுதவியை இலங்கைக்குப் பெறும் வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழுவினால் இலங்கைக்கு அனுமதி வழங்கியிருப்பது குறித்து மகிழ்சியடைகிறோம். இந்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் நமது சர்வதேச பங்காளிகள் அளித்த ஆதரவிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மகிழ்சியடைந்தாலும் உண்மையில் இலங்கை மக்களை அடகுவைத்தே இந்த நிதி பெறப்பட்டுள்ளது என்பதை இலங்கை மக்கள் அவைரும் சிந்திக்கவேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் தொடர்பாக - சுருக்கமாக அதன் வரலாற்றைப் பார்ப்போம்.

சர்வதேச நாணய நிதியம் (International Monetary Fund) அமெரிக்க டொலர் ஒழுங்குடைமையை பிரதானமாக பாதுகாப்பதற்காக 1945ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. எந்தவொரு முடிவும் 85% அதன் செயலாக்கக் குழுவின் ஆதரவுடன்தான் அமுல்படுத்தப்படலாம். இதில் கட்டுப்படுத்தும் 18 வீத அதிகாரத்தை ஐக்கிய அமெரிக்கா கொண்டுள்ளது.

அனைத்துலக நாணய நிதியம் முதலில் 1944இல் பிரெட்டன் வூட்ஸ் சிஸ்டம் பரிமாற்ற ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டது. பெரும் மந்தநிலையின்போது நாடுகளே தங்கள் வீழ்ச்சியடைந்த பொருளாதாரங்களை மேம்படுத்தும் முயற்சியில் வர்த்தகத்திற்குத் தடைகளை அதிகப்படுத்தின. இது தேசிய நாணயங்களின் பரிவர்த்தனை மற்றும் உலக வர்த்தகத்தில் சரிவுக்கு வழிவகுத்தது.

மவுண்ட் வொஷிங்டன் ஹோட்டலின் தங்கும் அறை, பிரெட்டன் வூட்ஸ் மாநாடு பங்கேற்பாளர்கள், IMF மற்றும் உலக வங்கி சர்வதேச நாணய நிதியத்தின் இந்த முடிவு மேற்பார்வையின் தேவையை உருவாக்கியது. சர்வதேச அரசாங்க ஒத்துழைப்புக்கான ஒரு கட்டமைப்பை பற்றி விவாதிக்க அமெரிக்காவின் நியூ ஹெம்சியிலுள்ள ப்ரெட்டன் வூட்ஸ் நகரத்திலுள்ள மவுண்ட் வொஷிங்டன் ஹோட்டலில் 45 அரசாங்கங்களின் பிரதிநிதிகள் மாநாட்டில் ஐரோப்பாவை மீண்டும் எப்படி கட்டியெழுப்புவது பற்றி விவாதிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியம், ஒரு உலகளாவிய பொருளாதார நிறுவனமாகக் கருதப்பட வேண்டிய பங்கு பற்றி இரண்டு கருத்துகள் இருந்தன. அமெரிக்கப் பிரதிநிதி ஹாரி டெக்ஸ்டர் வைட், அனைத்துலக நாணய நிதியம் ஒரு வங்கியைப்போலவே செயல்பட்டதை முன்னறிந்து கடன்களைப் பெறும் மாறிவங்கள் தங்கள் கடன்களை சரியான காலத்தில் திருப்பிச் செலுத்தும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்கிறார். வெள்ளை திட்டத்தின் பெரும்பகுதி, மேற்கொள்ளப்பட்ட இறுதிச் செயல்களில் அகற்றப்பட்டது. சர்வதேச நாணய நிதியம் ஒரு கூட்டுறவு நிதியமாக இருக்கும் என்று பிரிட்டிஷ் பொருளாதார வல்லுனர் ஜோன் மேனார்ட் கெயின்ஸ் கற்பனை செய்தார். அதில் உறுப்பினர்கள், மாறிவங்கள், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வேலைகள் தற்காலிக நெருக்கடிகளால் தக்கவைக்கக்கூடும். இந்தக் கருத்து சர்வதேச நாணய நிதியத்தை முன்மொழிகிறது. இது அரசாங்கங்களுக்கு உதவியது மற்றும் இரண்டாம் உலக யுத்தத்திற்கு விடையிறுப்பாக புதிய உடன்படிக்கையின்போது ஐக்கிய மாகாணங்களில் செயல்பட்டது.

மே மாதம் 2010இல் IMF மற்றும் கிரேக்க பிணை எடுப்பு ஆகியவற்றின் மொத்த கிரேக்க பிணை எடுப்புக்கான கிரேக்க அரசாங்க கடன் நெருக்கடி மீட்புப் பொதிகளில் - 311 பில்லியன் யூரோ பங்குகளில் பொது கடன் பற்றாக்குறையால் தொடர்ந்து ஏற்படும் பொதுக் கடன். பிணை எடுப்பின் ஒரு பகுதியாக கிரேக்க அரசாங்கம் சிக்கன நடவடிக்கைகளை எடுக்க ஒப்புக்கொண்டது. இது பற்றாக்குறையை 2009இல் 11%இலிருந்து 2014இல் "3 சதவிகிதம் குறைவாக" குறைக்கும் என்று கூறியது. பிணை எடுப்பில் சுவிஸ், பிரேசிலிய, இந்திய, ரஷ்ய மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆர்ஜென்டினியர் இயக்குநர்கள், கிரேக்க அதிகாரிகள் தங்களைத் தாங்களே (Haircut) நிதி குறைப்பு போன்ற கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் சேர்க்கவில்லை

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று ஒகஸ்ட் மாதம் 24ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்தது.

இந்தக் குழுவின் விஜயத்தில் இலங்கை அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைமைகளுடன் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

கடனுதவித் திட்டத்தில் ஊழல் ஒழிப்பும் நிர்வாக சீர்த்திருத்தம், வரிகள் அதிகரிப்பு, திணைக்களங்களில் ஊழியர்களை குறைத்தல் என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

ரணில் IMF கடனை பெற்றுவிட்டார். இவரால்தான் இதை பெற முடியும் என கூறுவது தவறு. யார் ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்தாலும் காலம் தாமதித்தாவது முழுமையாக நீக்கப்படாது எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

உண்மையில் சர்வதே நாணய நிதியத்தின்மூலமாக இலங்கைக்கு கிடைத்த நிதி மக்களுக்கே கமையாக மாறும். இப்போதே மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டமையால் சாதரண கூலித்தொழிலாளி தொடக்கம் மத்திய தர மக்கள் - ஏன் அரச ஊழியர்கள் கூட பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த உதவியினால் இலங்கையின் நிலையை மேம்படுத்துவதற்கும் சர்வதேச மூலதனச் சந்தைகளை அணுகுவதற்கும் வாய்ப்பாக இருக்கலாம்

அத்தோடு முதலீட்டாளர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஏனைய விடயங்களுக்கு ஏற்ற நாடாக இலங்கை மீண்டும் நிருபிக்கப்படலாம். இவற்றை செய்தாலும் இதன்மூலமாக வரும் நிதிகளை மாத்திரம் கொண்டு சர்வதேச நாணய நிதியம் வழங்கும் முழுமையான 7 பில்லியன் நிதியையும் வெலுத்த இன்னும் எத்தனை வருடங்கள் செல்லும் என்பதும் இலங்கைவாழ் மக்கள் அனைவரும் சர்வதேச நாணய நிதியத்தில் அடவு வைக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையை அனைவரும் புரிந்துகொள்வது நல்லது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கிய கடன் உதவியை அமரிக்கா பாராட்டி உள்ளது.

ஆனால், எதிர்கட்சித் தலைவர் சஜித் எந்த நிபந்தனைகளை முன்வைத்து கடன் பெற்றீர்கள் எனக் கேட்டுள்ளார்.

சர்வதே நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெற்றுக்கொள்ள சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு முன்வைத்திருக்கும் நிபந்தனைகள் என்ன என்பது யாருக்கும் தெரியாது.

அதனால் இந்த நிபந்தனைகளை பாராளுமன்றத்துக்கு விரைவாக சமர்ப்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன், ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் தற்போது மக்கள் ஆணை இல்லாமை காரணமாக இந்த நிபந்தனைகளை சமர்ப்பிக்காமல் இருக்கிறது.

எனவே, தேசிய முக்கியத்துவம் எனக் கருதி பின்வரும் கேள்விகளுக்கு அரசாங்கத்திடமிருந்து குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன்.

சர்வதே நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் கையொப்பமிட்ட ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாது? குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம் மறுசீரமைப்புக்கு ஆளாகும் அரச நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் யாது? ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் என்ன? அந்த ஒப்பந்தத்தை இவ்வாரம் இந்த சபைக்கு சமர்ப்பிக்க முடியுமா?

மக்கள் ஆணை இன்மையால் தோ்தலை ஒத்திவைக்கும் அரசாங்கம், சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய தரப்புகளுடன் மேற்கொள்ளும் உடன்படிக்கைகள் மற்றும் தீர்மானங்களுக்கு மக்களின் ஆணையைப் பெறுவது எவ்வாறு? சரியான நேரத்தில் தேர்தலை நடத்தாத ஒரு நாட்டை ஜனநாயக நாடு என எவ்வாறு அழைக்க முடியும்?

இவ்வாறு எதிர்கட்சித் தலைவர் கேட்டதிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

சர்வதே நாணய நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்ட 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியின் முதல் தவணையாக 333 மில்லியன் டொலர்கள் சில தினங்களில் கிடைக்கவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் இந்த மூன்று பில்லியன் டொலர்கள் நான்கு ஆண்டுகளில் தவணைகளில் வழங்கப்படும்.

இலங்கை அமுல்படுத்த வேண்டிய சர்வதேச நாணய நிதியத்தினால் விதிக்கப்பட்டுள்ள முக்கிய நிபந்தனைகள் வெளியாகியுள்ளன.

★ கடன் மறுசீரமைப்புத் திட்டம் ஏப்ரல் இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

★ ஐக்கிய நாடுகள் சபையின் நியமங்களுக்கு அமைவாக ஊழலுக்கு எதிராக சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்

★ அரச வருவாயை மிக விரைவில் அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்

★ அதிக வருமானம் ஈட்டுபவர்களிடமிருந்து அதிக பங்களிப்புடன் செல்வ வரி விதித்தல்

★ 2025இற்குள் சொத்து மற்றும் சொத்து பரிமாற்ற வரி அறிமுகம்

★ 2023ஆம் ஆண்டு இறுதிக்குள் பணவீக்கத்தை 12% - 18% ஆகக் குறைக்க இலக்கு

★ ஜூன் மாத இறுதிக்குள் தற்போதைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும்

★ நாணய மாற்று விகித நெகிழ்வுத்தன்மையை பராமரித்தல்

★ மத்திய வங்கியை மேலும் சுதந்திரமாக்குதல்

★ வலுவான சமூக பாதுகாப்பு வலையமைப்பை அறிமுகப்படுத்துதல் ஆகிய கட்டுப்பாடுகள் அடங்கும்.

எதுவானாலும் சர்வதேச நாணயம் வழங்கிய கடன்தொட்டதிற்கு பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி கொண்டாட்டம் செய்வது முட்டாள்தனமான விடயமாகும். சுருக்கமாகக் கூறினால் இலங்கை மக்களை அடகுவைத்தே இந்த உதவி கிடைத்திருக்கிறது என்ற உண்மையை அனைரும் புரிந்துகொண்டால் சரி.

✍பா.அரியநேத்திரன்

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக கடன் சுமைக்குள் மூழ்கும் தேசம்!

எம்.எஸ்.அமீர் ஹுசைன்

தொடரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்பதற்காக 04 காலப் வருட பகுதிக்குள் கட்டம் கட்டமாக கிடைக்கும் வகையில் ஒரு இலட்சம் கோடி ரூபாவை (300 கோடி ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) நிபந்தனையுடனான கடனாக வழங்க சர்வதேச நாணய நிதியம் 2023 மார்ச் 20 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கியது.

அதன்படி முதற்கட்டமாக 10,500 கோடி (33 கோடி 30 இலட்சம் டொலர்கள்) ரூபாவை வழங்கவும் இணக்கம் காணப்பட்டிருக்கின்றது. இந்தச் செய்தியை அறிந்தவுடன் ஆளும் கட்சி ஆதரவாளர்கள் நாட்டின் பல பாகங்களில் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்தி ஆரவாரம் செய்தனர். 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டவுடன் நாடெங்கிலும் பட்டாசு கொளுத்தி பால்சோறு சாப்பிட்டு கொண்டாடி மூன்று வருடங்களின் பின்னர் கடன் கிடைத்தமையை இவ்வாறு கொண்டாடினர்.

2022 ஒகஸ்ட் மாதமளவில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பிரதிபலனாக இந்த கடன் ஒப்புதல் கிடைத்திருக்கின்றது. ஏற்கனவே இலங்கை மத்திய வங்கியில் இருக்கவேண்டிய சிறப்பு எடுப்பு ஒதுக்கு 450 அமெரிக்க டொலர் வரையில் வீழ்ச்சி கண்டதால் நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு கடந்த 2022 மே மாதம் முதல் இலங்கை ரூபாவின் மதிப்பு, வீழ்ச்சி கண்டதோடு 133 ரூபாவுக்கு இருந்த ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 366 வரை உயர்வடைந்து சென்றது. அதன் விளைவாக உள்நாட்டில் பொருளாதார வளர்ச்சி வீதம் எதிர் முரண் நிலைக்குச் சென்று அதலபாதாளத்தில் வீழ்ந்தது. பணவீக்கம் 66% வரை உயர்வடைந்தது.

இவ்வாறான ஒரு நிலையில் இலங்கைக்கு தேவையான எரிபொருள், எரிவாயு, மருந்து வகைகள், அத்தியாவசிய உணவுப் பொருட்களான சீனி, பருப்பு உட்பட பலவகையான பொருட்களை இறக்குமதிசெய்ய இலங்கை மத்திய வங்கியில் அமெரிக்க டொலர் இல்லாமல் திறைசேரி காலியானதால் நாட்டில் அனைத்துப் பொருட்களதும் விலைகள் 300 வீதம் அதிகரித்துச் சென்றது. இப்படியான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள ஒரே வழி, சர்வதேச நாணய நிதியத்திடம் மண்டியிடுவதுதான் என்று கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடிய பின்னர் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார்.

அதற்கமைவாக 2022 ஒகஸ்ட் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம்செய்து நிலைமைகளை ஆராய்ந்து பல கோணங்களில் அறிக்கைகளைத் தயாரித்தனர். அதிலும் ஏற்கனவே இலங்கைக்கு கிட்டத்தட்ட 570 கோடிக்கு மேல் கடன் வழங்கியுள்ள சீனாவும் 450 கோடி அமெரிக்க டொலருக்கு மேல் கடன் வழங்கியுள்ள இந்தியாவும் இந்தக் கடன்களுக்கான வட்டி அறவிடலை மீளாய்வு செய்து அதற்கான பிற்படுத்தப்பட்ட கால நிர்ணயத்தை அறிவிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் கோரியிருந்தது.

அந்தக் கோரிக்கைக்கமைவாக சீனா, இந்தியா, ஜப்பான், பரிஸ் கூட்டமைப்பு ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஏற்கனவே பெற்றுள்ள கடன் அறவிடலுக்கு சலுகை வழங்கியதால் சர்வதேச நாணய நிதியம் நிபந்தனைகளை விதித்து இவ்வாறாக 05 வருட காலப்பகுதிக்குள் அண்ணளவாக 2,00,000 (இரண்டு இலட்சம்) கோடி ரூபா அதாவது 700 கோடி ஐக்கிய அமெரிக்க டொலர்கள் வரையான கடனை வழங்க அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது.

இந்தக் கடன் பெறுகை பற்றிய சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 மார்ச் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார்.

ஆளும் கட்சி அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஜனாதிபதியின் இந்த முயற்சியைப் பாராட்டி புகழ்ந்து தள்ளினர். இதனை 2023ஆம் ஆண்டின் சாதனையாக பாராட்டி அவரை சாதனை வீரர் என்ற ஸ்தானத்திற்கு கொண்டுசென்றனர். 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 11 பிரதான தலைவர்களைக் கொன்று புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக தோற்கடித்து மஹிந்த வெற்றிவாகை சூடியதை விட ஒருபடி மேல் சென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை புகழ்ந்தனர்.

ஆனாலும் பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகய, ஜே.வி.பி. மற்றும் ஆளும் கட்சிக்கு எதிராக பொதுஜன பெரமுன அணி என்பன இந்த சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையால் நாட்டுக்கு எதிர்வரும் நான்கு வருடங்களுக்குள் ஏற்பட இருக்கின்ற ஆபத்துகள் பற்றி ஆரூடம் கூறிக் கொண்டிருக்கின்றன. அந்தளவிற்கு இறுக்கமான நிபந்தனைகளை நாணய நிதியம் விதித்திருக்கின்றது.

அதுபற்றி சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிரிஸ்டலீனா ஜோர்ஜீவா தெரிவிக்கையில், இலங்கை கடன் வாங்கினால் மட்டும் போதாது. துரிதமாக உயர்வடைந்து செல்லும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அர்ப்பணிப்புடன பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எப்போதும் இலங்கை அரசாங்கம் கண்காணிப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இருந்தாலும் சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள நிபந்தனைகள் குறித்து உள்நாட்டில் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்களிடையே எந்தவிதமான இணக்கப்பாடும் இல்லை. அரச ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல், அரச நிறுவனங்களைக் குறைத்தல் அல்லது நட்டத்தில் இயங்கும் அரச கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களை தனியார்மயப்படுத்தி இலாபம் உழைக்கும் நிறுவனங்களாக மாற்றியமைத்தல், வரிகளை அதிகரித்தல், மின்சாரம், எரிபொருள் உட்பட சேவைகள் துறையில் கட்டண மீளாய்வுகளை செய்தல், ஊழல்களை ஒழித்தல், அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தி அதற்கென முறையாக அரச கொள்கையொன்றை வகுத்தல் என்று பல திட்டங்களை நிபந்தனைகளாக முன்வைத்திருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக சிறந்ததும் செயல்திறன் கொண்டதுமான பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்டமிடலை முன்னெடுத்தல் என்பன இத்தகைய நிபந்தனைகளாகும்.

அரசாங்கம் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்தும் வகையில் சில நிபந்தனைகளை நிறைவேற்ற நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. அதுவே வரி அதிகரிப்பு, மின்சார கட்டணஅதிகரிப்பு, ரெலிகொம், லங்கா ஹொஸ்பிட்டல், சில பிரதான முன்னணி ஹோட்டெல்களின் கீழ் இயங்கும் கிளைகளை மறுசீரமைத்தல் அல்லது தனியாருக்கு விற்பனை செய்தல் என்பன அவையாகும்.

இதற்கிடையில் மார்ச் மாதம் 28ஆம் திகதிமுதல் 31ஆம் திகதிவரையில் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தபால்மூல வாக்கெடுப்பை பின்போடுவதென்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கின்றது. அத்துடன், ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடைபெறும் என்று அறிவித்திருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலையும் பின்போடுவதற்கான நடவடிக்கைகளை அறிவித்திருக்கின்றது. இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நேற்று முன்தினம் மார்ச் 23ஆம் திகதி பிரதான அரசியல் கட்சிகளது செயலாளர்கள் உட்பட பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது.

மூன்று முக்கிய விடயங்களின் அடிப்படையில் இந்தக் கலந்துரையாடல் தேர்தல் திணைக்களத்தில் இடம்பெற்றது. குறித்த ஒரு திகதியை நிர்ணயித்து தேர்தலை பின்போடுவது, திகதி நிர்ணயம் செய்யாமல் மறு அறிவித்தல் வரை பின்போடுவது அல்லது ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி தேர்தலை நடத்துவது என்ற அடிப்படையில் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

ஆனாலும் ஏற்கனவே உயர் நீதிமன்றம் தேர்தலுக்கென்று ஒதுக்கவுள்ள நிதியை நிதி அமைச்சு வழங்காமல் தடுத்து வைத்திருப்பதை தடுக்கும் வகையில் இடைக்கால தடையுத்தரவொன்றை வழங்கியிருக்கின்றது. ஆனாலும் அந்த உயர்நீதிமன்ற உத்தரவுக்கு இதுவரையில் சாதகமான பதில் நிதி அமைச்சிலிருந்து வழங்கப்படவில்லை. அவ்வாறு உத்தரவு வழங்கப்பட்டிருந்தால் தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடவும் விநியோகத்துக்கும் தேவைப்படும் நிதியை அரசாங்கம் வழங்கியிருக்கும்.

அவ்வாறு வழங்க முன்வராததால் பிரதான அச்சகர் ஏற்கனவே அச்சிட்ட தபால்மூல வாக்குச்சீட்டுகளையும் இதுவரையில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்காமல் தடுத்துவைத்துள்ளார். பொலிஸ் திணைக்களம், தபால் திணைக்களம் மற்றும் தேர்தல் திணைக்களம் என்பவற்றிற்கு வழங்கவேண்டிய நிதி உட்பட மொத்தமாக 1,100 கோடி ரூபா வரையில் தேவைப்படுகின்றது. ஆனால், அந்தப் பணம் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டாலும் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் சாத்தியம் இல்லாததாக இருக்கின்றது. அவ்வாறே உள்ளூராட்சி சபைகளது பதவிக்காலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர்களது அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

எவ்வாறாயினும் நாட்டின் நிலையைப் பொறுத்தவரையில் எதுவும் திருப்திகரமானதாக இல்லை. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்திருக்கின்றது என்ற அடிப்படையில் இலங்கை மக்கள் ஒருவிதமான திருப்தியையும் மன ஆறுதலையும் அடைந்தாலும் ஒரு சுதந்திர தேசம் என்ற அடிப்படையில் இது ஒரு பாரிய சுமையாகும். ஏற்கனவே இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் வர்த்தக வாணிபப் பிடியில் சிக்கியுள்ள இலங்கை, தொடர்ந்தும் சர்வதேச நாடுகளின் நெருக்குதலுக்கு உள்ளாகியே இருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு வருவதை இவ்வாறான கடன்சுமை காட்டுகின்றது. 2005ஆம் ஆண்டுமுதல் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சோஷலிச சமூக உடமைவாத இடதுசாரி கொள்கையை கடைப்பிடிக்க ஆரம்பித்ததால் சர்வதேச நாணய நிதியத்துடன் உறவுகளை முறித்துக்கொள்ளவேண்டி ஏற்பட்டது. மாறாக, இந்தியாவையும் சீனாவையும் நம்பி பொருளாதாரத்தை திட்டமிட ஆரம்பித்தது.

இலங்கை இந்த நிலைக்குத் தள்ளப்பட்டு பொருளாதார நெருக்கடியில் விழ தற்போது ஜாதிக ஜனபலவேகய என்ற பெயரில் மும்முரமாக முன்னைய ஆட்சியாளர்களுக்கு எதிராக கோஷம் எழுப்பி பிரசாரம் செய்துவரும் ஜே.வி.பியும் பிரதான காரணமாக அமைகின்றது. 1994ஆம் ஆண்டுமுதல் ஓரளவுக்கு சிறப்பாக சிவில் யுத்த சூழ்நிலையிலும் சிறப்பாக நடந்துகொண்டிருந்த தேசத்தை நெருக்கடியில் தள்ள இந்த ஜே.வி.பி. அப்போது 2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் செய்த சதிகளும் காரணமாக அமைகின்றன.

பாராளுமன்றத்தை திடீர் என்று கலைப்பதற்கு சந்திரிகாவை தூண்டி அன்றைய அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்து இந்த ஜே.வி.பி. அரசியல் ரீதியாக மீட்சி பெற வழி தேடியது. அதன் பலத்தில் மஹிந்த ராஜபக்ஷ 2005ஆம் ஆண்டு தள்ளாடும் நிலையில் பெரும்பான்மை பலம் இல்லாமலே ஆட்சியொன்றை முன்னெடுத்தார்.

அதிலிருந்து 2014ஆம் ஆண்டு வரையிலும் இலங்கையில் ஊழல், மோசடிகள், பொருளாதார சுரண்டல்கள் மலிந்து காணப்பட்டன. ஆட்சியில் உரிய முறையில் நிபுணத்துவம் வாய்ந்த பங்களிப்பு காணப்படவில்லை. தமது குடும்ப ஆதிக்கம் வலுவடைந்து காணப்பட்டதால் ஊழல்களால் நாடு படிப்படியாக சுரண்டலுக்கு உட்பட ஆரம்பித்தது.

சோஷலிச நாடுகளை நம்பி பின்னால் போனதாலும் உள்நாட்டில் இனவாதம், மதவாதம் என்பவற்றை விதைத்து பெரும்பான்மை சிங்கள மக்களது ஆதரவுடன் மாத்திரம் தூய சிங்கள ஆட்சியை முன்னெடுக்க கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், நடந்ததோ அதைவிட மோசமான விளைவு. அதன் பிரதிபலனாக மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் தண்டனையை அப்பாவி பொதுமக்களே அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தெற்காசியாவில் மிகவும் பலமான ஊழல் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் 23ஆம் திகதி அறிவித்தார். எத்தனை சட்டங்கள் இருந்தாலும் அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டின் பொது வளங்களை சூறையாடி வெளிநாட்டு வங்கிகளில் முடக்கியும் முதலீடுகளைச் செய்தும் அனுபவித்து வருகின்ற ஆட்சியாளர்களே இன்றும் இதே ஆட்சியின் பங்காளர்களாக இருப்பதாக பொதுமக்களும் அரசியல் கட்சிகளும் குற்றஞ்சாட்டி வருகின்ற நிலையில் எந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டாலும் எந்தப் பலனும் கிடைக்கப்போவதில்லை.

கடந்த 2015 – 2019ஆம் ஆண்டுவரையில் பதவியிலிருந்து ஆட்சி புரிந்த இதே ரணில் விக்கிரமசிங்கவால் அப்போது கூறப்பட்ட ஓர் அரசியல்வாதிக்கு எதிராகவாவது ஊழல் வழக்கொன்றை தாக்கல் செய்து தண்டிக்க முடியாமல் போனமை துர்ப்பாக்கியமே. அதே ஊழல்வாதிகளே இன்று ஆட்சியின் பங்காளர்களாக உள்ளனர்.

சட்டம் கொண்டுவருவேன், நடவடிக்கை எடுப்பேன் என்றெல்லாம் முழக்கம் போடுவது வெறும் கண்துடைப்பே. நாட்டில் நடைமுறையில் இருக்கின்ற சட்டத்திற்கமைவாகவாவது நடவடிக்கை எடுத்தால் 2019ஆம் ஆண்டின் இறுதியில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மைத்ரிபால சிறிசேன 30 ஊழல்வாதிகளது பைல்கள் இருப்பதாக கூறப்பட்டபோது ஒருவருக்கு எதிராகவாவது நடவடிக்கை எடுக்கப்படாத நாட்டில் இனித்தான் ஆசியாவின் மிகவும் பலம்வாய்ந்த சட்டம் வந்துதான் என்ன பயன்?



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

"இருக்கு ஆனா இல்லை"

இலங்கை என்பது ஜனநாயக சோஷலிச குடியரசு நாடாக அறிவிக்கப்பட்ட அழகான தீவு. உலகில் ஆண்டவனால் ஆசீர்வதிக்கப்பட்ட அழகிய இடங்களில் இலங்கையும் ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், இலங்கை அரசியலமைப்பில் எழுத்தில் கூறியிருக்கும் ஜனநாயகமும், சோஷலிசமும் இலங்கையில் நடைமுறையில் முழுமையாக இருக்கிறதா என்ற கேள்வியை பொதுவெளியில் எழுப்பினால் ஏறத்தாழ எல்லோரும் இல்லையென்றே சொல்வார்கள். அதுதான் உண்மையும் கூட.

ஜனநாயக அடக்குதலின் உச்சமாக பல வருடங்களாக இலங்கையில் மாகாண சபைத் தேர்தல்கள் நடக்கவில்லை. கொரோனா, பொருளாதார நெருக்கடி, எல்லை வரைவுகள் போன்ற பல்வேறு காரண காரியங்கள் கூறப்பட்டாலும் உண்மை என்ன என்பதை இலங்கையின் வாக்காளர்கள் எல்லோரும் அறிந்துவைத்துள்ளார்கள். அந்தத் தேர்தலை நடத்துமாறு பேரணிகளோ அல்லது போராட்டங்களோ அல்லது குரலெழுப்பல்களோ செய்யாது எதிரணி கோமாவில் இருந்தது. அதன் தொடர்ச்சியாக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலையாவது நடத்தி நாங்கள் எங்களின் கடமையை கொஞ்சமெனும் செய்தோம் என்று பெயரெடுக்க இலங்கை தேர்தல் ஆணைக்குழு படாதபாடு பட்டுக்கொண்டிருக்கிறது. அரசாங்கம் தன்பாட்டுக்கு நொண்டிசாட்டுகளைக் கூறி காலத்தை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது.

மார்ச் 09 நடக்கும் என்ற தேர்தல் ஏப்ரல் 25 என்று பிற்போடப்பட்டு இப்போது உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற நிலை உருவாகியிருக்கிறது. ஏறக்குறைய வைகைப்புயல் வடிவேலுவின் “வரும் ஆனா வராது” என்ற நகைச்சுவை போலாகிவிட்டது இலங்கையின் ஜனநாயக உரிமையும், தேர்தலும். ரணில்- மொட்டு அரசாங்கம் தேர்தலை நடத்த விரும்பவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். இதனை பாராளுமன்றில் பகிரங்கமாகவே ஜனாதிபதி ரணில், "தேர்தல் ஒத்திவைக்கப்படவுமில்லை, ஒத்திவைக்க அவ்வாறான தேர்தல் ஒன்றும் கிடையாது" என்று கூறிவிட்டார். ஆனாலும் அவரது தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி கணிசமான சபைகளுக்கு வேட்புமனு தாக்கல் செய்திருந்தது. தன் பங்குக்கு ஆளும் பங்காளிக் கட்சியான மொட்டும் மொட்டின் முட்டுகளும் களமிறங்கி வேட்பாளர் நியமனங்களை செய்து வேட்புமனு தாக்கல் செய்திருந்தது.

கோமாவிலிருந்து எழுந்தவன், நடுவில் கொஞ்சம் பக்கத்தைக் காணோம் என்பதுபோல் ஜனாதிபதியின் அன்றைய உரை அமைந்திருந்தது. அன்றையதினம் முழுப்பூசணிக்காயை ஒரு பிடி சோற்றில் மறைக்கும் விதமாக அரசாங்கம் தேர்தலை ஒத்திவைப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியபோதிலும், தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்துவதற்கான உரிய திகதியை இதுவரை சட்டபூர்வமாக அறிவிக்கவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். மேலும் அரசியலுக்கன்றி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கே தான் முன்னுரிமை வழங்குவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாவிட்டால் நாடொன்று எஞ்சாது எனவும் வலியுறுத்தினார்.

அது உண்மை காரணம் அல்ல என்பதும் அது காரணங்களில் சிறியது என்பதும் இலங்கை அரசியலையும், இலங்கையின் பொருளாதாரத்தையும் அறிந்தவர்கள் தெரிந்துகொண்டுள்ளனர். ஏனென்றால், இப்போதிருக்கும் அரசாங்கம், ஒற்றை கும்கி யானையால் தலைமை தாங்கப்படும் - மக்களினால் நேரடியாக நிராகரிக்கப்பட்ட தாமரை மொட்டுகள் அல்லது ராஜபக்ஷக்களின் பினாமி ஆட்சியாகும். இப்போதிருக்கும் அரசியல் சூழ்நிலையில் தேர்தல் நடந்து அதில் தாமரை மொட்டும், மொட்டுகளின் முட்டும், யானையும் மக்கள் ஆணையை இழந்துவிட்டன என்று சர்வதேச அரங்குக்குத் தெரியவந்தால், அது அரசியல் ஸ்திரத்தன்மையை பாதிக்கும். ரணில் விக்கிரமசிங்க இப்பொழுது முன்னெடுத்துவரும் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான நகர்வுகளையும் அது பாதிக்கும். எனவே, பொதுப்படையாகப் பார்த்தால், மக்களிடம் வெறுப்பை சம்பாதித்திருக்கும் அரசாங்கமான இவர்கள் ஒரு தேர்தலை நடத்த விரும்பமாட்டார்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், அது அரசாங்கத்தைப் பொறுத்தவரை விஷப்பரீட்சையாக அமையக்கூடும்.

மஹிந்தவின் ஆதரவு மொட்டுகளின் நிலைமை இப்போது கடுமையான அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளது. உலக நாட்டை திரும்பிப்பார்க்க வைத்த மக்களின் அரகலயவுக்கு முன்பு தாமரை மொட்டானது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று யாராலும் எப்போதும் அசைக்க முடியாது என்ற தோரணையுடன் ஆட்சிக்கு வந்தது. ஆனால், அவர்களின் மமதையினால் நாடு திவாலாகும் நிலைக்குச் சென்றமையால் பொங்கியெழுந்த மக்களின் அரகலயவுக்குப் பின் அந்த நிலை கேள்விக்குள்ளாகிவிட்டது. ஒரு தேர்தல் நடந்தால் அதை செயலிலும் நிரூபிக்கக்கூடும். அது மொட்டுக்கு எதிரான மக்களாணையாக அமைந்தால் அது மொட்டுகள் பெரும்பான்மை வகிக்கும் நாடாளுமன்றத்தைப் பாதிக்கும். எனவே, மொட்டுகளைப் பொறுத்தவரை தங்களுக்கு மக்களாணை உண்டா, இல்லையா என்பதனைப் பரிசோதிக்கும் ஒரு தேர்தலை எதிர்கொள்ள அஞ்சுகிறார்கள். இந்தத் தேர்தல் நடந்தால் ஒப்பீட்டளவில் அதிகம் ஆபத்து மொட்டுகளுக்குத்தான் உண்டு என்பது வெளிப்படை. ஜனாதிபதி ரணிலைப் பொறுத்தவரை அவர் ஏற்கனவே மக்கள் ஆணையை இழந்தவர். மக்களால் ஒரு உறுப்பினர் கூட நேரடியாக பாராளுமன்றுக்கு வரமுடியாத நிலைக்கு யானையை வழிநடத்தியுள்ளார். அவரைப் பொறுத்தவரை இனி ஒரு தேர்தல் நடந்து அதில் அவருக்கு மக்கள் ஆணை இல்லை என்பதனை கண்டுபிடிக்க வேண்டிய தேவை இல்லை. அது கடந்த காலங்களில் அப்பட்டமாக நிரூபணமாகியுள்ளது.

இப்போதிருக்கும் எமது நாட்டின் அரசாங்கம், தேர்தல் அரசியலில் பாரம்பரிய எதிரிகளாகக் காணப்பட்ட இரண்டு கட்சிகளைக்கொண்டதாக அமைந்துள்ளது. நண்பர்கள் எதிரியாகவும், எதிரிகள் நண்பர்களாகவும், விசுவாசிகள் துரோகிகளாகவும், துரோகிகள் நல்லவர்களாகவும் மாறிக்கொண்ட சம்பவம் இலங்கையில் அண்மையில் அரசியலரங்கில் இலாபகரமாக நடந்துள்ளது. இந்தக் கூட்டிணைவு மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களுக்கு எதிராக உருவான ஒன்றாகும். தன்னெழுச்சிப் போராட்டங்களால் ஏற்பட்ட ஆபத்துகள், அச்சம் போன்றவற்றின் விளைவாக இரண்டு பாரம்பரிய எதிரிகளான கட்சிகள் ஒரு தந்திரோபாயச் சேர்க்கைக்கு போயிருக்கின்றன. இப்படியான சூழ்நிலையில் ஒரு தேர்தல் நடந்து தேர்தல் முடிவுகளால் அரசியல் ஸ்திரத்தன்மை பாதிப்படைந்தால், அது ரணிலின் வருங்கால அரசியல் மற்றும் பொருளாதார திட்டங்களைக் குழப்பக்கூடும். பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம். சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்தமைக்கு இது அவசியம். எனவே, பொருளாதார நெருக்கடியை கடப்பதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம். ஒரு தேர்தல் நடந்து அதனால் அரசியல் ஸ்திரத்தன்மை குழம்புமாக இருந்தால், அது ரணிலுக்கு கசப்பான அனுபவத்தை வழங்கிவிடும். அவர் அந்தக் கோணத்தில்தான் சிந்திப்பார். அதேசமயம் மொட்டுகள் மேலும் பலவீனமடைவதை அவர் ரசிப்பார். அது அவருடைய கெத்தை கூட்டும். எனவே, ஒரு தேர்தல் நடக்கக்கூடாது என்ற கவலையும் பயமும் மொட்டுக்குத்தான் அதிகம். ரணில் இதில் குளிர்காய நினைத்தாலும் சூழ்நிலை கைதியாகி அவரின் கைக்கும், மூளைக்கும் பூட்டு போடப்பட்டுள்ளது.

நாட்டின் இன்றைய நிலைக்கு உள்ளூராட்சித் தேர்தல் தேவையா என்ற கேள்வியும் பரவலாக எழாமல் இல்லை. உள்ளூராட்சி எனப்படுவது உள்ளூர் அரசியல் செல்வாக்கு நிலைவரங்களைப் பிரதிபலிப்பது. எனவே, அது தேசியளவில் கட்சிகளின் வெற்றி தோல்விகளை பிரதிபலிக்காது என்றதொரு வாதம் அரசியல் அறிஞர்களிடம் உண்டு. அதில் உண்மையும் உண்டு. நாட்டின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் பாரம்பரியத்தைப் பொறுத்தவரை மக்கள் உள்ளூர் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே வாக்களித்து தமது பிரதிநிதிகளை தேர்தெடுக்கிறார்கள். இங்கு கட்சிகளை விடவும் குறிப்பிட்ட வேட்பாளர்களின் உள்ளூர் தனிப்பட்ட செல்வாக்கே வெற்றியை அதிகம் தீர்மானிக்கின்றது. அதனால்தான் முன்பு ஒரு கட்சியின் கீழ் வாக்கு கேட்டவர் இப்பொழுது இன்னொரு கட்சியில் துணிந்து வாக்குக் கேட்கிறார். ஏனென்றால், அவருக்குத் தெரியும், வாக்குகள் கட்சிக்கல்ல, தன் முகத்துக்குத்தான் கிடைக்கின்றன என்று. அதில் கட்சி நிலைப்பாடு என்பது ஒப்பீட்டளவில் இரண்டாம் நிலை என்று ஒரு வாதம் உண்டு. ஆனாலும் இறுதியாக தேசியளவில் வாக்களிப்பைக் கணிக்கும் பொழுது அங்கே அது கட்சிகளின் வெற்றி தோல்வியாகவே பார்க்கப்படும். இப்படி பார்த்தால் மொட்டும், யானையும் ஏன் தொலைபேசியும் கூட மக்களிடம் மண் கவ்வவேண்டிய நிலை வரலாம். திசைகாட்டிக்கு மக்களிடம் நன்மதிப்பு இருக்கிறது. அதை சரியான திசையில் நெறிப்படுத்த அவர்களின் கடந்த கால வரலாறுகளும், அபாயமான அவர்களின் சொந்த நிறமும் அவர்களுக்கு தடையாக இருக்கின்றன

திட்டமிட்டபடி ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறாதென தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ள கருத்து, பல்வேறு அரசியல் உள்ளார்ந்த உண்மைகளையும் அனுபவ கோடுகளையும் வெளியில் காட்டி நிற்கிறது. நிதியில்லை என்ற காரணத்தைக் கூறிவந்த ரணில் அரசாங்கம், இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற தகுதி பெற்றுள்ளது. இந்தக் கடனை பெற்றாவது தேர்தலை நடத்த மாட்டார்களா என்ற நிலையில் வெற்றிவாய்ப்பை உறுதியாக நம்பும் வேட்பாளர்களும், நடத்தவே கூடாது என்று தோல்விப்பயத்தில் உள்ள வேட்பாளர்களும் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

அதில் ஒரு முத்தாய்ப்பாக ஹம்பாந்தோட்டை துறைமுகம் விற்கப்பட்டபோது பெருமையடித்து பேசியதைபோன்று ஐ.எம்.எவ். கடன் உதவியைக் கண்டு பெருமிதம் கொள்ளவேண்டாம் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ள கருத்தை நாம் நோக்கவேண்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தவணைக்கு அங்கீகாரம் வழங்குவதாக அரசாங்கத்திலுள்ள சிலர் தம்பட்டம் அடிப்பதை நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியே விஜித ஹேரத் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பொருளாதாரத்தை நம்பி நாட்டை திவாலாக்கியதன் பின்னர் வரம்பற்ற கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு வெட்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரிச்சுமையை அதிகரித்து, அரச நிறுவனங்களை விற்பனை செய்வதன் மூலம் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் கடனாளியாக மாறியுள்ளதாகவும், இது மற்றுமொரு கடன் பொறி எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தக் கருத்துகளின் யதார்த்தத்தை அறிய இலங்கை இன்னும் சில காலங்களையும், அரசியல் மாற்றுக் கோலங்களையும் காணவேண்டியுள்ளது.

இதேவேளை, தேர்தலை நடத்துவது தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு தாம் தலை வணங்குவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளதுடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான செலவினங்களை ஈடு செய்வதற்கு பணத்தை வழங்கக் கோரி, தேர்தல்கள் ஆணைக்குழு நிதி அமைச்சுக்கு அனுப்பிவைத்த கடிதத்திற்கு பதில் கிடைக்கவில்லையென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிக்கிறது. இவற்றுக்கு நடுவில் இலங்கையில் தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதத்திற்கும் குறைவான நாட்களே காணப்படும் நிலையில் தேர்தல் களம் இன்றுவரை பெரிதாக சூடுபிடிக்கவில்லை.

இலங்கையில் இதற்கு முன்னர் நடத்தப்பட்ட தேர்தல்களில் தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு பல மாதங்களுக்கு முன்னதாகவே தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டு தேர்தல் கடுமையாக சூடுபிடித்து தேர்தல் வன்முறைகள் அதிகரித்துவிடும். இருந்தபோதிலும் தற்போது தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும் பிரசார நடவடிக்கைகளில் வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும் மந்த நிலையில் இருக்கிறார்கள். ஜே.வி.பியை தவிர. தேர்தல் பிரசாரங்கள் இதுவரை ஆரம்பிக்கப்படாமை தொடர்பில் தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற கேள்வி உள்ளது. பொருளாதாரப் பிரச்சினை இன்று எல்லாருக்கும் உள்ளது. பிரசாரத்திற்கு பதாகைகள், போஸ்டர்கள் அச்சிடவேண்டும். தேர்தலுக்கு யாரிடமாவது கடனை வாங்கியே இதனைச் செய்யவேண்டியுள்ளது. இவ்வாறு பிரசாரத்திற்காக கடனை வாங்கி, இந்த வேலைகளைச் செய்து பின்னர், தேர்தல் இல்லை என அறிவித்தால், வாங்கிய கடனுக்கு எப்படி வட்டி கட்டுவது, எப்படி கடனை திருப்பிச் செலுத்துவது என்ற பயம் உள்ளது என்கின்றனர் வேட்பாளர்கள்.

அதுமட்டுமன்றி, தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றால், சரி ஏதாவது செய்யலாம். தேர்தல் காலங்களில் மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியிருப்போம். அதனையும் இப்போதிருக்கும் சூழ்நிலையில் நிறைவேற்ற முடியாமல் போய்விடும். அதனால்தான் பெரும்பாலான வேட்பாளர்கள் இன்னும் பிரசாரத்தை ஆரம்பிக்கவில்லை என்கின்றனர். தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் தொடர்ந்தும் நிலவி வருகின்றமையினால் பெரும்பாலான வேட்பாளர்கள் இதுவரை தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்கவில்லை என்பது உறுதியாகிறது.

ஊடகங்களிலும், பாராளுமன்றத்திலும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதிய முக்கியஸ்தர்கள் பதிலளித்துள்ளனர். அதில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்குமாறு பரிந்துரை செய்யவில்லையென சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவர் மசாஹிரோ நொசாக்கி தெரிவித்துள்ளார். அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தல் செயன்முறைகளில் தலையிடவும் இல்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு விரிவாக்கப்பட்ட கடன் வசதி வழங்க IMF செயற்குழு அனுமதி வழங்கியமை தொடர்பில் வொஷிங்டனிலிருந்து ஒன்லைன் மூலம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவருடன், சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுக்குழு பிரதானியான பீட்டர் புருவரும் கருத்து வெளியிட்டிருந்தார். இச்சந்திப்பில் இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் பங்குபற்றியிருந்தனர். அத்துடன் வரிச் சீர்திருத்தம் மிக அவசியமெனவும், வரிகளை உரிய வகையில் திட்டமிட்டு அறவிடுவதற்கு இலங்கை நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். அதற்கமைய, இலங்கையில் தற்போது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகள் படிப்படியாக அகற்றப்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவற்றுக்கு நடுவில் தற்போதைய நிலைவரத்தைக் கருத்திற்கொண்டு தேர்தலை திட்டமிட்ட திகதியில் நடத்துவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா மீண்டும் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடியதன் பின்னரே இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவரது கூற்றை ஆராய்ந்து பார்க்கும்போது ஜனாதிபதி கூறிய இவ்வருடம் தேர்தலில்லை என்ற கருத்து வெளிப்பட்டு நிற்கிறது. தேர்தலை எவ்வாறு செய்துகொள்வது என்பது தொடர்பில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்த கட்டுரை எழுதும் நிமிடம் வரை தெரிவிக்கபட்டிருந்தது.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு 28ஆம் திகதிமுதல் 31ஆம் திகதிவரையில் இடம்பெறவுள்ளதாகவும், ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் நடைபெறும் எனவும் முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால், இப்போது ‘‘நடக்கும் ஆனால் நடக்காது’’ என்று கிண்டல் செய்யும் நிலைக்கு வந்திருக்கிறது. எவ்வாறாயினும், குறித்த திகதியில் தபால்மூல வாக்களிப்பை நடத்துவதற்கு தேவையான வாக்குச்சீட்டுகளை விநியோகிக்க முடியாதென அரச அச்சகம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தேர்தலை உரிய திகதிகளில் நடத்துவது சிக்கலாக மாறியுள்ளது. பாதுகாப்புமில்லை, பணமுமில்லை நாட்டில் ஜனநாயகமுமில்லை தேர்தலுமில்லை என்ற நிலை உருவாகியுள்ள இந்த காலகட்டத்தில் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்களை முறையாக நடத்துவது தொடர்பாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவைகளை மொத்தமாக நோக்கும்போது இயக்குனர் எஸ்.ஜே.சூர்யா சொல்வதுபோன்று தேர்தல் "இருக்கு ஆனா இல்லை" என்ற நிலையே உள்ளது.

உமர் அலி உஸ்மான்

சவூதி அரேபியாவின் "VISION 2030"

எழுத்து - காலித் ரிஸ்வான்

தற்போதைய சவூதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீலின் புதல்வரும் சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசருமான MBS என அழைக்கப்படும் முஹம்மத் பின் சல்மான், கடந்த வருடம்முதல் சவூதி அரேபியாவின் பிரதமராகவும் பணியாற்றி வருகிறார்.

2015 முதல் 2022 வரை அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

1985 ஒக்ஸ்ட் 31இல் பிறந்த இவர், சிறுவயதிலிருந்தே அரசியல் விவகாரங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய செயற்பாடுகளில் பெரும் ஆர்வங்காட்டி வந்தார். தனது தந்தையின் நிழலை தொடர்ந்து நடந்த இவர், தனது அரசியல் ரீதியான பிம்பத்தை வளர்த்துக் கொள்வதில் மிகுந்த கவனமெடுத்தார். பலதரப்பட்ட உயர் புள்ளிகளுடன் எவ்வாறு தொடர்புகொள்வது என்பது பற்றியும் அவர்களுடாக அரசியல் ரீதியான வலுவான உறவுகளைப் பேணுவது எவ்வாறு என்பது பற்றிய உத்திகளிலும் கைதேர்ந்தவர்.

2007ஆம் ஆண்டு மன்னர் சவூத் பலகலைக்கழகத்திலே சட்டக்கற்கையிலே இளங்கலைமானிப் பட்டம் பெற்ற இவர், அரேபிய ராஜ்யத்துக்குள் பொருளாதார, அரசியல் மற்றும் சுற்றுலாத்துறைகளின் மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு பல தொலைநோக்குத் திட்டங்களை செயற்படுத்தி வருகிறார்.

இவர் MBS தேசியவாத சிந்தனை கொண்டவர் என பலராலும் வர்ணிக்கப்படுகிறார். அரசியலில் நவீன அணுகுமுறைகள் மற்றும் பொருளாதார, சமூக பிரச்சினைகளில் தாராளவாத நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார். இவரது கருத்தியல்களும், நடைமுறைகளும் முழுமையாக நவீனத்துவம் சார்ந்ததாக இருக்கின்றன.

MBS தனது ஆட்சியை மேலும் வலுப்படுத்தும் நோக்கோடும், இராஜ்யத்துக்குள்ளும் சர்வதேச ரீதியாகவும் தனது ஆட்சி தொடர்பான ஒரு நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் மேற்சொன்னவாறு பல சீர்திருத்தங்கள், புதிய திட்டங்களை முன்வைத்திருக்கிறார்.

இந்தத் திட்டங்கள் 'Saudi Vision 2030' என்ற மகுடம் தாங்கி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

'Vision 2030' என்றால் என்ன?

'Saudi Vision 2030' எனும் மூலோபாயத் திட்டம் 2030ஆம் ஆண்டாகும்போது தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பெற்றோலிய உற்பத்தி அல்லாத துறைகளில் முதலீடு செய்வதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தைப் பல்வகைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

'Vision 2030' திட்டமானது துடிப்பானதொரு சமூகம், வளமான பொருளாதாரம் மற்றும் இலட்சியம் வாய்ந்ததொரு நாடு ஆகிய மூன்று முதன்மைக் கருப்பொருட்களை மையமாகக்கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

இளவரசர் முஹம்மத் பின் சல்மான் தலைமையிலான பொருளாதார மற்றும் மேம்பாட்டு விவகார கவுன்சிலால் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 'Vision 2030' திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இது சவூதி அரேபியாவின் நீண்டகால பொருளாதார வெற்றிக்கான பல பாரிய இலக்குகள் மற்றும் சீர்திருத்த உத்திகளை உள்ளடக்கியது. இதில் மானியங்கள் குறைப்பு, சவூதி அரம்கோவுக்கான தனியார் முதலீட்டை ஊக்குவித்தல், இத்தோடு குறிப்பாக, நாட்டின் சுற்றுலா மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளை பலப்படுத்துதல், மேம்படுத்தல் தொடர்பான திட்டங்கள் அடங்குகின்றன.

ஒரு துடிப்பான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்காக சவூதி அரேபியா அதன் மக்கள் மற்றும் இஸ்லாமிய மார்க்க விழுமியங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இது, தொடர்ச்சியான சில முயற்சிகளின் மூலமும் திட்டமிடல்கள் மூலமுமே சாத்தியப்பட முடியும். வருடாந்தம் உம்ரா கிரியைக்காக வரும் யாத்திரிகர்களை 8 மில்லியனிலிருந்து 30 மில்லியன் வரை அதிகரித்தல்; உலகின் மிகப்பெரிய இஸ்லாமிய அருங்காட்சியகத்தை நிறுவுதல்; யுனெஸ்கோவில் பதிவு செய்யப்பட்ட சவூதியின் பாரம்பரிய தளங்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குதல்; ராஜ்யத்திற்குள் கலாசாரம் மற்றும் பொழுதுபோக்குக்கான வாய்ப்புகளில் வளர்ச்சியை ஊக்குவித்தல்; ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவித்தல்; இதனால் வாரத்திற்கு ஒருமுறை உடற்பயிற்சி செய்யும் குடிமக்களின் எண்ணிக்கை 13 முதல் 40 சதவீதம் வரை அதிகரிக்கும்; மற்றும் உலகின் 100 முதல் தரவரிசை நகரங்களில் சவூதியின் முக்கிய மூன்று நகரங்களும் உள்ளடங்கும் வகையில் அந்நகரங்களை அபிவிருத்திசெய்து மேம்படுத்தல்.

இவை அந்த முக்கிய திட்டங்களில் உள்ளடங்குகின்றன. இத்தோடு சேர்த்து பெண்களுக்கான தொழில் மற்றும் கல்வி வாய்ப்புகளை அதிகரித்தல், விளையாட்டு, கலை போன்ற துறைகளில் ஈடுபடுத்தல் அவர்களுக்கான சம உரிமைகளை வழங்குதல் போன்ற பெண்கள் நலன் கருதிய திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொருளாதாரத்தில் ஒரு வளமான நிலைமையை அடைவதற்காக சவூதி அதன் பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்தி அதன் குடிமக்களுக்கு கணிசமான வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. இத்தோடு சேர்த்து முக்கிய மாக கல்வி, தொழில்நுழை மற்றும் புதிய கண்டுபிடிப்புகளில் ஆர்வம் காட்டுதல்; அரசுடைமைகளை தனியார் மயப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைப் பல்வகைப்படுத்தல்; உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க சக்திகள் மற்றும் சுற்றுலாத்துறை போன்ற வளர்ச்சியடையாத தொழில்துறைகளை மீள்கட்டமைப்பு செய்தல்; பாலர் பருவம்முதல் உயர்கல்விவரை அந்நாட்டுக் கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டம் மற்றும் அதன் தரத்தை நவீனப்படுத்துதல்; 2030இற்குள் உலகின் முதல் 200 பல்கலைக்கழகங்களில் குறைந்தது சவூதி அரேபியாவின் ஐந்து பல்கலைக்கழகங்களைக்கொண்டிருக்கும் வகையில் மாற்றங்களைக் கொண்டுவருதல்; நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்துதல். 2030இற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்பை 20%இலிருந்து 35%மாக உயர்த்துதல் போன்ற திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

ஒரு இலட்சிய நாடாக இருப்பதற்காக சவூதி அரேபியா தனது அரசாட்சி உத்திகளில் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனுடனான இயங்குதன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. 'நிலையான வெற்றியை உறுதியான அடித்தளங்கள் மூலம் மட்டுமே அடைய முடியும்' - இந்தக் கூற்றை அடிப்படையாகக்கொண்டு அனைத்து நிலை ஊழல்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கிறது; ஒன்லைன் சேவைகளை விரிவுபடுத்துதல் மற்றும் நிர்வாகத் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கிறது; 5,00,000இற்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு சிறந்த முறைகளில் பயிற்சி அளிப்பதற்காக மனித வள மேம்பாட்டுக்கான கிங் சல்மான் திட்டத்தை நிறுவுதல் மற்றும் அதிகரித்த வினைத்திறன் மற்றும் விளைதிறனுடன் செயற்படுவதன் மூலம் இலாப நோக்கற்ற துறைகளை மேம்படுத்துகிறது.

எனவே, மொத்தத்தில் இந்த 'Vision 2030' திட்டம், சவூதி அரேபியாவின் பொருளாதார அபிலாஷைகளை அடைவதற்கும் குடிமக்களின் வாழ்க்கைத்தரத்தை மாற்றியமைப்பதற்கான முயற்சியில் முதல் படியாகும்.

தவக்கால சிந்தனை

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே!



தவக்காலத்தின் ஐந்தாம் வார ஞாயிறு

அக்காலத்தில் இலாசரின் சகோதரிகள் இயேசுவிடம் ஆள் அனுப்பி, "ஆண்டவரே, உம் நண்பன் நோயுற்றிருக்கிறான்" என்று தெரிவித்தார்கள். அவர் இதைக் கேட்டு, "இந்நோய் சாவில் போய் முடியாது. கடவுளின் மாட்சி விளங்கவே இவன் நோயுற்றான். இதனால் மானிடமகனும் மாட்சி பெறுவார்" என்றார். மார்த்தாவிடமும் அவருடைய சகோதரியான மரியாவிடமும் இலாசரிடமும் இயேசு அன்புகொண்டிருந்தார். இலாசர் நோயுற்றிருந்ததைக் கேள்விப்பட்ட பிறகு தாம் இருந்த இடத்தில் இன்னும் இரண்டு நாள் அவர் தங்கியிருந்தார். பின்னர் தம் சீடரிடம், "மீண்டும் யூதேயாவுக்குப் போவோம், வாருங்கள்" என்று கூறினார். இயேசு அங்கு வந்தபோது இலாசரைக் கல்லறையில் வைத்து ஏற்கனவே நான்கு நாள் ஆகியிருந்தது.

இயேசு வந்துகொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் மார்த்தா அவரை எதிர்கொண்டு சென்றார்; மரியா வீட்டில் இருந்துவிட்டார். மார்த்தா இயேசுவை நோக்கி, "ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான். இப்போது கூட நீர் கடவுளிடம் கேட்பதை எல்லாம் அவர் உமக்குக் கொடுப்பார் என்பது எனக்குத் தெரியும்" என்றார்.

இயேசு அவரிடம், "உன் சகோதரன் உயிர்த்தெழுவான்" என்றார்.

மார்த்தா அவரிடம், "இறுதி நாள் உயிர்த்தெழுதலின்போது அவனும் உயிர்த்தெழுவான் என்பது எனக்குத் தெரியும்" என்றார்.

இயேசு அவரிடம், "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார். இதை நீ நம்புகிறாயா?" என்று கேட்டார்.

மார்த்தா அவரிடம், "ஆம் ஆண்டவரே, நீரே மெசியா! நீரே இறைமகன்! நீரே உலகிற்கு வரவிருந்தவர் என நம்புகிறேன்" என்றார்.

இயேசு உள்ளம் குமுறிக் கலங்கி, "அவனை எங்கே வைத்தீர்கள்?" என்று கேட்டார்.

அவர்கள் அவரிடம், "ஆண்டவரே, வந்து பாரும்" என்றார்கள். அப்போது இயேசு கண்ணீர் விட்டு அழுதார். அதைக் கண்ட யூதர்கள், "பாருங்கள். இலாசர்மேல் இவருக்கு எத்துணை அன்பு!" என்று பேசிக்கொண்டார்கள். ஆனால், அவர்களுள் சிலர், "பார்வையற்றவருக்குப் பார்வையளித்த இவர் இவரைச் சாகாமலிருக்கச் செய்ய இயலவில்லையா?" என்று கேட்டனர். இயேசு மீண்டும் உள்ளம் குமுறியவராய்க் கல்லறைக்கு அருகில் சென்றார். அது ஒரு குகை. அதை ஒரு கல் மூடியிருந்தது. "கல்லை அகற்றிவிடுங்கள்" என்றார் இயேசு. இறந்துபோனவரின் சகோதரியான மார்த்தா அவரிடம், "ஆண்டவரே, நான்கு நாள் ஆயிற்று; நாற்றம் அடிக்குமே!" என்றார்.

இயேசு அவரிடம், "நீ நம்பினால் கடவுளின் மாட்சிமையைக் காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா?" என்று கேட்டார். அப்போது அவர்கள் கல்லை அகற்றினார்கள். இயேசு அண்ணாந்து பார்த்து, "தந்தையே, நீர் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். நீர் எப்போதும் என் வேண்டுதலுக்குச் செவிசாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும். எனினும், நீரே என்னை அனுப்பினீர் என்று சூழ்ந்து நிற்கும் இக்கூட்டம் நம்பும்பொருட்டே இப்படிச் சொன்னேன்" என்று கூறினார்.

இவ்வாறு சொன்ன பின் இயேசு உரத்த குரலில், "இலாசரே, வெளியே வா" என்று கூப்பிட்டார். இறந்தவர் உயிரோடு வெளியே வந்தார். அவருடைய கால்களும் கைகளும் துணியால் சுற்றப்பட்டிருந்தன. முகத்தில் துணி சுற்றப்பட்டிருந்தது.

"கட்டுகளை அவிழ்த்து அவனைப் போக விடுங்கள்" என்று இயேசு அவர்களிடம் கூறினார்.

மரியாவிடம் வந்திருந்த யூதர் பலர் இயேசு செய்ததைக் கண்டு அவரை நம்பினர்.

மட்டக்களப்பு – கொழும்பு வீதியில் செகுசு பஸ் விபத்து; சாரதி கைது

உயிரிழந்த பெண்ணை அடையாளம் காண பொதுமக்களிடம் கோரிக்கை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியான சத்துருக்கொண்டான் பகுதியில் பஸ் மோதிய விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் வியாழக்கிழமை (23) இரவு இடம்பெற்றுள்ளதாகவும் பஸ் சாரதியை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லை என கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த தனியார் சொகுசுபஸ் சம்பவதினம் இரவு 10 மணியளவில் மட்டக்களப்பிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டுபயணித்தபோது கொழும்பு வீதியான சத்துருக்கொண்டான் பகுதியில் பெண் ஒருவர் மீது மோதியதையடுத்து சம்பவ இடத்தில் பெண் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து இச்சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணை அடையாளம் காணாத நிலையில், சடலத்தை மீட்டு மட்டு. போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதுடன், பஸ் சாரதியை கைதுசெய்துள்ளதாகவும் குறித்த பெண் தொடர்பாக அடையாளம் தெரிந்தவர்கள் கொக்குவில் பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மின்விசிறியில் தூக்கிட்டு குடும்பஸ்தர் உயிரிழப்பு

அம்பிளாந்துறையில் சம்பவம்

(மண்டூர் செய்தியாளர்)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அம்பிளாந்துறை பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் வியாழக்கிழமை (23) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அஞ்சல் வீதி அம்பிளாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதான பரமானந்தம் மயூரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட வராவார்.

பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரியும் குறித்த நபர் சம்பவ தினத்தன்று தனது வீட்டில் யாரும் இல்லாத நிலையில் மூன்று துண்டுச்சீட்டுகளை எழுதி தனது மரணத்தை தெரிவுசெய்திருந்துள்ளார். அதில் பாவத்தில் பாய்தல், வீட்டில் இறப்பது, தூக்கிட்டு மாண்டுபது என்று தெரிவுகளில் தனது வீட்டு அறையிலுள்ள மின்சிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டிருந்தார்.

அவர் தனது நாட்குறிப்பு புத்தகத்தினுள் தனக்கு கடன்கள உள்ளதாக கடிதமொன்றை எழுதி வைத்திருந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. குறித்த நபரின் மனைவி தாதிய உத்தியோகத்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் பீறற்ர் போலின் உத்தரவிற்கமைய சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரண அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸா ருக்கு உத்தரவிட்டுள்ளார். கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

சமூத்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் 2022ஆம் ஆண்டுக்கான சௌபாக்கியா வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது - 03ஆம் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை (23) நடைபெற்றது. சாய்ந்தமருது பிரதேச செயலக சமூத்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.ஜுஃபரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூத்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம், பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், பிரதேச செயலக கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, மாவட்ட சமூத்தி முகாமையாளர் கே.அசோக்குமார், சமூத்தி மகாசங்க முகாமையாளர் ஏ.எல்.யூ.ஜுனைதா, சமூத்தி கருத்திட்ட முகாமையாளர் நியாத் ஏ.மஜீத், சமூத்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.நபார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(மாளிகைக்காடு செய்தியாளர்)

கிழக்கு ஆளுநர் - கனேடிய உயர்ஸ்தானிகர் சந்திப்பு

(அப்துல்லாம் யாசீம், புளியந்தீவு, கிண்ணியா செய்தியாளர்கள்)

கிழக்கு மாகாணத்தில் சமூக அந்தஸ்துகளுக்கு ஆளான மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் திமதி அனுராதா யஹம்பத் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு வியாழக்கிழமை (23) இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் தங்களுடன் சகவாழ்வும் நல்லினக்கமும் உள்ளதா என கனடாவில் வாழும் இலங்கையர்கள் அடிக்கடி கேட்பதாக உயர்ஸ்தானிகர் இங்கு சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த ஆளுநர், தான் இந்தப் பதவியை ஏற்றுக்கொண்டவுடன் மேற்படி குழுவை நியமிக்க நடவடிக்கை எடுத்ததாகத் தெரிவித்து அந்தக் குழுவின் அறிக்கையின் பிரதியையும் உயர்ஸ்தானிகரிடம் ஆளுநர் வழங்கினார்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பிரதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் இதுவரை எந்த பதிலும் அளிக்காதது வியப்பளிப்பதாகவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் நீண்டநேரம் கலந்துரையாடியதுடன், கனடாவில் வாழும் புலம்பெயர் இலங்கைத் தமிழ் மக்கள் கிழக்கு மாகாணத்தில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்புவதாகவும் உயர்ஸ்தானிகர் இதன்போது தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் தொடர்பிலும் உயர்ஸ்தானிகர் ஆளுநரிடம் கேட்டறிந்தார். முன்னாள் ஜனாதிபதி மறைந்த ராஜபக்ஷ பயங்கரவாதத்தை அழித்ததன் பின்னர் செய்த உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் பலனாக இன்று திருகோணமலைக்கு இலகுவாக விஜயம் செய்ய முடியும் என ஆளுநர் பதிலளித்தார்.

இதன்போது, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க உள்ளிட்ட குழுவினரும் கலந்துகொண்டிருந்தனர்.

திருகோணமலை மாவட்ட புத்தரிசி விழா

(சீனக்குடா செய்தியாளர்)

திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் பெரும்போக அறுவடைக்கான 56ஆவது வருட புத்தரிசி விழா வெள்ளிக்கிழமை (24) சேருவர மகறல சேவைகள் நிலையத்தில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இது திருகோணமலை மாவட்ட கமறல அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட உதவி ஆணையாளர் என்.வில்னுதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் அறுவடைய கௌரவிக்குமுகமாக 40 சட்டிகளில் அரிசி வைக்கப்பட்டு, அவை எதிர்வரும் 02ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெற இருக்கின்ற தேசிய மட்ட குத்தரிசி விழாவுக்கு கொண்டுசெல்வதற்காக வைக்கப்பட்ட பிரதான பாத்திரத்தில் இடப்பட்டது.

இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்ட தலைமை கமறல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஓ.எம்.கைர், மாவட்ட கமறல அபிவிருத்தித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் s. தவஜாதன், சேருவர கமறல சேவை அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர் எஸ்.நவ்பர் மற்றும் கமறல சேவை நிலைய ஊழியர்கள், சர்வ மதத் தலைவர்கள், விவசாய சங்கங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு ஆளுநர் தலைமையில் பாடநூல் மற்றும் சீருடைகள் வழங்கும் நிகழ்வு

(மாளிகைக்காடு, கிண்ணியா செய்தியாளர்கள்)

கிழக்கு மாகாணத்தில் 2023ஆம் ஆண்டிற்கான பாடசாலை மாணவர்களின் பாடநூல் மற்றும் சீருடைகள் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (23) கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் திருகோணமலை ஸ்ரீமாவலி அம்பாள் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாடசாலை மாணவர்கள் இந்நிகழ்வில் வைத்து பாடசாலை பாடப்புத்தகங்களையும் சீருடைகளையும் பெற்றுக்கொண்டனர்.

இதன்போது கலந்துகொண்டு கருத்து தெரிவித்த ஆளுநர், கல்வியின் முக்கிய நோக்கம் தேர்வில் தேர்ச்சி பெறுவது மட்டுமல்ல, கல்வியின் மூலம் சிறந்த குணங்களைக்கொண்ட கனமான மனிதனை உருவாக்க வேண்டும். மேலும் அத்தகைய

மாணவர்களை மதிப்பிடுவதற்கான உத்தியை வகுக்குமாறு மாகாண அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திசாநாயக்க, மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் பிரகி, பாடசாலை அதிபர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்

easthamilan@gmail.com

உலருணவுப் பொருட்கள் வழங்கல்

(கிண்ணியா செய்தியாளர்)

தம்பலகாமம் பிரதேசத்திற்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு புனித நோன்பு மாதத்தை முன்னிட்டு உணவு பாதுகாப்பு திட்டம் எனும் கருப்பொருளில் முஸ்லிம் எயிட் நிறுவனத்தினால் உருணவுப் பொருட்கள் பிரதேச செயலக மண்டபத்தில் வியாழக்கிழமை(23) வழங்கப்பட்டது.

தலா 7000 ரூபா பெறுமதியான உருணவுப் பொதிகள் வழங்கப்பட்டதுடன் இத்திட்டம் கிண்ணியா, மூதூர் பிரதேச செயலகப் பகுதிகளிலும் மொத்தமாக 765 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவிய பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஜ.முஹீப், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் நிஹாத் மற்றும் முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் இணைப்பாளர் ரமீஸ் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

புல்மோட்டை பகுதி மீனவர்களுக்கு மீன்பிடி வள்ளங்கள் வழங்கிவைப்பு

(அப்துல்சலாம் யாசீம், கிண்ணியா, கந்தளாய் செய்தியாளர்கள்)

திருகோணமலை, புல்மோட்டைப் பகுதியைச் சேர்ந்த 20 மீனவ பயனாளிகளுக்கு மீன்பிடி வள்ளங்களும் உபகரணங்களும் வியாழக்கிழமை (23) வழங்கப்பட்டன.

பிலால்நகர், சதாம்நகர், பட்டிகுடா ஆகிய கிராமங்களுக்கான முன்மாதிரி கிராம அபிவிருத் தித் திட்டத்தின்கீழ் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக முஸ்லிம் எய்ட் ஸ்ரீலங்கா நிறுவனம் 20 மீனவர்களுக்கு மீன்பிடி வள்ளங்கள் மற்றும் உபகரணங்களை கையளித்த னர். பட்டிகுடா, களப்பு பகுதியில் நடைபெற்ற இந்நிகழ்வில் புல்மோட்டை 4ஆம் வட்டார கிராம பொருளாதார சமூத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முஸ்லிம் எய்ட் நிறுவன திட்ட ஒருங்கிணைப் பாளர் எம்.ஏ.எம்.அஸ்வர் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்வாதார உதவிப் பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கினர்.

இந்நிகழ்வில் கிராம உத்தியோகத்தர் உரையாற்றுகையில், இத்திட்டத்தை நீங்கள் வெற்றிகரமாக செயற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியநோம், முஸ்லிம் எயிட் நிறுவனமும் பிரதேச செயலகமும் இத்திட்டத்தினை தொடர்ச்சியாக கண்காணிக்கும். எனவே, வழங்கப்பட்ட உபகரணங்களை முறையாக பயன்படுத்தி உச்சபயனை அடையுமாறும் கூறினார். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார கஷ்ட நிலைமைக்கு மத்தியில் நாட்டிலுள்ள மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கு டன் முஸ்லிம் எய்ட் நிறுவனம் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பயான் நிகழ்வு ஞாயிறன்று

(திகாமடுல்ல செய்தியாளர்)

அட்டாளைச்சேனை அல்-இர்பாதா கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில் புனித ரமழான் மாதத்தில் இடம்பெறும் 12ஆவது வருட ஹதீஸ் மஜ்லிஸ் பயான் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (26) காலை 10.30 மணியளவில் பெரியபாலத்தடி முன்றலில் இடம்பெறும்.

நிகழ்வில் அஷ்ஷெய்க் எம்.அர்க்கம் நூராமித்தின் (செயலாளர் - அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, பணிப்பாளர் - நூராளியா அரபுக்கல்லூரி - மாத்தறை) உரை இடம்பெறவுள்ளது.

பெண்களை வலுப்படுத்துவதற்கான மாபெரும் வர்த்தகக் கண்காட்சி

(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

பெண்களை வலுப்படுத்துவதற்கான வர்த்தகக் கண்காட்சி மற்றும் புத்தாக்க நிகழ்வுகள் திருகோணமலை மாவட்ட செயலாளர் வி. எச். என். ஜயவிக்ரம தலைமையில் வியாழக்கிழமை (23) மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகம், திருகோணமலை மாவட்ட செயலகம், ஜி.ரி.செட் ஜேர்மன் கார்ப்பரேஷன் மற்றும் Nucleus மன்றம் ஆகியன இணைந்து ஏற்பாடுசெய்த "அவள் தேசத்தின் பெருமைக்குரியவள்" எனும் தொனிப்பொருளிலான சர்வதேச மகளிர் தினம் - 2023 மாவட்ட நிகழ்வுக்கு இணைவாக நடத்தப்பட்ட இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அதிதியாக கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தார்.

அங்கு அமைக்கப்பட்ட 68 விற்பனைக் கூடாரங்களில் விசேட வேலைத்திட்டங்களாக டிஜிட்டல் வலயம், ICT தொழில் வங்கி மற்றும் தொழில் வழிகாட்டுதல்கள், ICT பாடநெறிகள் மற்றும் Webinars, டிஜிட்டல் வங்கிச் சேவைகள், இலத்திரனியல் விளையாட்டுகள், கண்காட்சிக் கூடாரங்கள், சுயதொழில் உற்பத்திப்பொருட்கள் போன்றன அமையப்பெற்றதுடன், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் வளர்ந்தோர்களுக்கான விசேட வேலைத்திட்டங்கள், ICT துறையில் இளைஞர், யுவதிகளுக்கான தொழில்வாய்ப்பு தொடர்பாக பெற்றோரை தெளிவூட்டல், ICT துறையின் புதிய பரிணாமம் மற்றும் அதற்குரிய பாடநெறிகள், பிள்ளைகளின் நிகழ்நிலை, சமூக ஊடகங்கள் வாயிலாக இடைஞ்சல்களுக்கு உட்பட்டவர்களுக்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், பாதுகாப்பான முறையில் இணையத்தளத்தை கையாளுதல் மற்றும் சைபர் குற்றங்கள் தொடர்பில் அறிவூட்டல் போன்ற கூடாரங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இதில் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 30இற்கும் மேற்பட்ட தொழில் முயற்சியாளர்களும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டத்திலுள்ள தொழில் முயற்சியாளர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இந்த வர்த்தகக் கண்காட்சி மற்றும் புத்தாக்க நிகழ்வுக்கான நிதியுதவியை சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனி நாடுகளின் தூதுவராலயம் வழங்கியிருந்தமையும், IT4 Girls என்ற வேலைத் திட்டத்தை நிறைவுசெய்த 24 யுவதிகளுக்கும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுயதொழில் முயற்சியாளர் யுவதிகளுக்கும் சான்றிதழ் மற்றும் நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுபில நுவான் அத்துக்கோரல, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதர், மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திசாநாயக்க, கிழக்கு மாகாண பேரவைச் செயலக செயலாளர் எம்.எம்.நளீம் மற்றும் மாகாண திணைக்களங்களின் செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், மாகாண ஆணையாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

மனதில் நீங்கா மலையகக் கலைகள்

அர்ச்சுனன் தபசு

பாகம்–02

தங்கராஜு யுவராஜ்

மகாபாரதத்தில் மன்னன் பாண்டுவின் ஐந்து மகன்களான தர்மன் (யுதிஷ்டிரன்), பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோரே பஞ்சபாண்டவர்கள் என்பர். இவர்களில் முதல் மூவர் அரசி குந்திதேவி மூலமும், கடையிருவர் அரசி மாத்ரி மூலமும் மன்னன் பாண்டுவுக்குப் பிறந்தவர்கள்.

இவர்களைப் பற்றியும், இவர்களின் பெரியப்பா திருதராஷ்டிரனின் நூறு மகன்களான கௌரவர்களைப் பற்றியும் பேசும் இதிகாசமே மகாபாரதமாகும்.

திருதராஷ்டிரனின் முதற்பிள்ளை துரியோதனன் தலைமையில் கௌரவர்களுக்கும், கண்ணன் துணையோடு பஞ்சபாண்டவர்களுக்கும் நடந்தப் போரான குருசேத்திரப்போரே மகாபாரதத்தின் முக்கிய நிகழ்வாகும்.

இதற்கு முன்னர் பஞ்சபாண்டவர்கள் தங்களுடைய நாடு, நகரம், வீடு, வாசல் என்பவற்றை வைத்து கௌரவர்களிடம் பகடையாடியபோது, சகுனியின் சூழ்ச்சியால் பாண்டவர்கள் கௌரவர்களிடம் தோல்வியுற்று அவர்களின் செல்வம், நாடு, நகரம் உள்ளிட்ட அனைத்தையும் இழக்கின்றனர்.

அதற்கு பின்னர் திருதராஷ்டிரன் பாண்டவர்களையும் குந்தியையும் அழிப்பதற்கு அரக்கு மாளிகை ஒன்றை அமைத்து வைத்து அவர்களை எரிக்க, ஏற்பாடு செய்யவே, இச்சதியை முன்கூட்டியே அறிந்த விதுரன், யுதிஷ்டிரனை எச்சரித்தது மட்டுமன்றி, அவர்கள் தப்பும் மார்க்கத்தையும் சொல்லி கொடுக்க அதன்பிறகு வாரணாவதத்தில் வசித்த காலத்தில், தன்னோடு நெருக்கமாகப் பழகிய ஒரு வேடுவப் பெண்ணுக்கும் அவள் பிள்ளைகளுக்கும் உணவும் மதுவும் கொடுத்து உறங்கச் செய்தபின், சுரங்கம் வழியே குந்தியும் பிள்ளைகளும் தப்பிச்செல்ல, வேடுவப் பெண்ணும் அவள் பிள்ளைகளும் அரக்கு மாளிகையில் எரிந்து உயிரிழந்தனர்.

இவ்வாறு தப்பிச்சென்ற அவர்கள் வனம் ஒன்றில் மறைந்து வாழ்ந்த சமயம், சகுனியின் சூழ்ச்சியால் தாங்கள் இழந்ததை மீண்டும் பெறவேண்டுமானால் பாண்டவர்களில் ஒருவர் காட்டுக்கு சென்று கழுமரத்தில் ஏறித் தவம் செய்ய வேண்டும் என்னும்போது இதற்காக முதுகுப்பகுதியில் மச்சரேகைக் கொண்ட அர்ச்சுனன் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

இவர் தவத்திற்குத் தகுந்தவர் தானா என சோதித்துப் பார்ப்பதற்காக அர்ச்சுனன் செல்லும் வழியெல்லாம் கிருஷ்ணன் மாறுவேடங்களில் சென்று அவரை சோதிக்க இவை அனைத்திலும் வெற்றிக்கண்டு அர்ச்சுனன், பத்ரகாளியின் உதவியுடன் கழுமரத்தில் கடுமையாகத் தவம் புரிந்து வெற்றிகண்டு, ஏழைக்கன்னியை மணமுடிக்கும் கதையே அர்ச்சுனன் தபசு.

இவ்வாறு தேர்ந்தேடுக்கப்பட்ட அர்ச்சுனன் தவம் செய்வதற்கு 11 வனங்களை கடந்து சென்று கழுமரத்தில் ஏறி தவம் செய்ய வேண்டும். இதற்காக தன் தாயிடமும், சகோதரர்களிடமும் ஆசிபெற்ற அவர் ஒவ்வொரு வனமாக செல்லும் போதும் கிருஷ்ணன், அர்ச்சுனன் தவம் செய்ய தகுதியானவர் தானா? என சோதிக்க பல வேடங்கள் தரித்து அர்ச்சுனனை சோதிப்பார், இவை அனைத்தையும் கடந்து அர்ச்சுனன் தவம் செய்து வரம் பெற்று வர வேண்டும்.

இவ்வாறு அர்ச்சுனன் தன் உறவுகளிடம் ஆசி பெற்று தவம் செய்வதற்கு செல்லும்போது அவரை வாழ்த்தி அனுப்பி வைப்பதற்கு அங்கிருந்தவர்கள் அவர் செல்லும் வழி எங்கும் அலங்கரித்து வைக்க, கட்டியக்காரன் (வேலையாள்) அந்த மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி அலங்கார வேலைகளை செய்து முடிக்கிறார்.

கட்டியக்காரன் –
கட்டியக்காரனங்கு வாறேன் ஒய்யாரமாக
காரியக்காரனங்கு வாறேன்
கைய்யில் பிரம்பும் கொண்டு கடுவாய் மீசை முறுக்கி
கட்டியக்காரனங்கு வாறேன் ஒய்யாரமாக
காரியக்காரனங்கு வாறேன்
அர்ச்சுன மகாராஜன் வருகின்ற வீதியே
அலங்காரம் செய்ய சொன்ன சேதியே
அரும்புல்லை. சிறுபுல்லை வெட்டுங்கோ
அதை வேலிக்கு அப்பாலில் போடுங்கோ
தூணுக்கு தூணாக நாட்டுங்கோ
ஒரு தூண்டா மணிவிளக்கேற்றுங்கோ
அங்கு மாவிலை தோரணம் கட்டுங்கோ
அங்கே அர்ச்சுன மகாராஜன் வருவதை காணுங்கோ

இவ்வாறு அர்ச்சுனன் வருவதற்காக கட்டியக்காரன் சொற்படி ஊர்மக்கள் அனைவரும் ஊர் முழுவதும் அலங்காரம் செய்து அர்ச்சுனன் வருகைக்காக காத்திருக்கின்றனர்.

அர்ச்சுனன் –
அந்த தேருக்கு புரவி கட்டி திசை கம்பி கொடி பறக்க
அழகான தேரிலேறி அர்ச்சுனன் வறேன் ஹரஹர
ஐம்பத்தாறு பேர்பராளி படையாலவே ஹரஹர
கூடிநின்ற ராஜமன்னன் படைசூழவே ஹரஹர
ஓம் அறஹற சாம்பசிவனே ஹரிவேசோ கிரவேசோ
ஓம் உமையவரே வந்துகாருமே ஓம் ஹரஹரஹர
மாவாதி சூரருக்கு மண்ணலந்த மாயவரே
மாயவரே வந்துகாருமே ஓம் ஹரஹரஹர
மாயவரே வந்துகாருமே
பஞ்வரை காத்தது போல் பாலர்களை காக்க வேண்டும்
மாயவரே வந்துகாருமே ஓம் ஹரஹரஹர
மாயவரே வந்துகாருமே

இவ்வாறு அர்ச்சுனன் தானிருந்த நாட்டை விட்டு வெளியேறி தவம் செய்வதற்காக செல்ல தொடங்கவே, முன்பு கூறியது போன்று அர்ச்சுனனை சோதிப்பதற்கு கிருஸ்ணன் பல வேடங்களைத் தரித்து அவரை சோதிக்கவும் தயாரானார்.

அர்ச்சுனன் பெண் சபளம் கொண்டவர் என்பதால் கிருஸ்ணனோ முதலில் மோகினி வேடமிட்டு அர்ச்சுனன் முன் தோன்றி அவர் தவம் செய்ய செல்லும் பணியை தடுக்க முயல்கிறார்.

இவ்வாறு அர்ச்சுனன் முதல் வனத்தை நோக்கி செல்லும்போது அவரை தடுப்பதற்காக மோகினி வருகிறார்.

மோகினி –
ஹறிகறி ஹறிகறி ஹறிராமா ராமா ஹரிராமா ராமா
ஆதரிக்க வேண்டுமைய்யா ரகுராமா
அங்கே பஞ்சவரை காத்தது போல் ஹரிராமா ராமா ஹரிராமா ராமா
இந்த பாலர்களை காக்க வேண்டும் ரகுராமா
அந்த அடியாரை காத்தது போல் ஹரிராமா ராமா ஹரிராமா ராமா
ஆதரிக்க வேண்டுமைய்யா ரகுராமா

மோகினி –
ஹரிஹிரி மோகினி வாறேன் அர்ச்சுனன் மனம் சோதிக்க
ஹரிஹிரி மோகினி வாறேன் அர்ச்சுனன் மனம் சோதிக்க
மோடி செய்யாமலே மோகினி வந்திடுவேன்
பகுடி செய்யாமலே பார்தீபன் ரஞ்சிதமே
ஹரிஹிரி மோகினி வாறேன் வெகு வேடிக்கையாக
ஹரிஹிரி மோகினி வந்தேன்
ஹரிஹிரி மோகினி வந்தேன் அர்ச்சுனன் மனம் சோதிக்க

இவ்வாறு மோகினி அர்ச்சுனனின் தவத்தைக் கலைக்கவும், அவரை மயக்கவும் வரவே இதையெல்லாம் பொருட்படுத்தாத அர்ச்சுனன் தான் தவம் செய்து தன் சகோதரர்களை பழைய நிலைமைக்கு கொண்டு வர வேண்டும் என்ற ஒற்றை எண்ணத்தை மாத்திரம் மனதில் கொண்டு தவம் செய்வதற்காக செல்கிறார்.

அர்ச்சுனன் –
தவம் செய்ய நடந்தாராம் அர்ச்சுன ராஜன்
தவம் செய்ய நடந்தாராம்
தவம் செய்ய நடந்தாராம் தர்மன் தம்பி அர்ச்சுனன்
தவம் செய்ய நடந்தாராம் அர்ச்சுன ராஜன்
தவம் செய்ய நடந்தாராம்

இவ்வாறு அர்ச்சுனன் செல்லும்போது மீண்டும் அவரை வழிமறித்த மோகினி "நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள், யார் நீங்கள்? ஏன் இந்த அத்துவானக் காட்டில் தனியாக செல்கிறீர்கள்? எங்கு செல்கிறீர்கள்? என கேள்விக்கு மேல் கேள்விகளைக் கேட்க அதற்கு அர்ச்சுனன்,

அர்ச்சுனன் –
யாரம்மா தாயே நீ அறிய தவங்கள் முன்னே
ஏனம்மா தாயே நீ என்னை வழி மறித்தாய்
வழியை மறித்த சேதி யாதென்று சொல்லுமம்மா
தவத்தை மறித்த சேதி தயவுடனே சொல்லுமம்மா
தாயே அம்மணி தாயே..

அச்சுனன் செல்லும் வழியை மறித்த மோகினியைப் பார்த்து அவர் மோகினியிடம் கேட்க அதற்கு மோகினி,

மோகினி –
தங்கள் பல்லழகைக் கண்டு பாவை ஆசைக் கொண்டேன் சங்குமாறே
தங்கள் பல்லழகைக் கண்டு பாவை ஆசைக் கொண்டேன் சங்குமாறே
உங்கள் முதுகழகைக் கண்டு மோகினி நான் வந்தேன் சங்குமாறே
உங்கள் முதுகழகைக் கண்டு மோகினி நான் வந்தேன் சங்குமாறே

அர்ச்சுனன் –
என் பல்லுலேயும் ஒன்னுமில்ல பச்ச மணி மின்னுதம்மா
என் பல்லுலேயும் ஒன்னுமில்ல பச்ச மணி மின்னுதம்மா
என் முதுகிலேயும் ஒன்னுமில்ல மச்ச ரேகை மின்னுதம்மா
என் முதுகிலேயும் ஒன்னுமில்ல மச்ச ரேகை மின்னுதம்மா

மோகினி –
உங்கள் மார்பழகைக் கண்டு மங்கை ஆசைக் கொண்டேன் சங்குமாறே
உங்கள் மார்பழகைக் கண்டு மங்கை ஆசைக் கொண்டேன் சங்குமாறே

அர்ச்சுனன் –
என் மார்பிலேயும் ஒன்னுமில்ல மச்ச ரேக மின்னுதம்மா
என் தோலிலேயும் ஒன்னுமில்ல துளசிமணி மின்னுதம்மா
என் மார்பிலேயும் ஒன்னுமில்ல மச்ச ரேக மின்னுதம்மா
என் தோலிலேயும் ஒன்னுமில்ல துளசிமணி மின்னுதம்மா
ஏனம்மா தாயே நீ என்னை வழி மறித்தாய்
வழியை மறித்தாயானால் தவம் குழைந்து போகுமம்மா
தாயே என்னை பெற்ற அம்மணித் தாயே

மோகினி அர்ச்சுனனின் அழகை வர்ணித்து அவரிடம் "நான் உங்கள் அழகில் மயங்கியே உங்களை வழிமறித்தேன். நீங்கள் எனக்கு வேண்டும். வாருங்கள் என் அரன்மணைக்கு செல்வோம்" எனக் கூற அதற்கு அர்ச்சுனன் "பெண்ணே நான் இவ்வளவு கூறியும் நீ கேட்கவில்லை. உன்னோடு வருவதற்கு எனக்கு ஆசையில்லை" எனக் கோபத்துடன் கூறிய அவர்,

அர்ச்சுனன் –
எடுத்தேன் எடுத்தேன் அர்ச்சுன ராஜன்
பானத்தை தொடுத்தேன் தொடுத்தேன்
எடுத்தேன் எடுத்தேன் அர்ச்சுன ராஜன்
பானத்தை தொடுத்தேன் தொடுத்தேன்

இவ்வாறு கோபம் கொண்ட அர்ச்சுனன் தன் வில்லை எடுத்து மோகினி மீது அம்பைத் தொடுக்க, அர்ச்சுனனின் அம்பு பட்டு மோகினி மாண்டு போகிறாள்.

தொடரும்...

கங்காணியும் கலையரசியும்

(மண்சரிஞ்ச கதையும் மடையனாக்கும் எம்.பிமாரும்)

கங்காணி: ஏ.. புள்ளங்களா.. வானோ இருட்டிக்கிட்டு இருக்கு. இன்னக்கி மழ வரும் போல, தல ரெட்டு கொண்டாந்திங்களா? டக்கு புக்குனு எடுங்கடி.. ஏப்புள்ள சரசு.. கத தா அங்க ஒனக்கு..

சரசு: இல்லங்கய்யா.. தல ரெட்ட வச்சிட்டு வந்துட்டே.. அதாங்கய்யா சொல்லிக்கிட்டு இருந்தே..

கங்காணி: நல்லாருக்கு... அதலா கொழுந்து பேக்குல வச்சிக்கத்தானே சொல்லிருக்கு.. மழ வந்தா தெரியு..

சரசு: கடவுளேனு மழ வரக்கூடாது வேல முடியிறவரக்கு..

கங்காணி: ஆமா ஆமா நல்லா வேண்டிக்க.. டக்குபுக்குனு றாத்தய போட்டா மழக்கி முன்னுக்கு வீட்டுக்கு போவலா... கதய கொறச்சிங்கனா சரி புள்ளங்களா..

கலை: ஆமாங்கய்யா.. மழய பாத்தா ஒருபக்கோ பயமாத்தா இருக்குங்கய்யா.. போன ஞாயித்துக்கெழம பாத்திங்களா பண்டாரவள பக்கோ என்னமோ எஸ்டேட்.. ம்..ம்.. என்னா நல்ல பேருங்கய்யா அது.. ஆ.. கபரகல தோட்டத்துல வீட்டுமேல மண்சரிஞ்சி எஸ்டேட் ஆளுங்களா அவதிப்பட்டாங்க...

கங்காணி: ஆமா புள்ள நியுஸ்ல பாத்தே.. பாவோ புள்ளங்க அந்த ஆளுங்க..

சரசு: என்னாங்கய்யா பாவோ? போங்கய்யா.. வயித்தெரிச்சலுங்கய்யா.. வயிரே பத்துதுபோங்க.. இன்னக்கி நேத்தா இப்புடி நடக்குது நமக்கு?.. மீரியபெத்த ஞாபகோ இருக்கா?

கங்காணி: ஆமா ஆமா மறக்க ஏழுமா எத்தன உசுரு மண்ணோட மண்ணா போனுச்சி..

சரசு: அத்தன பேர பலிகுடுத்தும் நம்பலுக்கு இன்னமு ஒரு பாதுகாப்பு வசதியு இல்லதானுங்களே?

கங்காணி: என்னாத்தா செய்யபுள்ள, அரசாங்கோ பாத்துக்கிட்டுத்தா இருக்கு. ஆனா.. ஒன்னு நடந்தபாடுல்ல..

கலை: ஐயா இந்த வீடும் நமக்கு சொந்தோ இல்லங்கய்யா.. இந்த ஊரு நமக்கு சொந்தோ இல்லங்கய்யா.. இதுல உசுரு மட்டுந்தா இன்னமு இருக்கு. ஆனா எந்த நேரத்துல என்னா நடக்குனு யாருக்கு தெரியாதுங்கய்யா.. மனுசங்கத்தா பலிவாங்குறாங்கனா இந்த இயற்கயு சேந்துஇல்லயா நம்பள வாட்டுது.. அந்தகடவுளுக்கு கண்ணு இல்லயோ தெரியல..?

சரசு: அட என்ன சொல்ல புள்ள.. எல்லாத்துக்கு நம்பளுந்தா காரணோ.. எல்லாமே இப்ப தலகீழாத்தானே நடக்குது.. என்னாநடந்தாலு நம்பள கண்டுக்கப்போறதுஇல்ல புள்ள.. நடந்து முடிஞ்சோட்டி அடிச்சி புடிச்சிக்கிட்டு வருவாங்க.. எத்தன பாத்தாச்சி...

கங்காணி: ஆமா புள்ள தொட்டது தொன்னூறுக்கு அரசியல்வாதிங்களயே கரச்சிக்கொட்டு.. அவங்களப்பத்தி பேசாட்டி தூக்கோ வராதே.. வேலய பாருங்கடி... கத குடுத்தா இப்புடித்தா..

கலை: ஐயா ஒங்களுக்கு இந்த நெலமத்தாங்கய்யா.. நாளக்கி நமக்குஎன்னா நடந்தாலு நம்பள கேக்க ஒரு நாதியுஇல்ல.. ஏங்கய்யா.. நம்ப நாட்டுல எத்தனயோ மினிஸ்டர்ஸ்மாருங்க இருக்காங்க.. என்னானமோ பார்ளிமன்டுல பேசுறாங்க. ஆனா.. உசுரு போனதுக்கு பெறகு பார்ளிமன்டுல பேசி என்னா பிரயோசனம். இப்ப பரிதாபபட்டு வேல இல்லங்களே..

கங்காணி: எங்க புள்ளங்க.. நீங்க நெனக்கிறமாதி இல்ல.. மினிஸ்டர்மார்க்கு இருக்குற வேல கஷ்டோ சொன்னா புரியாதுங்கடி ஒங்களுக்கு.. அந்த கதய விட்டுட்டு வேலய பாரு மழ வரபோவுது..

சரசு: ஐயா மழனு சொல்லயுந்தாங்கய்யா இந்த கத வந்துச்சி.. நாளக்கே நம்ப எஸ்டேட்டுல தண்ணி கொஞ்சம் கூட வந்துட்டாலு மேட்டு லயோ மீரியபெத்தமாதிதா ஆகுங்கய்யா தெரியுந்தானுங்களே?

கலை: ஐயா பெருசா ஒன்னு கேக்கலங்கய்யா.. மாட மாளிகயோ தட்டுவச்ச வீடோ நாங்க கேக்கல.. குடுக்குற பத்துக்கு பத்து காம்புறாவுல நிம்மதியா இருக்க குடுத்தா போதுங்கய்யா.. வேற ஒன்னு வேணாங்கய்யா..

சரசு: அன்னக்கி மீரியபெத்த.. இன்னக்கி கபரகல.. ம்ம்.. நாளக்கி நமக்கு நடக்காதுனு என்னாங்கய்யா நிச்சயோ? இந்தமாதி பிரச்சன மலயக பக்கோ இருக்குனு அரசாங்கத்துக்கு நல்லா தெரிஞ்சும் முன்னுக்கே சரி இந்தமாதிரி அனர்த்தோ வரப்போகுதுனு சொல்லலாந்தானேங்கய்யா..

கலை: நாங்கத்தா படிக்காத பட்டிகாடு.. படிச்ச பெரிய பெரிய ஆளுங்களா இருக்காங்கத்தானே சொல்லி எதாவது செய்யலாமேங்கய்யா. அவுங்கஅவுங்க புள்ளகுட்டி உசுர சரி காப்பாத்திக்குவாங்கதானேங்க..

கங்காணி: நீசொல்றது சரித்தா புள்ளங்க.. ஆனா நம்பலால இந்த மலகாட்டுல பொளம்ப மட்டுந்தாமுடியு.. படிச்சவுங்க எம்பிமாருங்க பாத்து எதாச்சு செய்வாங்க புள்ள.. பொளம்பாம பொழப்ப பாருங்க.. அப்பரோ வேற பிரச்சன வந்துரு புள்ளங்களா..

கலை: சரிங்கய்யா.. எதாவது விடிவு வந்தா நம்ப புள்ளங்க சரி நிம்மதியா வாழுவாங்கதானே..

ம.அகிலேஸ்

பலி கொண்ட பூகம்பம்..!

துருக்கியிலும் சீனாவிலும்
பூகம்பம் தோன்றியே
மக்களின் உயிர்களைப் பறித்தது!

கண்ணீரும் கவலையுமாக(ப்)
பனியுறைந்த வீதிகளில்
பயத்தில் சனங்கள் தெறித்தன!

ஆழ்ந்த தூக்கத்தில்
காவு கொண்டே
சுடுகாடாக்கியது இயற்கை
அனர்த்தம்!

பரிதாபம் நிறைந்தே
இடருக்குள் சிக்கிய
மக்களின் வாழ்வும் உணர்த்தும்..!

அனாதைகளும் விதவைகளும்
உருவாகிடக் காரணமான
பூகம்பத்திற்குள் சிக்கியது
நாடும்..!

மீட்புப் பணிகளும்
தூரிதமாய்ச் செயல்பட்டும்
துயரம் நீங்காது வாடும்..!

ஆயிரக் கணக்கில்
மரணத்தைத் தந்தே
அமைதியாகிப் போனதோ
சீற்றம்..!

காலம் கடந்தாலும்
மனதில் நீங்காது
மீண்டெழுவதால் வராது
மாற்றம்..!

குழந்தைகளும் முதியோர்களும்
படும் வேதனை
ஆழ்மனதை உருக்குது
இறைவா..!
நடந்ததை நினைக்கையில்
மாறாது தொடர்ந்தே
இடரையேத் தருகிறது நிறைவா..!

ஏன் வந்தாய்
எதற்குக் கொன்றாய்
அப்பாவி உயிர்களைப்
பூகம்பமே..!
தாங்காது தவிக்கிறது(த்)
தூங்காது விழிக்கிறது
உனது அழிவால் துன்பமே..!

பரிதாபம் நிலைத்தே
புன்னகையும் பறிபோய்
சிலையாகிப் போனது வாழ்வும்!
செய்வதறியாதுத் திகைத்தே
வசந்தமும் தொலையவே
அணைத்து நிற்கிறது தாழ்வும்..!

இடிபாட்டிற்குள் சிக்கியே
சிதைந்த மக்களை(க்)
கண்டதும் கொதிக்குது
உள்ளங்கள்..!
இறைவனிடம் கையேந்தி
பிரார்த்தனை செய்திட
எல்லோரும் கையேந்தி
நில்லுங்கள்..!

– ஏரூர்
எம்.ரி.எம்.அன்ஸார்
ஏறாவூர்–

காத்திருந்த வேளையிலே

காதல் சிறகடித்து
காத்திருந்த வேளையிலே
கல்லிலே உயிரெழுப்பி
காலமெல்லாம் பறக்க விட்டான்.

ஆயிரம் இதயங்களில்
அன்பில் நிறைந்தவள்
ஆண்களின் இதயத்தை
ஆலிங்கனம் செய்தவள்

காலம் உள்ளவரை
கல்லறையாக நின்றாலும்
காதலர் உள்ளமதை
கண்ணியமாய் தீண்டி விடும்

பேருலகை ஆண்டவனும்
பேதையரின் உள்ளத்திலே
பீடு நடை போட்டுவிட்டால்
காதலன் நெஞ்சினிலே
கனிந்து உருகிவிடும்

பளிங்கு கல் எடுத்து
பாரினில் வடித்த கலை
காதலினை வென்றுவிட்ட
கலை அமுத பொக்கிஷமே

என்னவனை நான் நினைத்து
ஏங்கி தவம் இருந்தும்
காதல் பட்ட காயம் எல்லாம்
கல்லறையாய் காணுதங்கே!!!

– கவிஞர்.
வே.இராமர்–

மனிதம் ஏங்குதம்மா

தெருவோரம் தடுமாறும்
உருகண்ட
என்பேனா திறந்த தம்மா
பருவங்கள் பல தாண்டிப்
பரிதவிக்கும்
பாட்டிகதை பகரு தம்மா

சருகாகிப் போனவுடல்
தருவொன்றின்
நிழல்வேண்டிச் சரிந்த தம்மா
கரு தந்த உறவெல்லாம்
விட்டதுவோ
எண்ணிமனம் கலங்கு தம்மா

எண்ணெயிடாக் கூந்தலதோ
எத்தனைநாள்
என எண்ணி ஏங்கு தம்மா
புண்ணெல்லாம் காலினிலே
பல மாதம்
மருந்தின்றிப் புலம்பு தம்மா
தண்ணீரைக் காணாத
மெய்யதுதன்

நிலையெண்ணித் தவிக்கு தம்மா
உண்பதற்கு முணவின்றி
வயிறதுவோ
பசியதனால் உலர்ந்த தம்மா
கந்தலுடை மானத்தை

மறைப்பதற்கு
வழியின்றிக் கதறு தம்மா
வெந்திருக்கும் பாதமதில்
வெயில் மீண்டும்
சுடவலியோ மிகைக்கு தம்மா
சிந்துகின்ற மழைத்துளியால்,
குளிர்காற்றால்

மேனியதோ திமிர்த்த தம்மா
வந்துவிழும் வலிகளினால்
வாயுதிர
மறுத்துள்ளம் வாடு தம்மா

தாயவளின் மாண்புணராச்
சேய்களது
புறக்கணிப்போ தழும்பி தம்மா
காய்க்கின்ற காலமது
முடிந்ததில் கை
விட்டனரோ கயமை யம்மா
வாய்விட்டுப் பேசுகின்ற
மனுநேயம்
பெண்ணுரிமை மடியு தம்மா
ஏய்த்தோர்க்கும் தொடர்ந்திடுமே
யிந்நதநிலை
யெனமனிதம் ஏங்கு தம்மா

– "கவிச்சுடர்"
மு.மீ.அமீர் அலி–

பாதுகாப்போம் இயற்கையை

பாதுகாப்போம் இயற்கையை
காடுகள் இல்லையென்றால்
நாடுகள் இல்லை
நாட்டு மக்கள் நலம் பெற
பிராண வாயுவை வழங்கும்
காட்டில் வாழும் மரங்களே
காடழிப்பை தடுப்போம்

காத்திரமாக செயல்படுவோம்
நாமும் வாழ்ந்து நாட்டு
மக்களையும்
நலமாக வாழவைப்போம்
காடுகளை வளர்ப்போம்
காடுகளை நேசிப்போம்!

– காத்தநகர்
அபூ அஸ்மியா–

நகைச்சுவை கதை

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன், ஒரு சமயம் இங்கிலாந்தில் நடைபெற்ற விருந்தொன்றில் கலந்து கொண்டிருந்தார்.

அச்சமயம் ஆங்கிலேயர் ஒருவர் கூட்டத்தின் மத்திமில் உரையாட தொடங்கினார். பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவர், "இறைவனுக்கு ஆங்கிலேயர்கள் மீதுதான் அன்பு அதிகம். அதனால்தான் மிகவும் ரசித்து அழகாக, வெண்மையாக எங்களை படைத்திருக்கிறார். அதனால்தான் நாங்கள் வெண்மை நிறத்தில் இருக்கிறோம்" என்று தற்பெருமையோடு பேசி முடித்தார்.

அந்த ஆங்கிலேயர் பேசி முடித்ததும் டாக்டர் ராதாகிருஷ்ணன், அந்தக் கூட்டத்திற்கு இடையே உரையாட தொடங்கினார். அப்பொழுது அவர் ஒரு குட்டிக் கதையை சொல்ல ஆரம்பித்தார்.

"இறைவன் ஒரு நாள் ரொட்டி சுட ஆசைப்பட்டு, அதற்கான முயற்சியில் இறங்கினார். முதல் ரொட்டியை சுட்டார். ஆனால், அது சரியாக வேகவில்லை. அதனாலே சில பேர் வெள்ளையாய் பிறந்தார்கள்.

இரண்டாவதாக ஒரு ரொட்டியை சுட்டார். அது அதிக நேரம் சுடுபட்டதால் கருகிப் போனது. அதனால் சில பேர் கறுப்பாய் பிறந்தார்கள்.

இறைவன் இப்படி இரண்டு மூன்று தடவை அனுபவத்திற்கு பின்னர், மூன்றாவது ரொட்டியை மிக சரியான பக்குவத்தில் தயார் செய்தார். அது அரை வேக்காடாகவுமில்லாமல், கரிஞ்சும் போகாமல் சரியான பக்குவத்தில் தயாரானது.

அதன் காரணமாகவே இந்தியர்களாகிய நாங்கள் கருப்பும் இல்லாமல் வெள்ளையும் இல்லாமல் சரியான நிறத்தில் பிறந்திருக்கிறோம்" என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

இதை கேட்டதும் அக்கூட்டத்தில் உள்ள அனைவரும் கலலவெனறு சிரிக்கத் தொடங்கினார்கள். முதலில் பேசிய ஆங்கிலேயருக்கு வெட்கமாய் போனது.

தமிழன் ரசிகர்

இது எங்க ஏரியா

இளைஞர்களின் நாயகன்

உலகத் தலைவர்களில் அப்துல் கலாம் அளவுக்கு இளைஞர்களிடம் யாரும் பேசியதில்லை. ஒருமுறை அப்துல் கலாமிடம் மாணவி ஒருவர் எது நல்ல நாள்? என்று கேள்வி கேட்டார் அதற்குப் பதிலளித்த அப்துல் கலாம் சூரிய ஒளி பட்டால் பகல், படாவிட்டால் இரவு. இதில் நல்லது கெட்டது என்று எதுவும் இல்லை என்று பதிலளித்தார்.

தூ! மனிக்கதை!

கிராமத்துக்குப் போறோம், பாட்டியிடம் ஆசிர்வாதம் வாங்க.

நம்ம காதலுக்கு வீட்ல இருந்த எதிர்ப்பை ஒன்னுமில்லாம ஆக்கி, கரீன சிகனல் காட்டியது பாட்டிதான்.

''பாட்டி கட்டுப்பெட்டியா வெளியில தெரிஞ்சாலும் விடயஞானம் உள்ளவள். எது கேட்டாலும் பதில் வெச்சிருப்பா... அவ எதச் செஞ்சாலும் கேள்வி கேட்டு மூக்கை உடைச்சிக்கிடாதே!" என்று என் முன்னாள் காதலி, இந்நாள் புது மனைவி ரோஸியை எச்சரித்திருந்தேன்.

தேனிலவுக்கு டார்ஜிலிங், சிம்லா என்று திட்டம் போட்ட என் மனைவிக்கு இதனால் ஏமாற்றமும், கிராமத்திலுள்ள பாட்டி மீது வெறுப்பும் ஏற்பட்டது.

ஒரு வாரம் பாட்டியுடன் மகிழ்ச்சியாக இருந்துவிட்டு கடைசி நாளன்று அங்கிருந்து புறப்பட்டபோது, பாட்டியே எங்களுக்குத் திருஷ்டி சுற்றினாள்.

''ஊர்க்கண்ணு, உறவுக்கண்ணு" என்று அவள் முனுமுனுத்தது எங்களுக்குக் கேட்டது. இறுதியாக அவள் மூடியிருந்த தனது உள்ளங்கையில் எங்களை மூன்று முறை ''தூ, தூ"வென்று துப்பச் சொன்னபோது, "வாட்ஸ் திஸ் நான்சென்ஸ்?" என்று ரோஸி கேட்டாள்.

"மது, மாது, ஆது நம்மை நெருங்காம இருக்க, அந்த மூணு 'து'வையும் தூ! தூ!"ன்னு தூர விரட்டுறோம்!" என்றாள் பாட்டி. ரோஸி கன்னத்தில் அறைந்தாற்போல.

மூன்று முறை துப்புவதில் இத்தனை அர்த்தங்கள் பொதிந்திருக்கின்றன என்பதை இன்றுவரை அறிந்திராத நானும், அதைக் கேட்டு வியந்தேன்.

இரா.இரவிக்குமார்

எம்.ஜி.ஆர். ஆனந்தவிகடனுக்கு கட்டிய அபராதம்!

ஆனந்த விகடனில் படுதலம் சுகுமாரன் என்பவர் ஒரு கார்டூன் போட்டிருந்தார். அதில்:

மேடையில் சிலர் உட்கார்ந்திருப்பார்கள். கீழே இருக்கும் இரண்டு பேர் பேசிக்கொள்வார்கள். ஒருவர் இதில் MLA யார், மந்திரி யார் என்று கேட்பார். அதற்கு இன்னொருவர் "திருடன் மாதிரி இருப்பவர் MLA. கொள்ளைக்காரன் மாதிரி இருப்பவன் மந்திரி" என்று சொல்வார்.

அதற்கு அன்றைய ஆனந்த விகடன் ஆசிரியர் பாலசுப்ரமணியன் அவர்கள் மீது MGR வழக்கு தொடர்ந்தார். நீதிமன்ற தீர்ப்பு வருவதற்கு முன்பே அன்றைய சபாநாயகர் பி.எச்.பாண்டியன் அவரது வானளாவிய அதிகாரத்தைக்கொண்டு ஆனந்த விகடன் ஆசிரியருக்கு அபராதம் விதிக்கிறார்; அபராதம் 500 ரூபா கட்ட வேண்டும் அல்லது 15 நாட்கள் சட்டமன்ற சிறையில் இருக்க வேண்டும் என்பது. ஆனந்த விகடனுக்கு 500 ரூபா பெரிய விஷயம் இல்லை. இருந்தாலும், பத்திரிகைத்துறையின் பேச்சுரிமையைக் காக்க அவர் சிறையில் இருக்க சம்மதிக்கிறார்.

அதற்குப் பிறகு ஆசிரியர் இது குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கிறார். நீதிமன்றம் கருத்து சுதந்திரத்தை வலியுறுத்தி ஆனந்த விகடனுக்கு சார்பாக தீர்ப்பளித்து MGR ஆனந்த விகடனுக்கு அபராதம் கட்ட வேண்டும் என்று சொன்னது.

இதுதான் MGR ஆனந்த விகடனிடமும் நீதிமன்றத்திடமும் குட்டு வாங்கிய பின்னணி.

பல்லுக்கு வந்த சோதனை

சர்வாதிகார நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த பணக்காரன் அந்த நாட்டிலிருந்து முற்றிலும் சுதந்திரமாக செயல்படக்கூடிய பக்கத்து நாட்டிற்கு வந்தான். அந்த நாட்டின் தலைநகரில் இறங்கியவுடன் அங்கிருந்த சில நபர்களிடம் அவன் விசாரித்தான்.

''இங்கே நல்ல பல் மருத்துவர் இருக்கிறாரா, அவர் எங்கே இருக்கிறார்" என்று அங்கிருந்த நபர்களிடம் விசாரித்தார்.அங்கு இருந்தவர்களோ உண்மையிலேயே ஒரு சிறந்த பல் மருத்துவரின் விலாசத்தை அவருக்கு எழுதிக் கொடுத்து அனுப்பி வைத்தனர். கூடுதலாக இவர் மிகவும் கைராசிக்காரர், திறமைசாலி இவரிடம் சென்றால் எப்படிப்பட்ட பல் நோயும் குணமாகிவிடும் என்று சிபாரிசும் செய்து அனுப்பிவைத்தனர்.

ஒரு வழியாக அந்த விலாசத்தைக் கண்டுபிடித்து அந்த மருத்துவரிடம் இந்த பணக்காரன் சென்று சேர்ந்தான்.

மருத்துவர், ''ஐயா, நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று அந்த பணக்காரனிடம் கேட்டார். அந்த பணக்காரனும் வெகு யதார்த்தமாக, ''நான் பக்கத்து நாட்டிலிருந்துதான் வருகிறேன்" என்று கூறினான்.

இதைக் கேட்டு அந்த பல் மருத்துவர் வியந்து போனார். ''சரி இவ்வளவு தூரம் தான்டி இங்கு என்னை பார்க்க வந்திருக்கிறீர்களே! உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார்.

அதற்கு அந்த பணக்காரனும், ''எனக்கு நீண்டநாட்களாக ஒரு பல் வலித்துக்கொண்டே இருக்கிறது.அந்த பல்லை பிடுங்க வேண்டும்" என்று கூறினான்.

''ஏன் ஐயா? ஒரு பல்லை பிடுங்குவதற்காகவா இவ்வளவு தூரம் நாடு விட்டு நாடு கடந்து வந்திருக்கிறீர்கள். உங்கள் ஊரில் பல் மருத்துவர்கள் இல்லையா?" என்று கேட்டார்.

அந்தப் பணக்காரனும் அமைதியாக சொன்னான், ''எங்கள் நாட்டில் பல் மருத்துவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால் எங்கள் நாடு ஒரு சர்வாதிகாரியின் கீழ் இருக்கிறது. எங்கள் சர்வாதிகாரியின் உத்தரவு என்ன தெரியுமா? எதற்காகவும் யாரும் வாயை திறக்கக்கூடாது என்பதுதான் வாயைத் திறந்தால், தலையல்லவா காணாமல்போய்விடும். இந்த நிலையில் நான் எந்த பல் டாக்டரிடம் போய் என் வாயை திறந்து ஒரு பல்லை பிடுங்கி வருவது. அதற்காகத்தான் நாடு விட்டு நாடு தான்டி உங்களிடம் வந்திருக்கிறேன்" என்றான்

பல் டாக்டர் பேச்சிழந்து போனார்.

காரைக்கவி

சீத்துவக்கேடு 232

ஆச்சி உப்பிடிச் சொல்லவும் கேட்டுக்கொண்டு நின்ட அப்பு, முந்திப் பெட்டையள் கடற்கரையில மணல்வீடு கட்டி மட்டும் விளையாடேல்லை. அவளவை புத்துக்காலை வெளிக்கிட்டு ஓடுற நண்டுகளையும் துரத்திப் பிடிச்சு விளையாடினவை. உந்த விளையாட்டை சங்க இலக்கியங்கள் அவவனாட்டு எண்டு சொல்லுதுகள் எண்டார்.

உப்பிடித்தான் ஒருத்தி தன்ரை மச்சான் காரனோடை முதல்நாள் பின்னேரம் கடக்கரையில ஓடியாடி நண்டு பிடிச்சு விளையாடி இருக்கிறாள். அந்த விளையாட்டுச் சுகியிலை அவளின்ரை காப்புகள் கழண்டு விழுந்ததையும் உடுப்பு அவுண்டதையும் சிலம்பு உடைஞ்சு விழுந்ததையும் கவனிக்காமல் போய் வீட்டிலை நல்ல பேச்சு வாங்கினவளாம் எண்ட செய்தியை உலோச்சனார் நற்றிணையில பதிவு செய்திருக்கிறார் எண்டு அந்தப் பாட்டையும் சொன்னார்.

"பைந் தழை சிதைய, கோதை வாட,
நன்னர் மாலை, நெருநை, நின்னொடு
சில விளங்கு எல் வளை ஞெகிழ,
அலவன் ஆட்டுஞ்வோள் சிலம்பு ஞெமிர்ந்து எனவே

(நற்றிணை 363).

பேந்தும் உவளவை அப்ப உந்த நண்டுகளை துரத்தி விளையாடுறது மாதிரி வண்டுகளையும் துரத்தி விளையாடி இருக்கிறாளவை வம்பியள் எண்டார். அவளவை என்ன செய்வினம் எண்டால் வண்டுகளுக்குப் பின்னாலை ஓடுவாளவை. அப்படி ஓடேக்கை வண்டுகள் எந்தப் பூவிலை போய் கனக்க மொய்க்குதோ எண்டு பாத்த உடனை அவளவைக்கு அந்தப் பூக்களிலை நிறையத் தேன் இருக்கெண்ட விஷயம் விளங்குமாம்.

உடனை என்ன செய்வாளவை எண்டால் அந்த வண்டுகளைத் துரத்திப்போட்டு இவளவை அந்தத் தேனை எடுத்து நக்குவாளவையாம் பேந்து அந்தப் பூக்களைப் பிடுங்கி தலையிலை வைப்பாளவையாம்.

இப்பிடித்தான் ஒருநாள் ஒருத்தி தன்ரை சிநேகிதியோடை சேர்ந்து தொண்ணூற்றொன்பது வகையான வண்ணப் பூக்களைப் பிடுங்கி தலையிலை வைச்சு விளையாடினவளாம் எண்டு கபிலர் குறிஞ்சிப்பாட்டிலை சொல்லுறார் என்டார் அப்பு.

உப்பிடிச் சொன்ன அப்பு முந்திச் சின்னப் பெட்டையள் கிலிகிலியாடல் எண்டு ஒரு விளையாட்டை விளையாடினவையாம். உது வேறை ஒண்டும் இல்லை. கிலுகிலுப்பையைக் கையிலை வைச்சு சத்தம் போட ஆட்டி விளையாடுறதைத்தான் கிலிகிலியாடல் எண்டு சிறுபாணாற்றுப்படையிலை அதை பாடிய நத்தத்தனார் சொல்லுறார் என்டார்.

நோன்பகட் டுமணர் ஒழுகையொடு
வந்த
மகாஅர் அன்ன மந்தி மடவோர்
நகாஅர்
அன்ன நளிநீர்
முத்தம்
வாள்வாய் எருந்தின்
வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கும் நல்கூர்
நுசுப்பின்
உளரியல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளம்பூம் புதல்வரொடு கிலி கிலி யாடும்
தத்துநீர் வரைப்பிற் கொற்கை'

(சிறுபாணாற்றுப்படை -55)

முந்தி உப்பு விக்கிற ஆக்கள் உவையை உமணர்கள் என்டு சொல்லுறது உலை வண்டிலிலை உப்பை ஏத்தி ஊர் ஊராக் கொண்டு போய் விக்கிறவையாம். அப்பிடிப் போகேக்கை தங்கடை பெடி பெட்டையளையும் கூட்டிக்கொண்டு போவினமாம்.

அப்பிடிப் போகேக்கை அதுகள் தண்ணி விடாய் பசி எண்டு அழுது குழறி அரியண்டம் தராமை இருக்கவெண்டு போட்டு உந்த கிலுகிலுப்பையை அதுகளின்ரை கையிலை குடுப்பினமாம். உந்தக் கிலுகிலுப்பை என்னத்திலை செய்தது தெரியுமே முத்துகளைக் கிளிஞ்சல்களிலை போட்டுச் செய்ததாம். அதுகள் உந்தக் கிலுகிலுப்பையை ஆட்டுற பிலாதியிலை பசியை மறந்து போங்களாம்.

(இன்னும் ஆடுவம்)

இவ்வார இராசி பலன்கள்

வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

மேஷ ராசி அன்பர்களே!

மேஷம்

பணவரவுக்குக் குறைவில்லை. செலவுகள் போக ஓரளவு சேமிக்க முடியும். திருமண வயதில் உள்ள பிள்ளை அல்லது பெண்ணுக்கு வரன் தேடும் முயற்சியில் ஈடுபடலாம். நல்ல வரன் அமைவதற்கு வாய்ப்பு உள்ளது. கணவன் - மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு உடனே சரியாகிவிடும். அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சில சலுகைகளும் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாக உழைக்கவேண்டி வரும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். மற்றவர்களுடன் இணக்கமான சூழ்நிலை நிலவும். கணவரிடம் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருந்த வீட்டு சாதனம் ஒன்று இந்த வாரம் கிடைக்கக்கூடும்.

ரிஷப ராசி அன்பர்களே!

ரிஷபம்

செலவுகளைச் சமாளிக்கத் தேவையான அளவுக்கு பணம் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சிறிதளவு பாதித்தாலும் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருக்கும் வேலையில் இருந்து வேறு வேலைக்கு இப்போது முயற்சி செய்ய வேண்டாம். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் வேண்டாம். சக வியாபாரிகளின் பேச்சைக் கேட்டு புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையான பணம் கிடைக்கும் என்பதால் பிரச்சினை இருக்காது. அலுவலகத்தில் கூடுதல் பொறுப்புகளும் அதற்கேற்ற சலுகைகளும் கிடைக்கும்.

மிதுன ராசி அன்பர்களே!

மிதுனம்

பிள்ளைகளால் மதிப்பும் மரியாதையும் கூடும். அவர்கள் மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உள்ளது. வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சி உண்டாகும். உடன்பிறந்தவர்களின் வருகை மனதுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு அதிகரிக்கும் செலவுகளால் மனச்சஞ்சலம் ஏற்படும். வாரப் பிற்பகுதியில் ஓரளவுக்கு நிலைமை சரியாகும். கணவரின் மூலம் பணவரவுக்கான வாய்ப்பு உண்டாகும்.

கடக ராசி அன்பர்களே!

கட. நம்

நிதானித்து செயல்படவேண்டிய வாரம். ஆனால், விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைப் புரிந்துகொண்டு உறவு பாராட்டி வருவது ஆறுதலாக இருக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது. தடைப்பட்டு வந்த சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். அதிகாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்குக் கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். தேவைக்கும் அதிகமாகப் பணம் கிடைப்பதால் சிறு சேமிக்கவும் முடியும். சகோதரர்கள் உங்கள் தேவை அறிந்து செய்யும் உதவி மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

சிம்ம ராசி அன்பர்களே!

சிம்மம்

பணவரவுக்கு குறைவிருக்காது. குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். வேறு வேலைக்கு முயற்சி செய்வதைத் தவிர்க்கவும். சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் அதிகரிப்பதால் சிரமம் ஏற்படும். பிள்ளைகள் மூலம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். கணவரின் அன்பும் ஆதரவும் உற்சாகம் தரும்.

கன்னி ராசி அன்பர்களே!

கன்னி

பணவரவு ஓரளவுக்கு இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும் என்பதால் சிறிது கடன் வாங்கவும் நேரிடும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் மறைந்து மகிழ்ச்சி உண்டாகும். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஒருசிலருக்கு பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்கும் சாத்தியமுண்டு. வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். சக வியாபாரிகளுடன் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சிரமம் எதுவும் ஏற்படுவதற்கில்லை. புகுந்தவீட்டு உறவினர்களிடையே உங்கள் மீதான மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். உங்கள் தேவை அறிந்து கணவர் உதவி செய்வார்.

துலா ராசி அன்பர்களே!

துலாம்

மகிழ்ச்சி தரும் வாரம். வார முற்பகுதியில் இழுபறியாக இருந்த அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வழக்குகளில் இருந்துவந்த பிற்போக்கான நிலை மாறி, சாதகமான தீர்ப்பு கிடைக்கும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்வார்கள். சிலருக்கு அவர்கள் விரும்பியபடி இடமாறுதல் கிடைக்கும். வியாபாரத்தின் காரணமாக தொலைதூர பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பார்கள். சக வியாபாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும் என்றாலும் சலிப்படையாமல் செய்வீர்கள்.

விருச்சிக ராசி அன்பர்களே!

விருச்சிகம்

எதிலும் சிந்தித்து செயல்பட வேண்டிய வாரம். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. பால்ய நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆறுதலும் தருவதாக இருக்கும். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வேறு வேலைக்குச் செல்ல விரும்புபவர்கள் அதற்கான முயற்சிகளில் இப்போது ஈடுபடலாம். நல்ல வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். சிலர் வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகளால் சற்று சிரமப்பட வேண்டி இருக்கும். ஆனாலும், கடன் வாங்காமல் சமாளித்துவிட முடியும் என்பது ஆறுதலான விடயம். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

தனுசு ராசி அன்பர்களே!

தனுசு

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும் வாரம். தேவையான அளவுக்கு பணவரவு இருந்தாலும், சேமிக்க முடியாதபடி செலவுகளும் ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். வேலைகளில் கூடுதல் கவனம் செலுத்தவும். பதவி உயர்வை எதிர்பார்க்க முடியாது. வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். புற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பங்குதாரர்களும் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் சற்று பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம். பிறந்தவீட்டு உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். புகுந்த வீட்டினரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

மகர ராசி அன்பர்களே!

மகரம்

எதிர்பார்த்ததை விட பணவரவு அதிகமாக இருக்கும். மற்றவர்களுக்குக் கொடுத்து வராது என்று நினைத்த கடன்தொகை வந்து சேரும். சிலருக்கு வாழ்க்கைத்துணையால் ஆதாயம் பெறும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். முக்கியமான ஒரு பிரச்சினைக்கு உங்கள் அனுபவ அறிவு பயன்படுவதுடன், பாராட்டும் பெற்றுத் தரும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். குடும்ப நிர்வாகத்தைக் கவனிக்கும் பெண்களுக்கு மனதுக்கு உற்சாகம் தரும் சம்பவங்கள் நடைபெறும். சிலருக்கு பிள்ளைகளால் ஆதாயம் கிடைக்கும். கணவருடன் வாக்குவாதம் செய்யாமல் அனுசரணையாக நடந்துகொள்வது அவசியம்.

கும்ப ராசி அன்பர்களே!

கும்பம்

வருமானம் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக குழப்பங்கள் ஏற்படக்கூடும் என்பதால் சற்று கவனம் தேவைப்படும். எதிர்பார்த்த நல்ல செய்தி இந்த வாரம் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் வேண்டாம். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். கடன் வாங்கி முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். குடும்பத்தை வீட்டினரின் பாராமுகமான மனப்பான்மை மாறி, அனுசரணையாக நடந்து கொள்வது உங்களை உற்சாகப்படுத்தும்.

மீன ராசி அன்பர்களே!

மீனம்

பொருளாதார வகையில் நல்லபெயே காணப்படுகிறது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும், ஆடை, ஆபரண சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்களுடன் வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் உற்சாகமாக உங்கள் பணிகளைச் செய்வீர்கள். ஒருசிலருக்கு இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதனால் நன்மையே உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக மிகவும் உழைக்கவேண்டி இருக்கும். வங்கிக் கடனுதவி கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்ப நிர்வாகத்தில் சிறிது சிரமங்கள் ஏற்படும். ஆனாலும், உங்கள் சிரமம் அறிந்து கணவர் காட்டும் அன்பும் ஆதரவும் உங்களை சோர்ந்து போகாமல் செயல்படச் செய்யும்.

கண்டியிலே தும்பறையில்....

கொலாரா கொலரா
என்று
எல்லாரும் தவிதவிக்க...
கண்டியில்
மொதமொறையா
தொரவொருத்தே
செத்தே போனார்...

வார்டு னு
பெயருகொண்ட
சீர கண்ட பெரியதொர
கூவரது மரணத்தாலே
முழு நாடும்
நடுங்கியது...

அப்பாவி
சனங்களெல்லாம்
தெருத்தெருவா
மரிச்சிப்போக...
ஊந்த தொரயின்
மரணத்தாலே
சர்காரும் நடுங்கியது...

ஊந்தியாவில்
மண்டபத்தில்
புதப்புசுசா முகாம்
அமைச்சி

திருமலை
மன்னாருன்னு
சிலோனிலும்
முகாமமச்சி

வருகின்ற தொழிலாளி
எல்லாரையும்
தனிதனியா
பரிசோதிச்சி
நாள் கணக்க
தங்கவச்சி
கொலாரா பரிசோதனை
தீவிரமா கூருந்துவே....

கண்டியிலே
தும்பறையில்
தீவிரமா நோய்பரவ..
கொத்து கொத்தா
மக்களெல்லாம்
புதுக்காப்போல்
மாண்டனரே....

கோப்பிக்காடு
தோட்டமெல்லாம்
வெது வெதமா
வெதஞ்ஞி நிக்க
பாடுபட்டு நெலங்காத்த
மக்களெல்லாம்
வீழ்ந்தனரே...

தும்பறை அம்பலத்தில்
நாதியத்த
ஆளப்போல பூசாரி
முருகையா பாம்பாட்டம்
படித்திருக்க...

நோய்பரவும் என்பதால
யாரும் அவர
தீண்டவில்ல
பன்னாகத்தில்
குடியிருக்கும்
மாரியம்மனும்
பாக்கவில்ல...

கொலசாமி என்று
சொல்லி
நாள் கணக்கா
பூச செஞ்சி
அவளே கதியென்று
காலடியில் கெடந்த
மனுசே...

ஆடு வெட்டி
பொங்கவச்சி
அண்டாவுல
ஆக்கிவெச்சி
திருவிழா காலத்தில
நாயகனா வாழ்ந்த
ஆளு..

அவர் பொறந்த சேல
மண்ணு
ஊன்னும் சொல்லி
அழும்
அவரோட நெனப்புகள
ஆத்தங்கர சாமி
சொல்லும்..

வந்து சேர்ந்த சீமைமில
சீரழிஞ்சி நிக்கிறாரு
யாருமத்த சீவனப்போல்
அம்பலத்தில்
கெடக்குறாரு...

ரெண்டு நாளா
எழும்பவில்ல
ஆடி அசையும்
தெம்பும் இல்ல
நேத்துவர கேட்ட அந்த
சேட்டுமையும்
கேக்கவில்ல....

(சொல்ல மறந்த
கதை இன்னும்
சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்
ஊறம்பொடை

தமிழன் சிறுகதை

உறவுகள் இல்லம்

அந்த சிவந்த நேத்திரங்களுக்கு பின்னால் வீதியோரக் கடைகளில் கவரந்திழுத்த முகமூடியின் ஏமாற்றமும் அதற்குப் பின்னால் நிற்கும் ஏதாவதொரு கதாபாத்திரமும் காரண காரிய செயலும் ஒரு பாரிய வெற்றிடத்தை அந்த இல்லத்திற்கு ஏற்படுத்தியுள்ளது. அந்த இல்லத்தின் பெயர்ப்பலகை "உறவுகள் இல்லா இல்லம்" என்பதை எல்லா யதார்த்தமான பாங்கிலிருந்தும் சற்று வேறுபடுத்தியுள்ளது.

ஒவ்வொரு முறையும் காட்சி தரும் அந்த பெயர்ப்பலகையில் பொறிக்கப்பட்ட "உறவுகள் இல்லா இல்லம்" ஒரு பெரிய கேள்விக்குறியை ஏற்படுத்திவிடும். பல்வேறு திசைகளிலிருந்தும் வரும் அந்த நன்கொடைகளின் பின்னணி அந்த "உறவுகள் இல்லா இல்லம்" என்ற அடையாளப் பின்னணியை பொருள் விளக்க சுட்டிநிற்கிறதா என ஆராய உள்ளம் அலைபாய்கின்றது. அந்த 'நன்கொடை' இரு வேறு அந்தங்களைத்

பசறை சீ.ரா.

தாங்கி நிசப்தமாக இருப்பதற்கான காரணத்தின் கேள்விக்குப்ப பதில் ஒரு முடிவிலியாக முற்றுபெறாத வண்ணம் எதிரொலிக்கின்றது. அந்த இல்லத்தின் கூரைத்தகடுகளின் இடைநடுவே பொருத்தப்பட்டிருந்த மழை நீர் வழிந்தோடி மங்கலாக காட்சிதரும் அந்த கண்ணாடியில் ஊடுருவும் பிரகாசமான அந்த முழு திங்களின் ஒளி அந்த இல்லத்தையும் தன்னகத்தே ஒரு புள்ளியாக சேர்த்துக்கொண்டதை எண்ணி பூரிப்படைகின்றது அந்த ராக்காலம்.

விசேடமான பண்டிகை நாட்களில் அந்த இல்லத்தை நேடி வரும் அந்தக் கடிதங்களின் அடியும் முடியும் ஏதாவதொரு "உறவுகள் இல்லா இல்லம்" என்ற அழுத்தமான போக்கை வெளிப்படுத்தினாலும் அந்தக் கடிதங்களின் விடயப்பரப்பு ஓர் ஆழமான பந்தங்களை அற்புதமான செயல் வடிவங்களில் சுமந்து வந்ததை எண்ணி அந்தக் கடிதங்கள் பெருமிதங்கொள்கின்றன. புதுப்புது முகங்கள்

இன்னும் எத்தனை எத்தனையோ தற்காலிக அகவை கொண்டாட்டங்கள் அந்த "இல்லத்தில்" வெகு விமர்சையாக அந்த அகவை தின கொண்டாட்டங்களுக்கு மத்தியில் அவ்வினிய தருணங்களின் சாட்சியங்களாக சுவர்களுடன் ஒன்றிப்போயிருக்கும் இனிமை அது. வண்ணமய இலக்க மெழுகுதிரிகளின் தியாகச்சுடர் பரவிச்சென்று உருகிய அத்தருவாய் ஏதோ ஒரு விடயத்தை தெளிவாய் செல்லிவிட்டதுபோல தோன்றும். சாதாரணமாய் அல்லாமல் ஓர் அனுதாப வெளிப்பாட்டைத் தாங்கிநிற்கும் திரள் அந்த இல்லத்திற்கு இருப்பதாய் தோன்றவில்லை. எல்லாப்பொழுதுகளையும் உணர்வுகளையும் யதார்த்தமான இல்லமாக அந்த சர்வசாதாரண மெத்தன இயல்புக்கு திசைதிருப்ப பல பேராட்டங்கள் அந்த மன ஆயுத்தத்திற்கு தேவைப்படுகின்றது. உதயசூரிய பொழுதுக்கும் அஸ்தமன பொழுதுக்குமிடையிலும் அந்த நேர அட்டவனை அதன் கடமைகளை சரிவர சமமாக பொருந்தும் விதத்தில் படிக்கப்படுத்தியுள்ளது அந்த இல்லம். அந்த நால்வகை மகத்துவத்தின் ஓர் அதிசயம் அந்த கண்முன்னே கம்பீரமாய் நிற்கின்றது குருவாக.

நேர்த்தியான கல்விக்கூடம் ஒழுக்கக்கூடமும் கூட அந்த கல்விக்கூடத்தின் ஆசானும் கரும்பலகையும் கற்பித்த தர்ம போதனைகள் அறம், தர்மம், அன்பு எனும் சித்தாந்தங்கள் கடவுளின் மகிமையையும் மகத்துவத்தையும் கண்முன்னே காட்டிவிட்டது. எல்லோர் உள்ளத்திலும் அன்பு வடிவில் குடிகொண்டிருக்கின்றது அந்த தெய்வம். அந்த அன்பின் வெளிப்பாடுதான் உறவுகளாக சுற்றியிருக்கும் உள்ளங்களை நேசிக்கும் வெளிப்பாடாகும். அந்த இல்லத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் பலரையும் உறவுகளாக மனம் ஏற்றுக்கொள்கின்றது.

இனியும் அந்த இல்லம் " உறவுகள் இல்லா இல்லம்" என்பதை மறுதலித்து "உறவுகள் இல்லம்" என்பதை ஏற்றுக்கொள்கின்றது. அந்த கரங்கள் கரும்பலகையில் "உறவுகள் இல்லம்" என்பதை பொழிகின்றது ஆனந்தத்துடன். அந்த பெயர்ப்பலகையும் இல்லமும் "உறவுகள் இல்லம்" என்பதை அன்புடன் சுமந்து நிற்கின்றது பல உறவுகளுடன்.

தமிழன் தொடர்கதை

அகரன்

பாலா சங்குப்பிள்ளை

அத்தியாயம்

அந்த மாளிகையினுள்ளே வசதைக்கவிர கை மற்றும் கண்களைக் கட்டிய நிலையில் மணிகண்டன் மௌனமாக இருந்தான். சரியாக 10 நிமிடங்களின் பின் ஒவ்வொருவராக உள்ளே நுழைந்தார்கள். இப்போது அவனுடைய கண் கட்டை அவிழ்த்தார்கள். அவன் பக்கத்திலேயே இன்னொருவனும் கட்டப்பட்ட நிலையிலிருக்க, அவனுடைய கட்டையும் அவிழ்க்க அவன்.. பார்த்தின்..

பார்த்தின் அங்கே இருந்தவர்கள் ஒவ்வொருவரையும் பார்த்தான். கடைசியாக சுகுமாரைப் பார்க்க, அவன் பார்த்திபனைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

"என்ன பார்த்தின்.. கடைசியில இப்படி சிக்கிட்டியே.."

"ஐயோ.. எனக்கு எதுவும் தெரியாது.."

"யாரு உனக்கா..? நீ எப்படியெல்லாம் நாடகமாடினேன்னுற எல்லா விஷயத்தையும் மிகச் சிறப்பாக கண்டுபிடிச்சசர்சி. நான் கண்டுபிடிச்சது பாதி.. உன்னோடயே நிழல் மாதிரி இருந்தானே பாண்டியன் அவன் சொன்னது மீதி.. ரொம்ப நேரம் பேசி நேரத்தை வீணாக்க நான் விரும்பலை. சுருக்கமா சொல்லுறேன். வேலை மதிப்பில்லாத அந்த நீலக்கல்லுதான் இந்தக் கதையோட கதாநாயகன். குலசேகரனுக்குக் கல்லு கிடைச்சவுடனேயே நீ பகவான்கிட்ட சொல்லிட்டே. அவர் இதுல நேரடியா சம்பந்தப்படாம அவரோட ரொம்ப நெருக்கமான ஒருத்தர் மூலமா இந்த வியாபாரத்துல ஈடுபட்டதோட உனக்குக் கணிசமான ஒரு தொகை தாரதா சொல்லியிருக்காரு. நீயும் சந்தோஷப்பட்டே.. அதோட விஷயத்தை முடிச்சிருக்கலாம். ஆனா, வயை மூடிக்கிட்டு சும்மாயிருக்காம இந்த விஷயத்தை கலுலுக்கு சொந்தக்காரனான குலசேகரன் கிட்ட சொல்லிட்ட. உடனே அவன் இதை நல்ல விலைக்கு வித்துக் குடுக்க உதவி செஞ்சா பகவான் சொன்னதை விட மூணு மடங்கு பணம் தாரதா சொல்லிட்டான்.

நீ ரொம்ப புத்திசாலி.. பணத்துக்காக கட்சி மாறின. நீ ரொம்ப அருமையா ஒரு திட்டம் போட்டே. நுவரெலியா கடையில ஏதோ பொருள் வாங்கப்போன நீ மணிகண்டனைப் பார்த்து அசந்து போயிட்ட. ஏன்னா உன்னோட தற்காலிகமா வேலை செஞ்ச செந்தில்நாதன்னுறவனைப் போலவே மணிகண்டன் இருந்தான். குலசேகரனோட வியாபாரத்தை எப்படி முடிக்கிறதுன்னு தடுமாறிக்கிட்டிருந்த உனக்குப் பழம நழுவிப் பால்ல விழுந்த கதையா ஒண்ணும் தெரியாத மணிகண்டன் மாட்டினான்.

அவன் வெளிநாடு போற விஷயத்தை தெரிஞ்சிக்கிட்ட நீ உனக்கு தெரிஞ்ச ஜோசியக்காரன் ஒருத்தரை வச்சி மணிகண்டன்கிட்ட உடனடியா நீ வெளிநாடு போகசுட்டி உள்நாட்டுல பெரிய விபரீதம் நடக்கப்போறதா சொல்லிட்டே... அவன் இப்படியான விஷயத்தை நம்பக்கூடியவன். அதுனால ரொம்ப சீக்கிரமா அவன் பயண ஏற்பாடுகளை செஞ்சான். அப்போதுதான் நீ தங்கயானையை செந்தில்கிட்ட குடுத்தாதிரி படம பிடிச்சிக்கிட்டு அதை மணிகண்டன் கிட்ட குடுத்ததாகவும் அதை அவன் எங்கேயோ மறைச்சி வச்சிட்டு வெளிநாடு போயிட்டதாகவும் ரொம்ப அழகாக கதை சரிபண்ணினே. ஆரம்பத்துல பகவான் இதை நம்பினாலும் உன்னைக் கண்காணிக்க உனக்கே தெரியாமல் பாண்டியனோட சேர்த்து நாலைஞ்சு பேரை ஏற்பாடு செஞ்சாரு.. ஆனா நீ அதிபுத்திசாலி. அவங்க எதிரிலேயே மணிகண்டனோட காதலி பண்பரசியை மிரட்டுறதும் எச்சரிக்கை செய்யிற வேலையையும் ரொம்ப அழகாக அற்புதமா செஞ்சே.. குலசேகரனோட சேர்ந்து பேசி அந்த வைரத்தை வங்கிப் பெட்டகத்துல வச்சிட்டே..

மணிகண்டன் வெளிநாட்டுலயிருந்து வர்றதுக்கு முன்னால எப்படியாவது வைரத்தை குலசேகரனுக்கு வித்துக் கொடுத்துட்டு நீ வெளிநாட்டுக்கு ஓடிட திட்டம்போட்டே. ஆனா, உன் நேரம் அவ்வளவா நல்லா இல்லாததால அதை உன்னால உடனே செய்ய முடியலை. நீ இன்னொரு தவறு செஞ்சிட்டே.. வைரத்தை வங்கிப் பாதுகாப்புப் பெட்டகத்துல உன் பெயரிலயோ குலசேகரன் பெயரிலயோ வச்சா பிரச்சினை வந்திடும்னு நெனச்சி வேறொருத்தர் பேருல வச்சிட்டே.. அவருக்கு விலைமதிப்பில்லாத வைரம்தான் அதுன்னு தெரியாது.

ஆனா, மணிகண்டன் அதே வங்கியில வேலை செய்யிற சிவானந்தராவர் கிட்ட போய் அதை விசாரிக்கவே அந்த வங்கியில வேலை செஞ்சி கொழும்புக்கு பதவி உயர்வோட சென்ற சங்கர் கிட்ட சொல்லிட்டார்.

இதுல முக்கியமான விஷயம் என்னன்னா சங்கர் பெயர்லதான் அந்த பாதுகாப்புப் பெட்டகத்தோட ரகசிய இலக்கம் இருந்தது. பாதுகாப்புக்காக நீ அந்த வங்கியோட கீடெக்ல அதைக் குறிச்சி வச்சிட்டே...

சங்கர் பெரிய கோடீஸ்வரன். பகவனோட பக்தன். அதுனால பாதுகாப்புப் பெட்டகத்தை திறந்து பார்த்தா அதுக்குள்ளே அந்த தங்கயானை இருந்திச்சி. அதைத் திறந்து பார்த்தப்போ வைரம் ஒளி வீசியது. உடனே அதை எடுத்துக்கிட்டு சங்கர் வெளியே வரவே, இந்த விஷயத்தை எப்படியோ கேள்விப்பட்ட நீ சங்கரோட காருக்குள்ளே ஒளிஞ்சிருந்து அவரை பயமுறுத்தி தங்கயானையை எடுத்துக்கிட்டு கால்வயிருந்து கீழே குதிச்சிட்டே..

உடனே உன்னைக் கண்காணிச்சிக்கிட்டிருந்த பாண்டியன் கோவ்டி தங்கயானையோட உன்னை இங்கே கொண்டுவந்துட்டாங்க. உண்மையிலேயே நீ திறமையானவன். மூளைசாலி. குடுக்குற வேலைகளை கனக்கச்சிதமா செய்யிறவன். ஆனால், என்னதான் செய்யிறது.. உன்னை பரலோகத்துக்கு அனுப்ப சொல்லி பகவான் சொல்லிட்டாரே.. நீ மட்டும் போனால் பரவாயில்லை. உன்னோட சேர்த்து இவன் செந்தில்நாதனும் துணைக்கு வரப்போகிறான். என்ன முழிக்கிறே..?

அவன் மணிகண்டன் இவனை அவனோல் அனுப்பிட்டு பண்பரசியை மீட்க திட்டம் போட்டான். நாங்க அவனோட கதையையே முடிச்சிட்டோம்.

(தொடரும்)